
கல்கி
KALKI
11.1.1959
30
நயா
பைசா

பாருங்கள் —
அவர்களுக்கு இப்படி சாப்பாடு போட்டால் போதாது!

சரிதான், நீங்கள் நன்கு சமைத்தான் உணவு போடுகிறீர்கள். ஆனால் நாங்கள் கூறவிரும்புவது நீங்கள் போடும் உணவில் எல்லாவித போஷணைகளும் அடங்கியிருக்க வேண்டுமென்பதே.

ஆரோக்கியமாகவும், சக்தியுள்ளவர்களாகவும் இருப்பதற்கு நமது உணவில், விடமின்கள், மினரல்கள் புரோடீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு சத்து முதலிய அத்தனைப் போஷணைகள் இருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அவைகளில் கொழுப்புச் சத்துகூட முக்கியமானது. ஏனெனில் அது சக்தியை அளிக்கவும், ஆகாரத்தை ருசியுள்ளதாக்கவும் செய்கிறது. மேலும் விடமின்களை பயன்படுத்த தேகத்திற்கு உதவியாயிருக்கிறது.



வனஸ்பதி—தூய்மையான கொழுப்புச் சத்து!

நமது தினசரி உணவில் குறைந்தது 2 அவுன்ஸ் கொழுப்புச் சத்து சேர்ந்திருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள். இந்த அளவு கொழுப்புச்சத்து சுலபமாகவும் குறைந்த செலவிலும் கிடைக்க நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உணவுப் பொருள்களை வனஸ்பதியில் சமையல் செய்வதே.

வனஸ்பதி பரிசுத்தமான தாவர எண்ணெய். அது விஞ்ஞான முறைப்படி பக்குவம் செய்யப்படுவதால் சாதாரண எண்ணெய்களைக் காட்டிலும் சிறந்தது. ஒவ்வொரு அவுன்ஸ் வனஸ்பதியிலும் 700 இன்டர்நேஷனல் யூனிட் விடமின் "ஏ" சேர்க்கப்பட்டுள்ளது. விடமின் "ஏ", சருமத்தையும் கண்களையும் பாதுகாக்கவும் தேக ஆரோக்கியத்தை அதிகரிக்கவும் செய்கிறது.

வனஸ்பதி நல்லமானதும், சுத்தமானதுமான பாக்டரிகளில், விஞ்ஞான முறைப்படி சிறந்த ரீதியில் தயாரிக்கப்பட்டு, டப்பாக்களில் சீல் செய்யப்படுகிறது. அதனால் அதை வாங்கும்போது, அது மிக்க போஷாக்கு வாய்ந்ததென்றும் சுத்தமானதென்றும் நீங்கள் பூரணமாக நம்பலாம்.

வனஸ்பதி

இல்லாருக்கு வரப்பிரசாதம்!

தி வனஸ்பதி மான்யுபாக்சரேர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



எப்பொழுதும்

CASTROL

காஸ்ட்ரால்

என்று குறிப்பிட்டே கேளுங்கள்

எஞ்சின்-எணெய்களுள் தலைசிறந்தது

ஸி. ஸி. வேக்பீல்டு & கோ., லிட்.
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பம்பாய் - கல்கத்தா - சென்னை - புது டில்லி - பெங்களூர் - கொச்சின் - லக்னோ - கான்பூர் - நாக்பூர் - செகந்திராபாத்.

S. 43



மலர் 18 இதழ் 24 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | விளம்பி௵ மார்கழி 27

நாகபுரி காங்கிரஸ்

நாகபுரியில் காங்கிரஸ் கூடப்போகிறது. இந்தக் காங்கிரஸ் மகாநாடு முக்கியமான விஷயங்களைத் தீர்மானித்து, நாட்டுக்கு நலன் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமக்கு அந்த நம்பிக்கை இல்லை.

ஏனெனில், காங்கிரசிலுள்ள சுயநலக் குழாங்கள் இந்தவிதமான திருத்தங்களுக்கு இடம் தரமாட்டா. நாட்டுக்கு உழைக்கக் காங்கிரஸ் தோன்றிற்று. நாட்டுக்கு உழைக்கவே — அதற்காகச் சுயநலத்தைத் தியாகம் செய்வதிலேயே ஊக்கம் கொண்டவர்கள் காங்கிரஸில் சேர்ந்தார்கள். தற்போது இது தலைகீழாக மாறி விட்டது. சர்க்கார் தம் கையிலிருப்பதனால் என்ன சுய லாபம் சம்பாதிக்கலாம் என்பதே எல்லாக் காங்கிரஸ்காரர்களுடைய இருபத்துநாலு மணி நேர நினைவாகவும் கனவாகவும் போய் விட்டது.

இந்த மனப்பான்மையைத் திருத்தும் ஆற்றல் கொண்ட தலைவர்கள் தோன்றவில்லை. சிம்மாசனம் ஏறிய தலைவர்களுக்கும் சுயநலக் காங்கிரஸ்காரர்களின் விருப்பத்துக்கு மாறாக நடக்கும் தைரியம் இல்லை. குற்றம் குறைகளை மூடி ஆடம்பர கோஷங்கள் போட்டு மக்களை ஏமாற்றி வோட்டு வாங்குவதே காங்கிரஸின் வேலையாகிவிட்டது.

நாட்டின் பிரதமரைவிட, மக்கள் சபையிலுள்ள காங்கிரஸ் கட்சி மேற்றரம். மக்கள் சபை அங்கத்தினர்களைவிட மட்டம் காங்கிரஸ் அங்கத்தினர்களும் கமிட்டிகளும். இப்படியிருக்க நாகபுரியில் என்ன நடக்க முடியும்? 'எல்லாம் ரொம்ப சரி, இன்னும் வேகமாக எல்லாம் செய்ய வேண்டும். அதுதான் குறை' என்று தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்படும்.

உண்மையைச் சோதித்து நோய்க்கு மருந்து செய்வார் காங்கிரஸில் இல்லை. இருந்தாலும் மவுனம் சாதிப்பார்கள். அவர்கள் ஏதேனும் வாய் திறந்து பேசினாலும் கேட்பவர் இல்லை.

[illegible] சர்க்காரிடமிருந்து, அதிலும் பிரதமர் நேருவிடமிருந்து பதவியும் லாபமும் பெறலாம் என்கிற ஆசை காங்கிரஸ் கூட்டத்தில் விசுவரூபம் எடுத்திருக்கிறது. இந்த நிலையில் பிரதமர் காங்கிரஸ் கூட்டத்தில் என்ன புது யோசனை பெற முடியும்? 'ததாஸ்து' கோஷம் ஒன்றுதான் வானளாவக் கிளம்பும்.

சோஷலிசம் என்பது நாட்டில் வறுமையும் துயரமும் இல்லாமல் நிர்வாகம் நடத்தும் முறையாகும். தற்போது காங்கிரஸ்காரர்களுடைய சோஷலிசம் வெறும் அஸமஞ்சன் ராஜ்யமாக உருப்பெற்று வருகிறது. 'ஜமீன்தார்களை ஒழித்தோம்; மிராசுதார்களை ஒழித்துக் கொண்டிருக்கிறோம். நிம்மதியாக இருக்கிறவர்களை நிம்மதி இழக்கச் செய்கிறோம்' என்று குழந்தைகளை ஆற்றில் போட்டு, சந்தோஷப்பட்டுச் சிரித்த கேலிப் புத்திரனைப்போல், நடத்துவதே சோஷலிசம் என்று எண்ணுகிறார்கள். 'பெரிய பட்டணங்களின் தலையைக் கிள்ளுவோம்! அப்போது எல்லாரும் சமமாக வாழ்வோம்' என்று திட்டம் போடுகிறார்கள். பறிக்கப்பட்ட நிலங்களை என்ன செய்கிறார்கள்? ஜீவனம் இல்லாத சிறு குடியானவர்களுக்குக் கொடுத்துச் சின்னாபின்னம் செய்தாலும் வோட்டுப் பெட்டி நிறைக்கும் திட்டமாக அமையுமேயன்றி, வெள்ளாமை குறைந்து போகும் என்று விவசாயம் அறிந்தவர்கள் ஆட்சேபித்தார்கள். அப்படியானாலும் கூட்டுறவு

முறையில் விவசாயம் நடத்துவோம் என்கிறார்கள். பலாத்காரப் பிரயோகமே முறையாகக் கொண்ட 'கம்யூனிஸ்ட்' நாடுகளைத் தவிர்த்து உலகத்தில் வேறு எங்கேயாவது கிராமவாசிகள் கூட்டுறவு விவசாயம் நடத்துகிறார்களா? இல்லை. அதனால் என்ன? நம் நாட்டில் புதிதாகச் செய்வோம் என்கிறார்கள். தாசில்தார்களும் கலெக்டர்களும் நடத்தும் விவசாயத்தில் என்ன விளையப் போகிறது? கூட்டுறவு என்பது விவசாயத்தைப் பொருத்த மட்டில் வீண் பேச்சு. மிராசுதார்களுக்குப் பதில் தாசில்தார்களை வைத்து விவசாயம் நடத்தும் திட்டமாகத்தான் முடியும்! சென்னை ராஜ்யத்தில் சிறுகாடுகளைக் கிராமப் பஞ்சாயத்துகளின் நிர்வாகத்துக்குக் கொடுத்த கதையைப் பஞ்சாயத்து விவசாயத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் படிக்க வேண்டும்.

இதையெல்லாம் நாகபுரியில் பயமும், தாட்சண்யமும் இல்லாமல் யார் பேசப் போகிறார்கள்? யாராவது பேச முற்பட்டால் பிரதம மந்திரி உடனே எழுந்து நீண்ட பிரசங்கம்செய்து அடக்கிவிடுவார்.

சிறு சேமிப்புத் திட்டம்

சமீபத்தில் பெங்களூரில் பேசிய திட்டக் கமிஷன் உபதலைவர் திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி இரண்டு விஷயங்களைப் பற்றிப் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டார். முதலாவது, இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமானால், உள் நாட்டு நிதி வசதியை எல்லா வகையிலும் பெருக்க வேண்டும். இரண்டாவது, மக்களிடை சேமிப்பு உணர்ச்சியை வளர்த்து, சிறு சேமிப்பு மூலம் தேவைப்படும் நிதியைத் திரட்ட வேண்டும்.

சிறு சேமிப்புத் திட்டங்கள் சென்ற ஆண்டில் எதிர்பார்த்த அளவு வெற்றி யடையவில்லை என்பதற்குக் காரணங்கள் பல. மத்தியதர வகுப்பினர்கள் எனப்படும் மாதச் சம்பளக்காரர்கள், விலைவாசிகள் உயர்ந்து விட்டபடியால், சேமிப்பு செய்யமுடியாத நிலையிலிருப்பது ஒரு காரணம். கிராமப் பகுதிகளில் நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் விளைவாக, சாதாரணமாகச்சேமிப்பு செய்யக் கூடியவர்கள், வருமானக் குறைவால் சேமிப்பு செய்ய முடியாமலிருப்பது மற்றொரு காரணம். அதிகமான வருமானம் அடைந்த பகுதியினர்களாகிய ஆலைத் தொழிலாளிகளும் தோட்டத் தொழிலாளிகளும் விவசாயத் தொழிலாளிகளும் சேமிப்பு செய்யும் பழக்கமில்லாதவர்கள். அவர்களுக்குக் கிடைக்கும் அதிகப்படி வருமானம் செலவு செய்யப்பட்டே விரயமாகிறது. இது மேலும் ஒரு காரணம். எல்லாவற்றிலும் முக்கியமான மற்றொரு காரணம், விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதுதான்.

இந்த அடிப்படைச் சூழ்நிலை இப்போதும் அப்படியேதானிருக்கிறது. விசேஷமான மாறுதல் ஏதுமில்லை. இந் நிலையில், "நிதியை எப்படியும் பெருக்கியே ஆக வேண்டும்" என்ற ஆர்வத்தில் அதிகாரிகள் கிராமாந்தர மக்களையும், பள்ளி ஆசிரியர்களையும், சிறு பட்டாதார்களையும் அவர்களிடம் பணம் முடங்கிக் கிடக்கிறது என்ற எண்ணத்தில் கட்டாயப்படுத்தித் தான் சிறு சேமிப்புத் தொகை பெரும்பாலும் திரட்டமுடிந்தது. இதைப் பற்றிச் சென்ற சட்டசபையில் விவாதத்தின் போது, "ஊராருக்கு நிர்ப்பந்தம் இருக்கத்தான் செய்தது" என்ற தகவல் வெட்ட வெளிச்சமாகவே வெளியிடப்பட்டது. இதனால் மக்களுக்கு எவ்வித மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லத் தேவையில்லை. இம்மாதிரி இப்போதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெளிநாட்டுத் தமிழர்கள்

தமிழர்கள் பூர்விக சரித்திர காலத்தில் கடல் கடந்து சென்று பல நாடுகளில் நாகரிகம் பரப்பினார்கள்.

அவற்றின் சின்னங்களை இப்போதும் பார்த்து வியந்து மகிழ்கிறோம். நம் காலத்திலும் தமிழர்கள் மலேயா, இலங்கை, பர்மா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் சென்று உழைத்து, அந்த நாடுகளில் விவசாயத்தை நிலைபெறச் செய்து வந்திருக்கிறார்கள்.

இதற்கு நன்றி செலுத்துவதற்குப் பதில் பொறாமையும் பகையும் தமிழர்களின் பேரில் காட்டி வருகிறார்கள். இது கலியுக விசேஷம் போலும். இலங்கையிலும், மலேயாவிலும், பர்மாவிலுமிருந்து வரும் தமிழர்களின் துயரக் குரலைத் தாய் நாட்டுத் தமிழ் மக்கள் கேட்க வேண்டியதாக இருக்கிறது.

ஒரு காலத்தில சென்னை அரசாங்கம், நல்ல பலமான ராஜ்யமாக இருந்தது. அயல் நாட்டு அரசாங்கத்தினர் சென்னை அரசாங்கத்தின் அபிப்பிராயத்துக்கு மதிப்புத் தந்து வந்தார்கள். தற்போது, சென்னை அரசாங்கம் பூனையாய்க் கிடக்கிறது. துயரக் குரல் எல்லாம் தில்லிக்கு 'ரிலே' (Relay) செய்வதாக இருக்கிறது. அந்த 'அஞ்சல்' தில்லியிலுள்ள செவிடர்கள் காதில் ஏறாது. ஏறினாலும் நமது வெளிநாட்டுக் கொள்கைக்கு முரண்படும் என்று மௌனம் சாதிப்பார்கள்!

தெய்வ நம்பிக்கை வேண்டும்

ரஷ்யா விஞ்ஞான சாஸ்திரத்தில் மற்றொரு வெற்றி கண்டுவிட்டது. வான வெளியில் ஒரு ராக்கெட் பறக்கவிட்டு, அது சந்திர மண்டலத்தையும் கடந்துசென்று, சூரிய மண்டலத்தை நெருங்கி அதுவும் ஒரு கிரகத்தைப் போல் சூரியனைச் சுற்றி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதைக் கண்டு அமெரிக்க ஜனாதிபதி பாராட்டுகிறார்; பிரிட்டிஷ் பிரதம மந்திரி பாராட்டுகிறார்; இந்தியப் பிரதமர் வியக்கிறார். உலகில் எங்கு நோக்கினும் வியப்பும் பாராட்டுமாகவே இருக்கின்றன! பிரும்ம சிருஷ்டிக்குப் போட்டியாக மனித சிருஷ்டியும் செய்யக்கூடும் என்ற வகையில் விஞ்ஞான அறிவு வளர்ந்திருக்கிறது.

விஞ்ஞான ஆராய்ச்சியில் மனித குலம் எவ்வளவுக்கெவ்வளவு முன்னேறியிருக்கிறதோ, அந்த அளவுக்கு மனிதப் பண்பில் மனித குலம் தாழ்ந்து தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது!

உதாரணமாக, அணுகுண்டு விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக அணுகுண்டு என்னும் பயங்கரக் குண்டுகளைக் கண்டு பிடித்தார்கள். அதை ஜப்பான் நாட்டில் போட்டு அது எத்தனைய பயங்கரக் கொடுமைகளை இழைக்கக்கூடும் என்று கண்டார்கள். சிறிதளவு மனிதப் பண்பிருந்தால் அன்றே அந்த அணுகுண்டுகளைச் செய்வதை நிறுத்தியிருப்பார்கள். ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு, அதைவிட இன்னும் பயங்கரமான குண்டுகளைக் கண்டு பிடிக்கத்தான் தூண்டுகிறதே தவிர அதைத் தடுத்து நிறுத்தக் கூடிய பண்பைச் சிறிதும் வளர்க்கவில்லை.

அணுகுண்டைவிடப் பயங்கர ஜலஜ குண்டைக் கண்டுபிடித்து ஓயாமல் சோதனைகள் நிகழ்த்தி வருகிறார்கள். இந்தச் சோதனைகளினால் பரவும் விஷம் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் காற்றிலும் நீரிலும் தாவரங்களிலும் தங்கி எதிர்கால மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கும் என்று சந்தேகமறப் பல பிரபல விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆயினும் அந்தச் சோதனை நிறுத்தும் தார்மீகப் பண்பு வறண்டு கிடக்கிறது!

சென்ற நூற்றாண்டுகளில் தோன்றிய பௌதிக ஆராய்ச்சி, மனித உள்ளத்தில் நீண்ட நெடுங்காலமாக வேர் விட்டிருந்த தார்மீகப் பண்பை வேரைக் கெல்லி வெந்நீர் விட்டு விட்டது. இந்தத் தார்மீகப் பண்பைக் காத்து வந்த மத உணர்ச்சியை விஞ்ஞான ஆராய்ச்சி விரட்டி விட்டது.

தெய்வ பக்தி மனித உள்ளத்தை விட்டு அப்புறப்படுத்தப் பட்டதால், மனிதன் வெறும் சுயநலவாதியாகி விட்டான். அந்தச் சுயநலம் காரணமாகவே, உலகில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

ஆகவே, இன்னும் அழிந்து போகாமல் நாம் பிழைக்க வேண்டுமானால், மேலும் காலம் தாழ்த்தாமல், நமது தெய்வ நம்பிக்கையைப் புதுப்பிக்க வேண்டும். மாணவர்களுக்குத் தெய்வ நம்பிக்கையைப் புகட்ட வேண்டும் என்று பெங்களூரில் சென்ற டிசம்பர் மாதம் இறுதியில் ராஜாஜி வற்புறுத்தினார்.

நம்முடைய சுயநல உணர்ச்சிகள், நமது உயர்ந்த உணர்ச்சிகளை அடித்து விரட்டப் பார்க்கின்றன. ஆகவே, நம்மிடமிருந்து நம்மைக் காப்பாற்றித் தரும் உண்மையான போலீஸ்காரன் தெய்வ நம்பிக்கை தான் என்று ராஜாஜி அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

நமது முன்னோர்கள் நல்ல தீர்க்கதரிசனம் வாய்ந்தவர்கள் என்று மீண்டும் நிரூபணமாகி விட்டது. மக்கட் குலம் அடிக்கடி தன் தார்மீகப் பண்பை விட்டு, நழுவிக் கீழே சரிந்து விழப் பார்க்கும். அப்போதெல்லாம் ஜாக்கிரதையாக இருந்து தடுத்து நிறுத்தி வைப்பதற்கு என்று தர்ம ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். மகத்தான தியாகவாழ்வு நடத்தித் தெய்வ சிந்தனையிலும் மக்கட் நலனிலும் அக்கறை கொண்ட தென்னாட்டைச் சேர்ந்த நான்கு மடங்களின் தலைவர்கள் இவ்வருஷ ஆரம்பத்தில் மக்களுக்கு நமது பாரதப் பண்பாட்டை நினைவுறுத்தியிருக்கிறார்கள்.

சைவ, வைணவம் என்ற எத்தகைய பேதமுமின்றித் தென்னாட்டிலுள்ள மதுரை திருஞானசம்பந்தர் மடம், அஹோபில மடம், உடுப்பி பெஜவார் மடம், காஞ்சி காமகோடி பீடம் ஆகிய நான்கு ஆசார்ய புருஷர்களும் சேர்ந்து விடுத்துள்ள அறிக்கை நமது நிலைமை எவ்வளவு மோசமாகி விட்டது என்பதை எச்சரிக்கை செய்வதாக இருக்கிறது!

அத்துடன் எவ்வளவு மோசமானாலும், உய்ந்து போய், புனர்வாழ்வு பெற வழியிருக்கிறது என்பதை வற்புறுத்துவதாகவும் இருக்கிறது.

மகான்கள் தோன்றிய நாடு இது. மண்ணாசை, பொன்னாசை ஆகிய பல ஆசைகளுக்கு மேற்பட்டது மனிதப் பண்பு என்று பல்லாயிரம் ஆண்டுகளாக வற்புறுத்தி வந்த தேசம் இது. நம் காந்திமகான் தேச சுதந்திரத்தை விட, சிறந்தது உயர்ந்த மனிதப் பண்பே என்பதை வற்புறுத்தி வந்தார். மனிதப் பண்பை இழந்து விடுவதானால், சுதந்திரம் கிட்டுமாயின் அப்படிப்பட்ட சுதந்திரம் வேண்டாம் என்றார்!

அத்தகைய மகான் தோன்றிப் பண்படுத்திய பண்பாடு நம்முடையது. அந்தப் பண்பாட்டைக் காப்பாற்றுவது நமது மதாசாரங்கள்.

“தெய்வம் உண்டு என்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் என்ன



"வேண்டும்" என்று சிலர் சொல்லலாம். புத்தி பூர்வமாக ஒப்புக் கொண்ட தெய்வ நம்பிக்கை உள்ளத்தை உயர்த்தாது. மேனாட்டு விஞ்ஞானிகள் தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களா? இல்லை. அவர்களும் தெய்வம் உண்டு என்று ஒப்புக்கொள்கிறார்கள் புத்தி பூர்வமாக. ஆனால் ஆசார அனுஷ்டானம் இல்லாததால் உள்ளத்தில் தங்குவதில்லை. உள்ளத்தில் தங்காததால் மனிதப் பண்பு உயர்வதில்லை. மீண்டும் பழைய போக்கிலேயே போகிறார்கள்.

உள்ளத்தில் உறைந்து கடத்தையால், உயர்ந்த மனிதனாகப் பரிணமிக்கச் செய்வது அந்தந்த மதங்களில் ஏற்பட்டுள்ள ஆசார அனுஷ்டான முறைகளைக் கடைப் பிடிப்பதே. ஒவ்வொரு மதத்துக்கும் தனித்தனியே ஆசார அனுஷ்டானங்கள் இருக்கின்றன. யார் எந்த மதத்தில் பிறக்கிறார்களோ, அவர்கள் அந்த ஆசார விதிகளை அனுசரிக்க வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரணல்ல. காந்தி மகான் தமது பிரார்த்தனையில் எல்லா மதப்பிரார்த்தனைக் கீதங்களையும் சேர்த்துக் கொண்டார். நான்கு வெவ்வேறு ஆசார அனுஷ்டானங்களை வற்புறுத்தும் ஆசார்ய புருஷர்கள் சேர்ந்து கையெழுத்திட்டிருப்பதே உண்மை தெய்வ பக்திக்கு இவை முரணில்லை என்பதை விளக்கும்.

இந்து மதத்தைச் சேர்ந்த ஆசார்ய புருஷர்கள் விடுத்துள்ள அறிக்கை கிறிஸ்துவ மதத்தினர், முஸ்லிம் மதத்தினர் ஆகிய அனைவருக்கும் பொருத்தமாகவே விளங்குகிறது. (அதை இவ்விதழின் மற்றோர் இடத்தில் காணலாம்.)

இன்றைய ராக்கெட் யுகத்தில், அணுகுண்டு ஜலஜனகுண்டு யுகத்தில் மனித சரித்திரத்தில் என்றுமில்லாத முக்கியம் தெய்வ பக்தி அடைந்திருக்கிறது. பூத-பௌதிக ஆராய்ச்சிகள் வளர வளர, நமது பண்பாட்டைப் பேண வேண்டியதின் அவசியமும் வளர்ந்து வருகிறது.

பொங்கல் புது விருந்து

பொங்கல் திருநாள் என்றாலே புதுமை என்றுதான் தமிழர்களுக்குப் பொருள்.

வீடுகளுக்கு வெள்ளையடித்துப் புதுப்பிப்பார்கள். புத்தாடைகளை வாங்கி உடுத்திக் கொள்வார்கள். புதுப் பானை வாங்கிப் புது அடுப்பில் ஏற்றிப் புதுப்பால் வார்த்து, புத்தரிசியிட்டு, பொங்கல் செய்து ஆண்டவனுக்கு நிவேதனம் புரிந்து தாமும் சுற்றமும் சூழ இருந்து புது மகிழ்ச்சியுடன் உண்பார்கள். இப்படிப் பொங்கல் திருநாளில் எதிலும் புதுமையைக் காண விரும்பும் தமிழர்களுக்கு நாமும் புது விருந்து அளிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அடுத்த 'கல்கி' இதழ் பொங்கல் இதழாக வெளிவருகிறது. அந்தப் பொங்கல் இதழில் பல்வேறு புது அம்சங்களைச் சேர்த்து வாசக நேயர்களுக்குப் புது விருந்து படைக்கிறோம்.

இந்தியில் பிரபல கதை ஆசிரியரான சுதர்சனைக் கல்கி நேயர்கள் நன்கு அறிவார்கள். அவருடைய 'பாகுரவின் காதல்', 'இரு நண்பர்கள்', 'அருவிக்கரை ஆசிரமம்' முதலிய கதைகளைப் படித்துப் பெரிதும் ரஸித்த நேயர்கள், சுதர்சனின் மற்றொரு கதை வெளிவராதா என்று பல முறை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆவலை நிறைவு செய்யும் வகையில் வானத்தாமரை என்ற ரஸமான தொடர்கதை அடுத்த வாரக் 'கல்கி' இதழில் ஆரம்பமாகிறது.

கதாசிரியர் கவிதா நேயர்கள் அறிவார்கள். கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். பல நல்ல கதைகள் எழுதி வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றவர். அவர் 'திருச்சி உலக நாதன்' என்ற பெயரில் ஒரு சிறுவனின் சாகசச் செயல்களைச் சுவைபட எழுதியிருக்கிறார். இத்தொடரும் அதே இதழில் தான் ஆரம்பமாகிறது.

திரு த. கா. குமாரசாமி தமிழ்ச் சிறுகதை உலகில் நிலையான இடம் பெற்ற அரிய எழுத்தாளர். கருத்துச் செறிவு கொண்ட நடையைக் கையாளுவதில் திறமை பெற்றவர். அவர் எழுதும் கதை, தமிழ்க் கலைக் களஞ்சிய ஆசிரியரும் சிறந்த எழுத்தாளருமான திரு பெ. தூரன், ஸ்ரீமதி அநுத்தமா, ஸ்ரீமதி ரங்கநாயகி இவர்களுடைய கதைகளையும் தாங்கிக் கொண்டு வாசகர்களை மகிழ்விக்க வருகிறது கல்கி பொங்கல் இதழ்.


"மகிழ்வூட்டும் கதை விருந்தளித்தால் மட்டும் போதாது. சிந்தனைக்கு விருந்தாக அமையக் கூடிய விஷயம் உண்டா?" என்று நேயர்கள் கேட்கலாம்.

நிச்சயமாக உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் சோக்ரதர் என்ற ஞானி ஒருவர் இருந்தார். அவர் சிந்தனையில் புதுமை இருப்பதைக் கண்டு, அந்தக் காலத்துப் புதுமை விரும்பும் இளைஞர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். இதைக் கண்டு, 'இளைஞர்களைக் கெடுக்கிறார்' என்று அவர் மேல் குற்றம் சாட்டி விஷ பானம் அளித்துக் கொன்றார்கள். அவர் உயிர் பலியானாலும் அவர் சிந்தனைகள் இன்றும் புத்தொளியுடன் விளங்குகின்றன. மனித குலத்துக்கு அவை இன்றும் வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றன. அந்தச் சம்பாஷணைகளை அறிஞர் திரு க. சந்தானம் அவர்கள் தெளிந்த தமிழில் சோக்ரதர் சம்வாதங்கள் என்ற தலைப்பில் வழங்குகிறார்.


சோக்ரதருடன் நிகழ்ந்த வாதங்களும் பிரதிவாதங்களும் அறிவுக்கு விருந்தாக அமையப் போகின்றன.

இப்படிப் பல அம்சங்கள் கொண்டு திகழும் அடுத்த 'கல்கி' இதழ், நல்ல பொங்கல் புது விருந்தாகப் பொங்கல் தினத்தன்றே வெளிவரப் போகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகபுரி சர்க்கஸ் !



காங்கிரஸில் பல கட்சிகள் தொழில்படுகின்றன என்று நேருஜியே ஒப்புக் கொள்கிறார்.



அயூப்கான், ஜின்னாவாக மாற முயல்வதாகப் பாகிஸ்தான் செய்தி கூறுகிறது.



செல்லாத நாணயம்
சாமா
JAN 2
கூத்தநூர்
"திருமணத்துக்காக நீங்க மதுரை போகிறீர்களா?"
"இல்லே சார்! பழைய இரண்டணா ஒன்று இருக்கு. அதைச் சர்க்கார் பாங்கியில் மாற்றிக் கொண்டு வரலாம் என்று நான் போகிறேன்!"
"என்ன வித்வான் சார்! முகவாட்டமா இருக்கிறீர்களே?"
"ஆமாம் சார்! பழைய இரண்டணா செல்லாது என்று இப்ப ஆரம்பித்திருக்கிறது! இனி மேல் அதுமாதிரி பழைய வித்வான்களும் செல்ல மாட்டார்கள் என்று உத்தரவு போட்டால் என்ன பண்ணறது?"
"காலம் போகிற போக்கைப் பார்த்தா இனிமேல் காணமாக இருந்தால் செல்லாதுன்னு தெரிகிறது, சார்!"
"ஓஹோ! அந்த இரண்டணாவைப் பற்றிச் சொல்கிறீர்களா?"
"மஞ்சள் இரண்டணாவை டெலிபோன் பூத்தில் போட்டுவிட்டு என்னோடு நீங்கள் பேசுகிறீர்களா?"
"ஆமாம்! அது எப்படி உமக்குத் தெரிந்தது?"
"உங்கள் குரல் கடுங்குரலாயிருந்து நன்றாகத் தெரிகிறதே!"

சென்னை: பாரகன், கிரௌன், சயானி

மற்றும் தென்னாடெங்கும்



தென்னாட்டில் அறத்தைப் பாதுகாக்கும் காவலர்களாக ஏற்பட்டுள்ள நான்கு மடங்களின் தலைவர்களான மதுரை திருஞானசம்பந்த மடாதிபதியும், உடுப்பி பெஜாவர் மடாதிபதியும், அஹோபில மடத்து ஜீயர் ஸ்வாமியும் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளும் தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள அரிய அறிக்கையைக் கல்கி நேயர்களுக்கு வழங்குகிறோம். —ஆசிரியர்

நமது பண்பாட்டைப் பேணுவோம்

நாம் வசிக்கும் பாரத தேசம் புண்ணிய பூமி. மனித சமூகம் முதலில் வளர்ச்சி கண்டு, நாகரிகம் அடைந்தது இந் நாட்டில்தான். நாம் இன்று வாழ்வது சுதந்திர பாரதத்தில். எல்லா வகைகளிலும் அதைச் சிறப்பிப்பது மக்களாகிய நமது கடமை. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்பது ஆன்றோர் வாக்கு. தாய்நாடு ஏற்றம் கண்டால்தான் நமக்கும் பெருமையுண்டு; நல்வாழ்வு கிட்டும். எனவே, நாட்டுப் பற்று என்று சொல்லப்படும் தேச பக்தி நமது உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்க வேண்டும்.



திருப்பெருந் திரு ஞானசம்பந்த தேசிகப் பரமாசார்ய அடிகள்

தேசபக்தி என்றால் என்ன? அது இந்த நாட்டு மண்ணின் பால் உள்ள பற்றுதல் மட்டுமல்ல. பாரதத்தின் ஐக்கிய ஆட்சியிலும் சுதந்திர அந்தஸ்திலும் நமக்குள்ள நம்பிக்கை மட்டும் தேசபக்தியாகி விடாது. தேசத்தைத் தாயெனக் கருதி வழிபடுவதும் போதாது. ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. அதுதான் தேச-ஆசாரம் எனப்படுவது. நம்நாட்டுப் பெரியோர்கள் அதைப் பாரதப் பண்பாடு என்று அழைக்கிறார்கள். அது சாதாரண இலக்கண வரம்புக்கு உட்பட இயலாத ஒரு தன்மை. ஆனால், அதை இந்த நாட்டிலுள்ள நாம் எல்லோரும் சுலபமாக உணர முடிகின்றது. ஆண்டவனின் அருளால் ஆழமாக வேரூன்றி ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் நமது மூதாதையர் எவ்வளவோ கஷ்டப்பட்டு உருவாக்கித் தந்துள்ள அறநெறிதான் பாரதப் பண்பாடு. அது காலத்தால் புடம் போடப்பெற்ற பெருந்தனம்; தூய்மை நிறைந்த வாழ்க்கை வழி. அதைப் பேணிப் போற்றி வளர்ப்பது தான் உண்மையான தேசபக்தி. தேச—ஆசாரம் என்பதனிடம் பற்றுதல் ஏற்பட்டு, வாழ்க்கையை நடத்துவது தான் சமூகம் பூராவுக்கும் சிறப்பைத் தரும்.

பாரதப் பண்பாடு என்பதன் அஸ்திவாரம் தெய்வ பக்தியும் அதனுடன் இணைபிரியாமல் இருக்கும் சமய வழிபாடும். இவைதான் ஆணிவேர், பக்கவேர் போன்றவை. அறநெறிதான் அவற்றுக்கு அளிக்கும் நல்வளர்ப்பு. சமுதாயம் என்ற மரம் இந்தச் செய்கேர்த்தியின் விளைவு. அது பவித

மாறும் விதத்தைப் பொறுத்துள்ளன நமது வாழ்வும் தாழ்வும். இது எல்லா மதங்களுக்குமே பொருந்தும். ஆகையால்தான் நமது முறைகளுக்குத் தனிப் பெயரிடாமல், 'தருமம்' என்றே அமைத்தார்கள். இந்த தருமம் அழிவற்றது; சாசுவதமானது. இதன் அடிப்படைகள் நிரந்தரமானவை. அவற்றை நடத்தி வைக்கும் முறைகள் மட்டும் காலநிலைக்கேற்பச் சிறிது சிறிது மாறுபட்டிருக்கலாம். மாறுபாடுகளை வேறுபாடுகள் என்று கருதிவிடலாகாது.



[illegible] பீடத்தில் ஸ்ரீ[illegible]

நமது இந்து மதத்தைப் போன்ற கருணையுள்ள சமயம் வேறு எதுவுமில்லை. பல பெயர்களால் நாம் அறியும் ஆண்டவன் ஒருவனே. இந்த ஆண்டவனை அடையப் பெரியோர்களால் உபதேசிக்கப்பட்ட வெவ்வேறு மார்க்கங்களைப் பின்பற்றுகிற எல்லோரும் பரஸ்பர சகிப்புத்தன்மையோடும், அன்போடும், பொதுவான அம்சங்களில், அன்யோன்யமாக ஒத்துழைக்க வேண்டும். இஷ்ட தெய்வத்தைத் தூய்மையுடன் வழிபட வேண்டும் என்பதுதான் முக்கியமானது. அகத்தூய்மை, புறத்தூய்மை ஆகிய இரண்டுமே அவசியம். வீட்டில் வழிபடலாம். ஆலயத்துக்கும் தவறாது சென்று வணங்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தனிமையில் தியானம் செய்ய வேண்டும். கோயிலில் அல்லது வேறு பொது இடத்தில் வாரந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் சேர்ந்து பஜனை செய்ய வேண்டும். அவரவருக்குரிய அனுஷ்டானங்களை விடாது செய்ய வேண்டும். பெரியவர்களிடம் மரியாதையுடனும், சிறியவர்களிடம் அன்புடனும், எல்லோரிடமும் கருணையுடனும் இடைவிடாது நடந்து கொள்வதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். தெய்வத்திடம் நம்பிக்கை வைத்தால் எல்லாம் சரியாகத்தான் நடக்கும்.

தெய்வ வழிபாட்டுடன் இரண்டறக் கலந்து நிற்பது அறவழி. தனிப்பட்டவன் உயர்நிலை அடைவதும், சமூகம் ஏற்றம் காண்பதும் குண விசேஷங்களின் காரணமாகத்தான். முன்னோரது தவப்பயனாக ஓரளவு குணங்கள் தாமாகவே படிகின்றன. ஆனால், முறையான படிப்பு, சீரான கட்டு, வீட்டிலே ஒழுங்கு முறை, பெரியவர்களுடைய சேர்க்கை ஆகியவற்றின் மூலம் குணங்களை விருத்தி செய்து கொள்ள முடியும். மனித வாழ்க்கை ஒரு பெரும் பாக்கியம். அதை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தெய்வ வழிபாடு துணை புரிகிறது. நமது உள்ளத்தில் ஆண்டவன் உறைகின்றான் என்ற மெய்யுணர்வு இருந்தால், மனதாரத் தவறு இழைக்கத் தயங்குவோம். ஒவ்வொரு ஜீவராசியிலும் அவன் இருக்கிறான் என்ற நினைப்பு அகலாதிருந்தால் நாம் கருணைக் கட-



உடுப்பி ஸ்ரீ பேஜாவர் மடாதிபதி [illegible]

லாக வாழ்வோம். எல்லாவற்றையும் அன்பு ஆட்கொள்ளச் செய்வது அந்த நிலையில் சுலபமாக இருக்கும். அசையாப் பொருட்களிலும் பகவான் இருக்கிறார் என்ற எண்ணம், சூழ்நிலையைக் கெடுக்கும் எதையும் நாம் நினைக்கக்கூடாது. செய்யக் கூடாது. சொல்லக்கூடாது என்ற எச்சரிக்கையாக அமையும். தன்னுயிர் போலத்தான் மன்னுயிர் என்ற உணர்ச்சி ஓங்கினால்தான் செயலாற்ற முடியும். ஆகையால்தான் தெய்வ பக்தியும் தெய்வ வழிபாடும் அடிப்படைத்தேவைகள் என்று கருதப்படுகின்றன.

ஆலய வழிபாட்டைப் போலவே அற வாழ்வும் முக்கியமானது. வேதங்கள், உபநிஷத்துக்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆழ்வார் நாயன்மார் பாடல்கள், திருக்குறள், உயர்ந்த சரித்திரங்கள், பெரியவர்களுடைய வாழ்க்கை அநுபவங்கள் ஆகிய எல்லாமே இதைத்தான் சொல்கின்றன. தனி நபர் மட்டுமின்றி, சமூகமும் இணக்கமாக முன்னேறுவதற்கு அற வாழ்வுதான் துணைபுரியும். தெய்வபலமின்றி அறம் தனியாக இயங்குவது சாத்தியமல்ல. ஆகையால்தான் நாம் எதை யெல்லாம் செய்ய வேண்டும், எவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதைப் பெரியவர்கள் தெளிந்தறிந்து நமக்குச் சொல்லிப்போயிருக்கிறார்கள். அவற்றின்படி நடந்தால் எல்லோருக்குமே நன்மையுண்டு.



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஒவ்வொரு மாணவனும் படிக்கும் வயதில் வேறு எந்த ஆசையிலும் மனத்தைச் சிதறவிடக்கூடாது. முழு மூச்சுடன் படித்து, ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சிறு வயதில் படிப்பதுதான் நிலைக்கும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பது முதுரை. உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். அன்புடன் வாழ வேண்டும். நல்ல பழக்கமும், நல்ல படிப்பும் அஸ்திவாரமாக அமையும்படி செய்வது பெற்றோர், உபாத்தியாயர்கள், சமூகத் தலைவர்கள், ஆட்சியாளர் ஆகிய எல்லோருக்குமே உள்ள கூட்டுப் பொறுப்பு. படிக்கும் பொழுதே நல்லொழுக்கம், நிடசித்தம், உடல் வலிமை ஆகிய மூன்றும் படியச் செய்வதுதான் கல்வி. மற்றவைமட்டமானவைதான். எனவே, கல்விக்குத் திட்டமிடுகிறவர்களுக்கு விசேஷப் பொறுப்பு உண்டு.

கட்டுத்திட்டம் இருப்பவன்தான் முன்னுக்கு வரக்கூடியவன். திடீரென அதைச் சம்பாதித்துக் கொள்வது சிரமம். ஆரம்பத்திலிருந்தே அநுபவமாக அமைந்து வரவேண்டும். புலனடக்கி, கட்டுத் திட்டமாக வாழ்ந்து, வஞ்சனையின்றி உழைத்தவர்கள்தாம் உயர்நிலையை அடைய முடியும். இது உலக சரித்திரம் கூறும் உண்மை; அநுபவ பூர்வமாகப் பெரியவர்களெல்லாம் தெளிந்தறிந்த விஷயம். எனவே, கட்டுப்பாடு வளரக்கூடிய விதத்தில் கல்வியை ஒழுங்கு செய்து வளர்ப்பது, நம் நாட்டின் எதிர்கால க்ஷேமத்துக்கு மிக மிக அவசியம்.

நெறியல்லா நெறிதன்னை
　நெறியாக நினைவேனை
சிறுநெறிகள் சேராமே
　திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத
　கூத்தன்றன் கூத்தையெனக்(கு)
அறியும்வண்ணம் அருளியவாறு
　ஆர்பெறுவார் அச்சோவே! -திருவாசகம்

வீட்டுக்கும் கைத்தொழிலுக்கும்

சேவை செய்கின்றன....



பிரபாத் பிரஷர் குக்கிங் ஸ்டவ்கள் வீட்டில் மனைவியின் சமையல் வேலையை எளிதாக்குகின்றன. பிரபாத் லாந்தர்கள் மின்சாரமில்லாத வீடுகளைப் பிரகாசிக்கச் செய்கின்றன. பெரியதொழிற்சாலை, சிறியது ஆகிய இரண்டுக்கும் பிரபாத் புளோ லாம்புகள் இன்றியமையாத தேவையாக இருக்கின்றன. உண்மையில் "பிரபாத் பிராடக்ட்ஸ்" என்ற சொற்றொடர் வீட்டிலும் கைத்தொழிலிலும் பிர-பலமாக விளங்கி வருகிறது





இந்தியாவில் முதன்மையானவை - இன்றும் முதல்தரமானவை

பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்ஸ்) பிராடக்ட்ஸ்
கம்பெனி பிரைவேட் லிமிடெட்

ஜோபின் சேம்பர்ஸ், பார்ஸி பஜார் தெரு, போர்ட், பம்பாய்-1

K. S. K.

சென்னையில் இசைவெள்ளம்

சாவி

சென்ற வருடத்தைக் காட்டிலும், கடப்பு வருடத்திய இசைவிழாக்கள் பிரமாதம் என்று ரசிகப் பெருமக்கள் புகழ்ந்து கொண்டாடும் வகையில் ஒவ்வொரு வருடமும் எல்லா அம்சங்களிலும் வளர்பிறைபோல் அபிவிருத்தியடைந்து கொண்டே வரும் இசைக் கலை இந்த சீஸனிலும் சென்ற சீஸனைவிடச் சிறப்புற்றுப் பிரகாசித்தது. விழாக்களெல்லாம் மிகுந்த உற்சாகத்துடனும் கோலாகலத்துடனும் ஆரம்பமாயின. பொதுமக்களின் பேராதரவையும், ரசிகமணிகளின் உற்சாகத்தையும், வித்வான்களின் ஆற்றலையும் ஒருங்கே வைக்குவிப்பது போல் விழாக்களை அறிஞர்களும் அமைச்சர்களும் துவக்கி வைத்தனர். கலை வளர்ச்சிக்கு உதவும்படியான முறையில் சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதியும், அமைச்சர் திரு பக்தவத்ஸலமும், ஸ்ரீமதி ஏ. எஸ். பி. அய்யரும் சொற்பொழிவாற்றிப் பல்வேறு சங்கங்களின் விழாக்களைத் துவக்கி வைத்தனர். "பாட்டின் திறத்தாலே உலகைப் பாலித்திட வேண்டும்" என்ற பாரதியாரின் வாக்கியத்தைக் குறிக்கோளாகக் கொண்டே விழாத் தலைவர்களின் பேருரைகளும் அமைந்திருந்தன. வித்வத்சபையின் இவ்வருடத்திய விழாத் தலைவர் திரு ஜி. என். பாலசுப்பிரமணியம் கர்நாடக சங்கீதமும் ஹிந்துஸ்தானி சங்கீதமும் ஒன்றுக்கொன்று இணைந்து பாரதிய இசையை எவ்வாறு வளப்படுத்த முடியுமென்பதை எடுத்துரைத்தார். தமிழிசை விழாவைத் தலைவர் திருப்பெருந்திரு ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய அடிகள் "பண்" இசைகளைப் பற்றியும், அவற்றின் வளங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார். பாரத இசைச் செல்வத்துக்கு இவையனைத்தும் ஒவ்வொரு ஒளி. வைரத்தில் பல்வேறு வர்ண ஒளிகள் ஒவ்வொரு கோணத்தில் இருந்தும் ஜொலிப்பதுபோல் பிரகாசிக்கின்றன.

இவ்வாறு வளப்படுத்தப்பட்ட இசைச் செல்வத்தை, தமிழ்ப்பாட்டாகவும், தெலுங்குப் பாட்டாகவும், ஸம்ஸ்கிருத கீர்த்தனைகளாகவும், பாசுரமாகவும், பாடலாகவும், தில்லானாவாகவும், ராகமாகவும், ஸ்வரங்களாகவும் நூற்றுக்கணக்கான வித்வான்கள் வாரி வழங்கினார்கள். முன்னணியில் நிலைத்து நின்று சங்கீத சிம்மங்கள் என்ற முதிர்ந்த வித்வான்கள் ஒருபுறமிருக்க, இசைக்கலையின் வருங்காலச் செல்வங்கள் என்று மதிக்கத் தகுந்த பல இளம் வித்வான்களும் அமோகமாக வழங்கினார்கள். இளம் பாடகர்களைப் பற்றித் தனியாகப் பிரஸ்தாபித்து இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் இவ்வருடத்திய விழாத் தலைவர் வித்வான் திரு டி. செளடய்யா விரிவாகப் பேசினார். முன்வரிசையிலுள்ள சீனியர் வித்வான்கள் இளம் வித்வான்களுக்கு வாய்ப்பளிக்க முன்வர வேண்டுமென்றும், அவர்களை எல்லாவிதத்திலும் முன்னுக்குக் கொண்டுவர உதவவேண்டுமென்றும், இசை வளர்ச்சி தடையின்றி அபிவிருத்தியடைய வேண்டுமானால் இளம் பாடகர்களுக்கு உற்சாகம் அளிப்பதன்மூலமே இது சாத்தியமாகும் என்றும் உணர்ச்சியுடன் பேசியது குறிப்பிடத்

தமிழிசைச் சங்கத்தின் பதினேழாவது இசைவிழா சிறப்பாக நடைபெற்றது.





வித்வத்சபை சங்கீத விழாவைக் கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்கள் துவக்கி வைத்தார். சங்கீத மகாநாட்டுக்குத் தலைமை வகித்த இவ்வருஷ சங்கீத கலாநிதி திரு ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்களையும், நீதிபதி அநிபர் திரு கே. சீனிவாசன் அவர்களையும், வித்வத் சபையின் காரியதரிசி திரு சௌந்தரராஜன் வாழ்த்துச் செய்திகள் படிப்பதையும், விழாவுக்கு விஜயம் செய்த பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

தக்கது. அவர் தலைவர் என்ற முறையில் பேச்சுடன் மட்டும் நின்றுவிட்டார் என்று எண்ண வேண்டாம். இளம் வித்வான்களுக்குத் தானே பக்கவாத்தியம் வாசிக்கவும் தயார் என்றும் அவ்வாறு செய்வதில் தாம் பெருமைப் படுவதாகவும்கூடச் சொல்லிக் கொண்டார். இந்த சீஸனில் நடந்த ஒரு கச்சேரிக்குப் பக்கவாத்தியம் வாசித்தும் தாம் சொல்லியதைச் செயலிலும் காட்டினார். இளம் பாடகர்களுக்கும் வித்வான்களுக்கும் திரு சௌடய்யாவின் உதாரணம் மிகவும் உற்சாகம் அளிக்க வல்லது. இதர சீனியர்களும்கூட அவர் கூறிய கருத்துக்களை ஆமோதிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இளம் வித்வான்களை ஆதரிப்பதிலும், புதுப்புது வித்வான்களை அறிமுகப்படுத்தி வைப்பதிலும் ஆரம்பத்திலிருந்தே ஊக்கம் காட்டி வந்துள்ள சங்கீத வித்வத் சபை இவ் வருஷத்திலும் அப் பணியைத் தொடர்ந்து செய்தது. விழாவின் இரண்டாவது நாளிலிருந்து பதினொரு நாட்கள் காலைக்கு இரண்டு கச்சேரிகள் வீதம் இருபத்திரண்டு வித்வான்கள் இசை மழை பொழிந்தனர். ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் கச்சேரிகள் செய்தனர். வாய்ப்பாட்டு மட்டுமின்றி வீணைக் கச்சேரி இரண்டும் புல்லாங்குழல் கச்சேரி ஒன்றும் நடந்தன.

வழக்கம்போல் கச்சேரிகள் இரண்டு பகுதியாகவே அமைக்கப்பட்டிருந்தன. பகல் இரண்டரை மணிக் கச்சேரிகள் ஒரு மணி அவகாசம் கொண்டவை. எல்லா வகையிலும் இளம் வித்துவான்கள் என்ற லட்சணத்துக்குட்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தன இந்நிகழ்ச்சிகள். உருப்படிகளைச் சுத்தமாகப் பாடும் அப்பியாசமும் சிறிது ராக ஆலாபனையும் நான்கு ஆவர்த்தனங்களாவது ஸ்வரம் பாடும் திறமையும் இருந்துவிட்டால் இந்த நிகழ்ச்சிகளில் இடம் கிடைக்கக் கூடும் என்று எண்ணும்படி இருந்தது கச்சேரிகளின் அமைப்பு. அதைத் தொடர்ந்து நடந்த மூன்றரை மணிக் கச்சேரிகள் ஒன்றரை மணி அவகாசமுடையவை. ஜூனியர்களில் சீனியர்களுக்கென ஏற்பட்டவை இந்தக் கச்சேரிகள். பல விஸ்தியாசங்களுக்கும் ராகப் பிரஸ்தாரங்களுக்கும் இங்கே வாய்ப்புக்கள் இருந்தன. வித்வான்களின் பாகுபாடும் இந்த மாறுபாட்டை அனுசரித்தே இருந்தன.

இவ்வருஷக் கச்சேரிகளின் வரிசை ஸ்ரீமதி மீரு கிருஷ்ணனின் வீணாகானத்துடன் ஆரம்பித்தது. சம்பிரதாயப்படி ஒரு வர்ணத்துடன் ஆரம்பித்து, கரஹரப்பிரியா ராக ஆலாபனம் செய்தபோது கச்சேரிக்குக் களை ஏற்பட்டது. "ராம நீ சமான" என்ற கீர்த்தனை அவருடைய கச்சேரியில் குறிப்பிடத் தக்கது. பஞ்சராக தானமும் விருவிருப்புடன் அமைந்திருந்தது. சாதகபலத்தின் உதவி இருந்தாலும், மீட்டு முறை சற்றுத் தணிந்திருந்து ராக ஆலாபனையின் காலப் பிரமாணங்களும் சிறிது குறைந்திருந்தால் ரஞ்சகத்துவம் மேலோங்கி நிற்கும். மிருதங்கம் வாசித்த மேலக்காவேரி கிருஷ்ணமூர்த்தியின் அநுசரணையான வாசிப்பு வீணைக்கு ஏற்ற முறையில் இருந்தது.

இதைத் தொடர்ந்து கச்சேரி செய்த காகர்லாவில் திரு ஹரிஹரன் பல வருஷங்கள் அநுபவமுள்ள வித்வான். சென்னையிலேயே பல இடங்களில் கச்சேரி செய்துள்ளார். இந்த சீஸனிலேயே இந்தியன் பைன்-ஆர்ட்ஸ் சொஸைட்டியிலும் கச்சேரி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. தவிர ரேடியோவிலும் கச்சேரிகள் செய்திருக்கிறார். பாடும் வழிகளில் பிரபல முன்னணி வித்வான்கள் பலரின் சாயல்கள் கலந்து பிரகாசிக்கின்றன. அவர் பாடிய கல்யாணி ராகமும் 'நிஜதாஸவரத' என்ற கீர்த்தனையும், ஸாரங்க ராக கீர்த்தனமும் பந்துவராளி ராக ஆலாபனமும் குறிப்பிடத் தகுந்தவை. எனினும், சாரீரம் ஒத்துழைக்காததாலோ என்னவோ அன்றையக் கச்சேரியில் அவர் திறமை முழுதும் வெளிப்படவில்லை. மேலும் சிறப்புடன் இசையமுது வழங்கக் கூடியவர் என்றும்

எண்ணத்தான் உண்டாயிற்று. பக்கவாத்தியம் வாசித்த கும்பகோணம் சீனிவாசனின் பிடில் வாத்யம் அன்று எடுபடவில்லை. ஏனெனில் அன்று அவர் வாசிப்புக்கு அங்கு அவகாசம் நேரவில்லை. மிருதங்கம் வாசித்த காரைக்கால் திரு கணேசன் பாடகரின் சகோதரர். அவருடைய ஒத்தாசையுடனேயே கச்சேரியை 'ஒப்பேத்தி' விட்டார்.

இரண்டாவது நாள் திங்களன்று-22-12-58 பாடிய திரு பி. கிருஷ்ணமூர்த்தி வித்வான் பி. ராஜம் அய்யரின் சகோதரர். அத்துடன் முடிகொண்டான் திரு வேங்கடராம அய்யரின் சிஷ்யர். ஆகவே கீர்த்தனைகள் பாட சுத்தமும், ராக ஆலாபனைகளின் சஞ்சாரங்களும் சம்பிரதாய சுத்தமாக இருந்ததில் வியப்பில்லை. பந்துவராளி ஆலாபனமும் 'ரகுவர நின்னு' கீர்த்தனையும் 'அக்ஷயலிங்கவிபோ' என்னும் சங்கராபரண கிருதியும் அவருடைய அன்றைய கச்சேரியில் முக்கியமானவை. அந்த வேகமில்லாத நடை. காலப் போக்கில் ரக்தி உயரக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். திருவனந்தபுரம் நாகராஜ அய்யர் பிடிலும் திரு எம். ராஜாராமின் மிருதங்கமும் இவருக்குப் பக்கவாத்தியங்களாக அமைந்திருந்தன.



நாகர்கோவில் நாகராஜய்யர்

அன்று பிற்பகல் கச்சேரி செய்த திரு என். கல்யாணராமனின் பாட்டில் செம்மங்குடி சீனிவாசய்யரின் சாயல்கள் சில இடங்களில் காணப்பட்டன. மேல் ஸ்தாயி சஞ்சாரங்களைவிட மத்திம ஸ்தாயி சஞ்சாரங்கள் இவருடைய சாரீரத்துக்கு ஏற்றவையாக இருக்குமோ என்ற எண்ணம் உண்டாயிற்று. 'ஜகதானந்தகா' என்ற பஞ்சரத்ன கீர்த்தனையும் பல்லவி ராகமாகிய ஷண்முகப்ரியாவும் அன்று அவர் கச்சேரியில் குறிப்பிடத்தக்கவை. அபூர்வராகமாகிய 'காககந்தினி'யை அவர் ஆலாபனம் செய்யத் தொடங்கியதும் சுருதியிலிருந்து விலகி விட்டாரோ என்ற பிரமையை உண்டு பண்ணி விட்டார். வர்ஜ்ஜ ராகமாக இருந்தாலும், எல்லா ராகங்களுமே ஆலாபனை செய்வதற்கு ஏற்றவை அல்லவென்பது சங்கீத வித்வான்களின் அபிப்பிராயம். ரஞ்சகத்வம் மிகுந்தவையாக உள்ள ராகங்களை மட்டுமே இளம் வித்வான்கள் கையாளுவது பொதுவாக நல்லது. பக்கவாத்தியம் வாசித்த திரு பி. தக்ஷிணாமூர்த்தியின் பிடிலில் அழுத்தமும் இனிமையும் திரு எம். என். கந்தசாமியின் மிருதங்கத்தில் கச்சிதமான நிர்மாணங்களும் சபையோரைக் கவர்ந்தன.

செவ்வாய்க் கிழமையன்று முதல் கச்சேரி செய்த குமாரி எஸ். கோபால ரத்தினத்தின் சாரீரத்தில் குழைவு இருக்கிறது. கீர்த்தனங்களில் பாடசுத்தமும் இருக்கிறது. 'ஸரஸீருஹானனே' என்ற நாட்டை ராகக் கீர்த்தனையும், தோடியில் 'அம்பாநு' வும் மிகவும் ரஞ்சகமாக இருந்தன. காலப் போக்கில் இவருடைய சங்கீதம் அபிவிருத்தி அடைவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதற்கு அடுத்த கச்சேரி மதுரை திரு டி. வெங்கடேசன் நிகழ்த்தியது. ரேடியோ மூலம் இவர் பலருக்கு அறிமுகமானவர். சங்கீதமும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. இவ்வருஷத்திய பிற்பகல் கச்சேரிகளில் குறிப்பிடத் தக்க ஒரு கச்சேரி இது. 'ஸாதிஞ்சனே' என்ற ஆரபி ராக பஞ்சரத்ன கிருதியும், சௌராஷ்ட்ரம், ஆனந்த பைரவி ராக ஆலாபனையும் அன்றைய கச்சேரியில் சிறப்பாக இருந்தன. இதைக் காட்டிலும் இன்னமும் உயர்வாகக் கச்சேரி செய்யக் கூடியவர் என்னும் உணர்ச்சியை உண்டாக்கினார். பக்கவாத்தியம் வாசித்த பிடில் ராமநாதபுரம் திரு வெங்கடாசலமும், மிருதங்கம் திரு சோமசுந்தரமும் கச்சேரியைப் பரிமளிக்கச் செய்யும் வகையில் சிறப்பித்தனர்.

புதன்கிழமை (24-12-58) அன்று முதல் நிகழ்ச்சி, ஸ்ரீமதி எச். எஸ். அநுசூயாவின் கச்சேரி. இவர் வித்வான் டி. சௌடய்யாவின் சிஷ்யை என்று தெரிகிறது. கீர்த்தனைகளைப் பிசிறில்லாமலும் விருவிருப்புடனும் பாடினார். நம்மைத்

எம். டி. ராமநாதன் | திருவனந்தபுரம் ஆர். என். மணி | மதுரை வெங்கடேசன் | என். ராமநாதன் | ஆத்தங்குடி ராமமூர்த்தி





மீனு கிருஷ்ணன் | ஜெயா | சந்திரா | லலிதா | சுலோசனா பட்டாபிராமன் | பிடில் ருக்மிணி

ஊளியில் "தேவி பூர்ணமண்டல" என்ற சௌடய்யாவின் கிருதியும், ராகமாலிகையில் பாடிய "பாவநிஷ்ட, பரமாத்மனே" என்ற புரந்தர தாஸர் கீர்த்தனையும் அன்றையக்கச்சேரியில் குறிப்பான அம்சங்கள். உயர்ந்த சுருதியும் இனிமையான சாரீரமும் துரிதகால கீர்த்தனைகளும் கச்சேரிக்குக் கவர்ச்சியை உண்டாக்கப் பெரிதும் உதவின. சங்கீதத்தில் சுக பாவம் ஏற்படுவதற்கு ஒன்று அல்லது இரண்டு மத்திம கால கீர்த்தனைகளும் கலந்திருந்தால் நன்மை தரும். கும்பகோணம் தங்கவேலுவின் பிடிலும் ஷிமோகா ஸ்ரீகண்டனின் மிருதங்கமும் பக்க வாத்தியங்களாக அமைந்திருந்தன. அவை கச்சேரிக்குப் பொருத்தமாக இருந்தன.

அதற்கடுத்தது திருவாரூர் திரு நமசிவாயத்தின் கச்சேரி இந்த சீசனில் முக்கிய கச்சேரிகளில் ஒன்று. பலரிடம் அப்பியாசம் செய்திருந்தாலும் முக்கியமாக, புல்லாங்குழல் வித்வான் டி. என். சுவாமிநாதப் பிள்ளையிடம் சங்கீதம் பயின்றவர். ஆங்காங்கே காலஞ்சென்ற நாயினாபிள்ளையின் பாடாந்தரங்களின் சாயையும் கீர்த்தனைகளில் காணப்படுகின்றன. சபைக்கேற்ற கனசாரீரம். அதி துரிதமில்லாத நடை. இவையனைத்தும் கச்சேரிக்கு உயர்வு அளிக்கும் அம்சங்கள். அன்றையக் கச்சேரியில் கல்யாணிராக ஆலாபனமும் 'நிஜதாசவரதா' கீர்த்தனமும் "எவரிச்ரா" என்ற மத்யமாவதி கீர்த்தனத்தில் ஸ்வரப்ரஸ்தாரங்களும் சிறப்பாக இருந்தன. பக்கவாத்தியம்வாசித்த திருப்பாப்புலியூர் ராஜத்தின் வயலின் பாவப் பொலிவுடன் விளங்கியது. திரு சங்கரனின் மிருதங்கமும் கச்சேரியைச் சோபிக்கச் செய்தது.

வியாழக் கிழமையன்று நடந்த ஸ்ரீமதி லலிதாவின் பாட்டில் நல்ல "பாணியும்" ரஞ்சகமான பாவங்களும் ஓங்கி யிருந்தன. நல்ல சாரீரம். ரஞ்சகத்வமுள்ளது. பாடங்களும் சுத்தமாகவே இருந்தன. இவருக்கு இந்தியன் பைன்-ஆர்ட்ஸ் சொஸைட்டியிலும் ஒரு நான் மாலைக் கச்சேரி செய்யும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. தானாகவே சோபிக்கக் கூடிய தன்மையுள்ள பாட்டை அப்படியே அபிவிருத்தியடையச் செய்வது நல்லது. வித்வத் சபைக் கச்சேரிக்குப் பிடில் வாசித்த பாபநாசம் பாலசரஸ்வதியின் வாசிப்பு சிறப்பாக இருந்தது. பாலக்காடு திரு ராமநாதனுடைய மிருதங்கம் பாட்டுக் கேற்றவாறு அடக்கமாக இருந்தது.

இதற்கடுத்த கச்சேரி செய்த திருவனந்தபுரம் ஆர். எஸ். மணியின் தெளிந்த ஞானமும், கச்சேரிசெய்த பக்குவமும், குரல் இனிமையும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை. கனசாரீரம். எனவே அதிதுரித நடைகளில் வேலைப்பாடுகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. ராக ஆலாபனைகள் அனுபவிப்பதற்கேற்றஅளவு காலப்பிரமாணத்துடன் இருந்தது. மாயாமாளவகௌள ஆலாபனமும், 'மேருஸமான' என்ற கீர்த்தனமும், கல்யாணி ராகமும் 'நின்னுவினா' கிருதியும், தோடி ராக ஆலாபனமும் மிகவும் ரஞ்சகமாக இருந்தன. நிரவல்களும், ஸ்வரசஞ்சாரங்களும் உயர்தரமாக இருந்தன. கடைசியில் ராகமாலிகையில் பாடிய பஜகோவிந்தம் உணர்ச்சியுடன் இருந்தது. ஆரம்பமுதல் கடைசி வரையில் சலிப்புத்தட்டாத நல்ல கச்சேரிகளில் திரு ஆர். எஸ். மணியின் கச்சேரி ஒன்று. திரு சாலக்குடி நாராயணஸ்வாமியின் பிடிலும், திரு கும்பகோணம் கணேசனின் மிருதங்கமும் கச்சேரிக்குச் சோபையளித்தன.

வெள்ளிக் கிழமை நடந்த இரண்டு கச்சேரிகளும் வெவ்வேறுவகையில் சிறந்தவை. முதலில் பாடிய ஸ்ரீமதி சுலோசனா பட்டாபிராமனின் பாட்டிலும் கவர்ச்சிகரமான அம்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன. கோபாலக்தன என்ற பூஷாவளி கீர்த்தனையும் 'ஸரோஜதள நேத்ரி' என்ற சங்கராபரண கீர்த்தனையும், 'பஜரே பய்யா' என்ற பஜனும் கேட்பதற்கு இனிமையாக இருந்தன. இளம்



ராமநாதபுரம் கிருஷ்ணன்

பாடக, பாடகிகளுக்குப் பிரபல வித்வான்கள் பாட்டில் மோகம் ஏற்படுவது சகஜம். ஆனால் எவ்வளவுதான் அதேபோல் பாடினாலும் "போலிச்சரக்கு" என்ற மதிப்பு மட்டுமேதான் கிட்டுமே தவிர 'சொந்தப் பாட்டு' என்ற உணர்ச்சி தோன்றாது. நல்ல சாரீர வளமும், ஞான பலமும் பெற்றுள்ளவர்கள் தமக்கென்று தாங்களே ஒருவழி செய்து கொள்வதன் மூலம் தன்னம்பிக்கையும் வளரும்; சங்கீதமும் கூடவே வளரும். பக்கவாத்தியம் வாசித்த ஸ்ரீமதி டி. ருக்மிணியின் பிடிலில் ரஞ்சகத்வம் இருக்கிறது. காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியின் மிருதங்கம் அடக்கமாக இருந்தது.


திரு என். ராமநாதனுடைய கச்சேரி ஒரு முதல்தரமான கச்சேரி. இவர் ஆங்கிலப் பட்டதாரி. பி. எச்டி. பண்ணி செய்திருக்கிறார். அத்துடன் ஆராய்ச்சியாளர். மெய்யதிகார இசை நுணுக்கங்களைப்பற்றிப் புத்தகமே எழுதியிருக்கிறார். வீணை வாசிப்பதில் தேர்ந்த பழக்கமுள்ளவர். வித்வத் சபை அரங்கில் 'ஸ்வரஸ்தானங்களை'ப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை படித்து விவாதித்திருக்கிறார். சங்கீதப் பள்ளியும் ஒன்று நடத்துகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, காலஞ்சென்ற டைகர் வரதாச்சாரியாரின் சிஷ்யர். இவ்வளவு அநுபவமுள்ள ஒருவரின் கச்சேரி முதல்தரமாக இருப்பதில் வியப்பில்லை அல்லவா? பாட்டுடன் கம்பீரம், பாடாந்தரங்கள் சுத்தமானவை. பாடும் விதம் அப்பழுக்கின்றி அளந்து வைத்ததுபோல் சங்கதிகள் அடுக்கடுக்காக முறைப்படி வந்தன. ஸ்ரீ மஹாதேவய்யர் பிடிலும், உடுமலை திரு மணிச்சாமி மிருதங்கமும் வாசித்தனர்.

சனிக்கிழமை (27-12-58) பிற்பகல் நடந்த குமாரி ராஜேஸ்வரியின் வீணைகானம் இவ்வருடத்திய கச்சேரியில் முக்கிய இடம் வகிக்கும். காலஞ்சென்ற காரைக்குடி வீணை சுப்பராம அய்யரின் பேத்தி இச் சிறுமி. வைணிக மேதை சாம்பசிவய்யரிடம் பயிற்சி பெற்றவர். ஆகவே, வழிகளைப் பற்றியும் சம்பிரதாயத்தைப் பற்றியும் அதிகம் சொல்லத் தேவையில்லை. மீட்டு முறை தனித்திருப்பதுடன் ஞான பலமும் ததும்பி ராகங்கள் வழங்கப்பட்டது பாராட்டத்தக்கது. பைரவி ராகமும் அதைத் தொடர்ந்து கானராகபஞ்சதானமும் அதன் முடிவில் 'தனயுனிப்ரோவ' கீர்த்தனமும் குறிப்பிடத்தக்கவை.

இரண்டு பேர்கள் சேர்ந்து பாடுவதில் சில அநுகூலங்கள் உள்ளன. கச்சேரி 'ஜம்'மென்று அமைந்து விடுகிறது. ஒருவருடைய ஏற்றத் தாழ்வுகள் மற்றவரின் ஏற்றத் தாழ்வில் மறைந்து விடுகின்றன. இவ்வகையில் திரு ராமன், லக்ஷ்மணன் இருவரும் ஞாயிறன்று (28-12-58) செய்த கச்சேரியும், ஸ்ரீமதி ஜெயாவும் சந்திராவும் திங்களன்று (29-12-58) செய்த கச்சேரியும், ஸ்ரீமதிகள் ராதா சகோதரிகள் புதன்கிழமை (31-12-58) செய்த கச்சேரியும் சிறப்புற்றன. ராமன் பாடிய கல்யாணியும் லக்ஷ்மணன் பாடிய ஆனந்தபைரவியும் குறிப்பிடத்தக்கவை.

28-12-58 ஞாயிறன்று குழலிசை வழங்கிய திரு என். ரமணி திரு டி. ஆர். மகாலிங்கத்தின் சிஷ்யர். எனவே குருவினிடம் காணும் பிரத்யேக பாணிகள், லய வேலைப்பாடுகள், ராக சஞ்சாரங்கள் எல்லாம் இவருடைய வாசிப்பிலும் காணப்படுகின்றன. வியவகார சங்கீதம் வாய்ப்பாட்டிலேயே வெகுவாக ரசிப்பதில்லை. வாத்தியத்தில் இதை வழங்குவதில் சில அதிகப்படியான சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பது அன்றையக் கச்சேரியிலிருந்து தெளிவாயிற்று. சித்தூர் கோபாலகிருஷ்ணனின் பிடிலும் தாயுவின் மிருதங்கமும் பக்கவாத்தியங்களாக அமைந்திருந்தும், உயர்தரமான இசையை வழங்கும் சாமர்த்தியமிருந்தும், அன்றையக் கச்சேரி சோபித்தது என்று கருத முடியாது.

குறிப்பிடத்தக்க மற்றொரு கச்சேரி 30-12-58 செவ்வாயன்று நடந்தது. விஜயவாடா ரேடியோ நிலையத்தைச் சேர்ந்த கோலேடி வெங்கடேச்வரலுவின் கானம் முதல்தர நிகழ்ச்சிகளில் ஒன்று. உடம்பு அசையாமல், தலை ஆடாமல் உதடுகூட அசைகிறதோ இல்லையோ என்னும்படி பொம்மை போல் பாடுகிறார். அபூர்வ சக்தியின் அனாயாசமாக வழங்குகிறார். இருந்தாலும் உயர்ந்த முறையில் ரஞ்சகத்துடன் பாடுகிறார். அன்று



சங்கீத வித்வத் ஸபையின் நிர்வாகஸ்தர்களும் சங்கீத கலாநிதிகளும் இவ்வருஷத் தலைவர் ஜி.என். பியுடனும் கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதியுடனும் வீற்றிருக்கின்றனர்.

ஸஹானா, பூர்வகல்யாணி ராகமும், 'ஏமனதிச்செத' கீர்த்தனையும், 'தேவ தேவ' என்ற ஸ்வாதித் திருநாள் கீர்த்தனையும், பல்லவி ராகமாகிய வராளியும் மிகவும் ரஞ்சகமாக அமைந்திருந்தன.

கடைசி நாளாக 31-12-58 அன்று பாடிய மதுரை என். கிருஷ்ணன் அரியக்குடியின் சிஷ்யர். குருவின் பாணி சிஷ்யனுடைய பாட்டிலும் அழகாகப்பிரதிபலிக்கிறது. தோடி வர்ணத்திலிருந்து, ஹரிகாம்போதியில் "எந்தராநீதன" கீர்த்தனையும், பந்துவராளியில் "நின்னுநெ" கீர்த்தனமும், 'ஷண்முகப்ரியா' ராக ஆலாபனமும், முடிவில் பாடிய தில்லானா உட்பட எல்லாமே அய்யங்கார் பாடுவதுபோலவே இருந்தன; ஆனாலும் சுகபாவம் குறைந்தே இருந்தது. பக்கவாத்யம் வாசித்த கண்டதேவி அழகிரிசாமியின் வயலின் கேட்பதற்கு இனிமையுடனிருந்தது.

பொதுவாகவே இளம் வித்வான்களின் எண்ணிக்கை பெருகி யிருப்பதுடன் தரமும் உயர்ந்து கொண்டே வருவது பற்றி இசைப் பற்றுள்ள எவரும் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். சென்ற வருஷம் ஒவ்வொரு கச்சேரிக்குப் பின், பாடகர்களைப் பற்றிச் சிறப்பித்துப் பேசி, உற்சாகமளிக்கும் விதத்தில் சில வார்த்தைகளை வது சொல்லிப் பாராட்டினார் வித்வத்சபையின் விழாத் தலைவர். இது பாடகர்களுக்குத் திருப்தி அளித்ததென்பது மட்டுமன்றி, தாங்கள் பாடுவதை வித்வான்கள் கவனிக்கின்றனர் என்ற உற்சாகமும் இருந்தது. இந்த வருஷம் இந்த நல்ல பழக்கத்தை என்ன காரணத்தாலோ கை விட்டுவிட்டனர். விழாத் தலைவர் திரு ஜி. என். பி. பல கச்சேரிகளில் பிரசன்னமாக இருந்தும் ஒரு முறையேனும் பாடகர்களைப் பற்றிப் பேசாமலிருந்துவிட்டது இளம் வித்வான்களை அசட்டை செய்கின்றனரோ என்ற எண்ணத்தை எழுப்பி யிருக்கக் கூடும். பாராட்டு வார்த்தைகளால் ஓரளவுக் கேனும் திருப்தியடையாதவர்களில்லை. இளம் பாடகர்கள் விஷயத்தில் இது மிகவும் முக்கியம்.



பம்பாய் கவர்னரின் வேண்டுகோள்

பம்பாய் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் பகவான் ராமகிருஷ்ணருக்கும் சாரதாமணி தேவியாருக்கும் ஆலயமும் ஒரு பிரார்த்தனை மண்டபமும் ரூ. 4,25,000 செலவில் கட்டும் திருப்பணியை மேற்கொண் டிருக்கிறார்கள். இத்திருப் பணிக்கு உதவும் நோக்கத்துடன் தான் ஸ்ரீமதி எம். எஸ். ஜனவரி 10-ம் தேதி சனிக்கிழமை பம்பாய் கார் பகுதியிலுள்ள ராமகிருஷ்ண ஆசிரமத்தை ஒட்டினாற்போலுள்ள பெரும் பந்தலில் இன்னிசை வழங்குகிறார். பம்பாய் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபி காசா அவர்கள் பம்பாய் மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் பின்வருமாறு கூறுகிறார்: "ராமகிருஷ்ண மடத்தார் புரியும் மகத்தான சமூகத் தொண்டுகளைப்பற்றி உலகமே அறியும். அத்தகைய சிறந்த ஸ்தாபனத்தார் மேற்கொள்ளும் பணிக்குப் பொது மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் மிக மிக அவசியம். ஆகவே, பம்பாய்ப் பொது மக்கள் ஒவ்வொருவரும் தாராளமாக நிதி உதவி புரிய வேண்டும். இந்த நிதிக்கு உதவும் தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்!"

பம்பாய் கவர்னரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ராமகிருஷ்ண மடத்தாரின் திருப்பணி வெற்றிகரமாகப் பரிமளிக்கச் செய்ய வேண்டும் என்று பம்பாய் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.



நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் விளங்க

"கோகுல்" ஸாண்டால் & ஸாண்டல்வுட் பவுடர்

டி.எஸ்.ஆர் & கோ

கும்பகோணம்

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

19. விருத்ராசுரவதம்

பிரசேதர்கள் மாரீஷை என்ற அப்ஸர மங்கையைமணந்துகொண்டார்கள். முன்பிறவியில் சிவனை நிந்தித்தவன் பயனால் தக்ஷன் மறுபடியும் பிறவியை அடைந்து அவர்களுக்கு மகனாய்ப் பிறந்தார். இந்த வரலாற்றைச் சுகர் பரீக்ஷித்துக்குத் திரும்பவும் எடுத்துரைத்து அதற்கு மேல் தக்ஷனுடைய வம்சத்தை விரிவாக வர்ணித்தார்.

தக்ஷனுடைய பரம்பரை உலகெல்லாம் பரவியது. 'ஹர்யச்வர்கள்' என்ற பெயர் பூண்ட பதினாயிரம் மைந்தர்கள் அவருக்குப் பிறந்தனர். ஆனால் அவர்களுக்குப் பின் பிறந்த சபலாச்வர்களும் நாரதர் சொல் கேட்டுத் திரும்பி வராத முக்தி வழியைப் பின்பற்றினார்கள். சிறுவருக்கு சன்யாசத்தைக் காண்பித்ததற்கு தக்ஷன் நாரதரை மிகவும் கோந்து கொண்டார். பிறகு தக்ஷனுக்கு அறுபது பெண்கள் பிறந்தனர்.

அப் பெண்களில் பத்துப் பேரைத் தர்ம தேவதைக்கும், இருபத்தி ஏழு பேரைச் சந்திரனுக்கும், இரண்டு பேர்களைப் பூதர், அங்கிரஸ்க்ருசாச்வர் என்ற முனிவர்களுக்கும் மிகுந்தவரைக் கச்யபருக்கும் மணம் செய்து கொடுத்தார்.

கச்யபருக்கு வினதா என்பவளிடம் கருடன் பிறந்தார். கத்ரு என்பவளிடம் நாகர்கள் பிறந்தனர். அதிதி என்பவளிடம் பன்னிரண்டு மைந்தர்கள் பிறந்தனர். அவர்களுள் இந்திரன் ஒருவன். கடைசி மகன்தான் மூவுலகையும் காலால் அளந்த வாமனன். அப் பன்னிருவருள் த்வஷ்டா என்பவருக்கு அசுரருக்கு உடன் பிறந்த ரசனா என்பவளிடம் ஸன்னிவேசன், விச்வரூபன் என்று இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். அந்த விச்வரூபன்தான் ஒரு சமயம், தேவர்களால் அவமதிக்கப்பட்டு அவர்களை விட்டு விலகிய பிரஹஸ்பதிக்குப் பதிலாக, தேவகுருவாய் விளங்கினான்.

தேவர்களை விட்டு பிரஹஸ்பதி ஏன் விலக வேண்டி நேர்ந்தது என்று பரீக்ஷித்து வினவ, அந்த வரலாற்றைச் சுகர் சொல்லலானார்.



மூவுலகும் தனதென்று செருக்குற்ற இந்திரன் ஒரு நாள் தன் சபையில் பரிவாரங்கள் சூழச் சந்திர மண்டலத்தைப் பொத்த வெண் குடையின் கீழ் கொலுவீற்றிருந்தான். அப்பொழுது தேவருக்கு ஆசிரியரான பிரஹஸ்பதி அங்கு வந்தார். விண்ணவரும் அசுரரும் வணங்கும் அப் பெரியோரைப் பார்த்ததும் தன் சிங்காதனத்தினின்று இறங்கி வந்து வரவேற்காமல், இந்திரன் தன் ஆசனத்திலேயே அசையாமல் வீற்றிருந்தான். பிரஹஸ்பதி ஒன்றும் சொல்லாமல் தம் வீட்டுக்குச் சென்று விட்டார். அவர் வெளியேறியதும் இந்திரனுக்கு ஓரளவு தன் நினைவு வந்தது. சீர்குலைந்த தான் என்ற மதம் மிஞ்சி, குருவை அவமதித்தோமே என்று வருந்தினான். அனைவருக்கும் ஆசிரியனான அந்தணனின் தாளைப் பற்றி மன்னிப்பைக் கோர எண்ணம் கொண்டான். தமது யோகபலத்தால் இந்திரனுடையகருத்தை அறிந்த பிரஹஸ்பதி கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டார். அவரைத் தெரிந்த இடமெல்லாம் இந்திரன் தேடினான். குருவைக் காண முடியவில்லை. ஆசிரியனின்றி அசுரரை எதிர்ப்பது எளிதல்ல வென்று உணர்ந்து உருகினான். பிரஹஸ்பதி மறைந்தார் எனக் கேட்டதுமே அசுரர்கள் போருக்குச் சித்தமாயினர். தேவர்களைத் தாக்கினர். அம்பால் அடிபட்டு அங்கங்கள் சிதறுண்டு, தேவர்கள் பிரம்மனிடம் விரைந்தோடித் தலை வணங்கி விண்ணப்பம் செய்தனர்.

விண்ணவரைப் பிரமன் கண்டித்தார். ஐச்வரியத்தால் மதி மிழந்து ஆசிரியனை அவமதித்ததின் பயனால், தம் குருவை வணங்கி வரும் அசுரரால் போரில் வெல்லப்பட்டீர் என்று விளக்கினார்.

"த்வஷ்டாவின் மகனான விச்வரூபனை அடையுங்கள். தவத்தில் மேலோன், வித்தையில் வல்லவன். மரியாதையுடன் நடந்து கொண்டால் நன்மையைச் செய்வான்" என்று உபதேசம் செய்தார்.

தேவர்கள் விச்வரூபனுடைய ஆசிரமத்தை அடைந்து அவரை ஆசிரியனாய் வரித்தார்கள். விச்வரூபன் உண்மையிலே துறவி. ஆசிரியன் என்ற பதவி, அப்பட்டத்தை உட்கொண்டு அமைதியுடன் வாழும் அந்தணனுக்கு அடுக்காது என்று கருதினான். ஆயினும் தனக்குச் சுற்றத்தாரான தேவர் வேண்டுகோளைப் புறக்கணிக்க அவனுக்கு மனம் வரவில்லை. அவர்களுடன் சென்று, ஆசிரியனாய் வாழ்ந்து வந்தான். "நாராயண கவசம்" என்ற

மதான மந்திரத்தை இந்திரனுக்கு உபதேசம் செய்தான். அம் மந்திரத்தின் பலத்தால் இந்திரனும் அசுரரை வென்று திரும்பவும் தன் பதவியைப் பெற்றான்.

“நாராயண கவசம்” என்ற மந்திரம் பாகவதத்தில் ஆறாவது ஸ்கந்தத்தில் எட்டாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஓதுபவர் எவ்வித ஆபத்திலிருந்தும் மீண்டு முன்னேறலாம் என்று பெரியோர் கூறுகின்றனர்.

விச்வரூபன் இந்திரனிடம் இம் மந்திரத்தை உபதேசித்து, பலனும் சொல்லி விட்டு, “முன்னொரு தருணம், குசிக வம்சத்தில் பிறந்த அந்தணர் ஒருவர் இம் மந்திரத்தை உச்சரித்து, மூச்சை அடக்கி மனத்தை ஒருமுகப்படுத்தி ஓர் பாலைவனத்தில் உயிர் துறந்தார். விமான வழியாய்த் தன் மனைவியருடன் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த சித்ரரதன் என்ற கந்தர்வ மன்னன் இவ் அந்தணன் இறந்த இடத்தை அடைந்ததும், தலைகீழாகத் தரையில் வீழ்ந்து விட்டான். பிறகு வாலகில்யர் என்ற முனிவருடைய சொல் கேட்டு, அந்தணனுடைய எலும்புகளைப் பொறுக்கி ஸரஸ்வதி நதியில் போட்ட பிறகுதான் சித்ரரதனுக்கு அவ்விடம் விட்டு ஏக முடிந்தது. நாராயண கவசத்துக்கு அவ்வளவு பெருமை” என்று முடித்தான் விச்வரூபன்.

இம்மந்திரத்தின் மகிமையினால் அசுரரை வென்று தன் பதவியை அடைந்த இந்திரன் மூவுலகையும் மறுபடியும் ஆளலானான்.

விச்வரூபனுக்கு மூன்று முகமெனப் பழைய வரலாறு உரைக்கிறது. தாய் வழியில் விச்வரூபன் அசுரருக்கும் உற்றவனன்றோ? ஆகவே, அக்னியில் ஆகுதி செய்யும் பொழுது, தேவருக்கு மட்டுமின்றி, இரகசியமாக ஒரு பங்கை அசுரருக்கும் பகிர்ந்தளித்து வந்தான். இதை அறிந்த இந்திரன், இவனால் தேவருக்கு என்ன கேடு நேருமோ என்று பயந்து விச்வரூபனுடைய மூன்று தலைகளையும் கொய்தெறிந்தான். ஒரு தலை சாதகப்பக்ஷியாகவும், இரண்டாவது தலை குருவியாகவும், மூன்றாவது தலை கௌதாரியாகவும் மாறின.

அந்தணனைக் கொன்ற பாபம் ஓராண்டு வரை இந்திரனைச் சூழ்ந்து நின்றது. அதன் இறுதியில் இந்திரன் தன் பாபத்தை நாலாக வகுத்துப் பூமிக்கும், நீருக்கும், மரங்களுக்கும் மங்கையருக்கும் அளித்தான். ஆனால் கூடவே ஒரு புண்ணியமும், இவை நான்கும் இந்திரனிடமிருந்து பெற்றுக் கொண்டன. பயிரில்லாப் பாலை பூமிக்குப் பாபம், தோண்டிய பள்ளம் தானாகவே தூர்ந்துவிடுவது புண்ணியம்; கசியும் பால் மரத்துக்குப் பாபம், வெட்டியும் வளரும் தன்மை புண்ணியம். மாதவிடாய் மாதருக்குப் பாபம், கருவுற்றும் குறையாத சிற்றின்ப நுகர்ச்சி குன்றாமை புண்ணியம்; நுரையே நீருக்கும் பாபம், ஓயாமல் சுரந்து வருவது புண்ணியம்.

தம் மகன் மடிந்ததைக் கேட்ட த்வஷ்டா, இந்திரன் அழியவேண்டுமென்று ஒரு கோரமான யாகத்தை ஆரம்பித்தார். “இந்திரனுக்கு எதிரியே! தாமதமின்றித் தோன்றுவாய். மதம் மேவிட்ட இந்திரனை அழிப்பாய்” என்று சொல்லி அக்னியில் ஆகுதியைச் செய்தார். அக்னியினின்று ஒரு அரக்கன் தோன்றினான். மூவுலகும் முடியும்பொழுது தோன்றும் கூற்றமெனத் தோற்றம் அளித்தான். அவனுடைய கருமேனியும் பருமனும் தீப்பட்டுக் கரிந்த மலை போலிருந்தன. அந்தி வேளையில் ஆகாயத்திலிருக்கும் மேகமெனத் துலங்கினான். பகல் நடுவே ஒளி வீசும் கதிரவனைப் போன்ற கண்களுடன் முனிவருக்கு முன் வந்து கதறிக் கூத்தாடினான். பல்லுயிரும் பயத்தால் பறந்தோடின. தேவருடன் போருக்குச் சென்று தளபதிகளைக் கபளீகரம் செய்தான். திரும்பவும் தோல்வியுற்ற தேவர்கள் நாராயணனைச் சரண் புகுந்தனர்.

தேவர்கள் நாராயணனைப் பலவாறு புகழ்ந்தார்கள். அவரும் அவர்கள் முன் தோன்றினார். மூவுலகையும் துன்புறுத்தி ஆளையும் ஆயுதத்தையும் ஒன்றாக விழுங்கும் விருத்திரனை வதைப்பதற்கு வழியென்ன வென்று அவரை வினவினார்கள். முதுமையில்லா விண்ணவருக்கு ஹரி பின்வருமாறு பதில் உரைத்தார்:

“மெய்யறிவும் பக்தியும் செழிக்கச் செய்யும் துதியால் களிப்புற்றேன். என் மனத்தைக் கவர்ந்தவருக்கு ஒன்றுமே அரிதில்லை; ஆயினும், என்னையே பற்றினவர் வேறொன்றும் வேண்டார்.

“இந்திரனே! உனக்கு மங்களம் உண்டாகுக. தாமதமின்றித் ததீசி என்ற



முனிவரைத் தேடு. அவருடைய உடலைத் தானமென்று கேள். நாராயண கவசமென்ற சொல்லா மந்திரத்தைக் கற்றறிந்து மாயையை மறுத்து ஆன்மாவை அறிந்த அப் பெரியோர் உனக்குத் தம் உடலைத் தருவார். அவருடைய எலும்பிலிருந்து விஸ்வகர்மாவைக் கொண்டு வஜ்ராயுதத்தைச் செய்யுமாறு கட்டளை இடு. அந்த ஆயுதத்தின் சக்தியினாலும் என் மகிமையினாலும் விருத்திரன் தலையைக் கொய்திடுவாய். அவன் இறந்ததும் உன்னுடைய பெருமை எல்லாம் திரும்பவும் உன்னைச் சாரும். என்னை நம்பினோர் எதிரிக்கு இரை ஆகார்."

தேவருடைய வேண்டுகோளைக் கேட்ட ததீசி புன்னகையுடன் அவர்களிடம் பேசினார். "இறப்பது எளிதன்று. சீவனையே நீக்கும் வலியைத் தரும். உடலே மனிதனுக்கு வாழ்க்கைக் கருவி. ஆசைக்குப் பாத்திரமானது. விஷ்ணுவுக்கென்றாலும் தன் உடலை எவன்தான் கொடுப்பான்?" என்றார்.

தேவர்கள் அவரை மறுபடியும் புகழ்ந்தனர். "கருணைக் களஞ்சியமான பெரியோர் எதைத்தான் கொடார்? தன் நலத்தைக் கருதுவோர் பிறர் துயரை அறியார். கொடையாளிகளால் இல்லை என்று மறுப்பதரிது" என்று மரியாதையுடன் உரைத்தார்கள்.

அதற்குத் ததீசி "உங்கள் வாயால் தர்மத்தைக் கேட்கவேண்டுமென்றே உடலைக் குறித்துப் புகழ்ந்தேன். இப்பொழுதே என் உடலைத் தருகிறேன். என்றாவது ஒருநாள் என்னை விட்டு உடல் பிரியும்



என்பது திண்ணம். பிறர் துயரில் துயரும் பிறர் மகிழ்ச்சியில் மகிழ்ச்சியும் அடைவதுதான் வாழ்க்கைக்குமேன்மை" என்றார்.

இவ்வாறு நிச்சயம் செய்து கொண்டு, ததீசி, புலன்களையும், பிராணனையும், மனத்தையும், புத்தியையும் அடக்கி, ஆன்மாவைப் பரம்பொருளோடு இணைத்துத் தமக்குத் தெரியாமலே உடலை உதறினார்.

அவருடைய எலும்பிலிருந்து விச்வகர்மா வஜ்ராயுதத்தைச் செய்தான். ஆயுதத்தை அடைந்த இந்திரன் ஐராவதத்தின் மீது ஏறிக்கொண்டு சேனைகள் சூழப் போருக்குச் சென்றான். அசுரருக்கும் தேவருக்கும் நர்மதா நதிக்கரையில் கொடும் போர் நடந்தது. ருத்திரரும், வசுக்களும், ஆதித்தியரும், அச்வினி குமாரர்களும், பித்ருக்களும், அக்னியும், மருத்துக்களும், ரிபுக்களும், சாத்தியர்களும், விச்வே தேவர்களும் சூழ்ந்து சிறந்த பெருமையுடன் போருக்கு முன் வந்த இந்திரனைக் கண்டு அசுரர்கள் மனம் கொதித்தனர். சிங்கத்தைப் போல் கர்ஜித்துக் கொண்டு அவர்மேல் பாய்ந்தனர். ஆனால் அசுரருடைய ஆயுதங்கள் தேவரை வருத்தவில்லை. கடவுளின் கிருபையால் காப்பாற்றப்பட்ட விண்ணவரிடம் பெரியோரைப் பழித்த பாமரன் பேச்சென, அசுரருடைய போரெல்லாம் வீணாயிற்று. விருத்திரனைத் துணையின்றிப் போர்க்களத்தில் விட்டுவிட்டு அசுரர்கள் ஓடலாயினர். அவர்களைத் துரத்தும் தேவரை விருத்திரன் ஏளனம் செய்தான். "முதுகைக் காட்டி உயிரைக் காக்கும் பேடியரை வதைப்பது வீரருக்கு அழகோ? உங்கள் மனத்திலே திறமிருந்தால் என் முன்னிருந்து போராடுங்கள்" என்று அலறினான். இப் பெரும் ஓசையிலேயே பலர் மயக்கமுற்றனர். தாமரைகளைக் காலால் கசக்கித் திரியும் மதயானையென விருத்திரன் அவர்களை மிதித்துத் தெறித்தான். இந்திரன் அவன்மீது தன் கதையை வீசினான். விருத்திரன் அதைத் தன் இடது கையால் பிடித்தான். அதைக் கொண்டே ஐராவதத்தை அடித்தான். யானையும் மின்னல் பட்ட மலைபோல் மருண்டு பின் வாங்கிற்று. அப்பொழுது விருத்திரன் இந்திரனோடு பேசலானான்:

"அந்தணனும், ஆசிரியனுமான என் உடன்பிறந்தோனைக் கொன்ற கொடியவனே! உன் கல்நெஞ்சைப் பிளந்து என் கடனைத் தீர்ப்பேன். என் சூலத்தால் உயிர் நீங்கிய உன் உடல் கழுகுக்கு இரையாகும். மற்றவரையும் மாய்த்துப் பைரவனுக்குப் பூசையிடுவேன். இல்லை, நான் மடிந்தால் செயற் பயனைக் கழித்துவிட்டுப் பெரியோரின் புகலிடத்தை அடைவேன். உன்னுடைய வஜ்ராயுதம் லோபியிடம் கேட்ட கடனைப் போல் பயனற்றுப் போகாது. ஹரியினுடைய மகிமையும் ததீசியினுடைய தவமும் கலந்திருக்கும் ஆயுதமன்றோ? ஹரியிருக்கும் பக்கம்தான் வெற்றி. ஸங்கர்ஷணரூபமான அனந்தனுடைய தாளையே மனத்தினில் எண்ணி,

உன்னுடைய வஜ்ராயுதத்தால் இறந்து, முனிவர்கள் அடையும் பேற்றைப் பெறுவேன். தன்னையே தஞ்சமென்று நம்பி இருக்கும் தொண்டருக்கும் பரமன் விண்ணுலகையும் மண்ணுலகையும் இன்பங்களையும் நல்குவதில்லை. அறம், பொருள், இன்பம் இம் மூன்றையும் அன்பர்கள் அடையாத வண்ணம் அனந்தன் தடை செய்கிறார். தனக்கென்று ஒன்றுமே இல்லாமல் இருப்போர்தான் ஆண்டவனுடைய ஆட்களென்று அறிவாய்."

இவ்வாறு இந்திரனிடம் கூறிவிட்டு, விருத்திரன் ஹரியைத் தோத்திரம் செய்ய ஆரம்பித்தான்: "ஹரியே! மறு பிறப்பில் நான் உங்களுடைய தொண்டருக்குத் தொண்டனாய்ப் பிறக்க வேண்டும். எனக்குத் துருவனுடைய மேலிடமும் வேண்டாம்; பிரமனுடைய பேரிடமும் வேண்டாம்; புவிமீது ஆணை செலுத்த எனக்கு இச்சையில்லை; ஏழுலகங்களுக்கு வேந்தனாக விரும்பவில்லை; குஞ்சுகள் தாய்ப் பறவையைப் பார்க்கத் தவிப்பது போலவும், பசியின் பிணி ஏறிய கன்று பால் தரும் தாயைச் சேரச் சோர்ந்திருப்பது போலவும், பிரிவால் பரிதவிக்கும் பெண்மணி, தன் நாயகன் வரவை எண்ணி வாடியிருப்பது போலவும், பங்கயக் கண் படைத்த பரந்தாமனைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஒன்றே மேற்கொண்டுள்ளேன்."

பிறகு, உடலைத் துறப்பதில் உறுதி கொண்ட விருத்திரன், தன் சூலத்தை இந்திரன்மீது எறிந்தான். இந்திரன் சூலத்தை முறித்து, அசுரனுடைய ஒரு கையையும் வெட்டி நொறுக்கினான். ஒரு கையில் ஏந்திய கதையால் விருத்திரன் இந்திரனையும் ஐராவதத்தையும் ஒருங்கே புடைத்தான். இந்திரனுடைய கையிலிருந்து வஜ்ராயுதம் நழுவிக் கீழே விழுந்தது. விண்ணவர் வியந்தனர். இந்திரன் வெட்கமுற்றான். விழுந்த ஆயுதத்தை அவன் மறுபடியும் எடுக்கவில்லை.

அப்பொழுது அசுரன் தேவராஜனிடம், "வஜ்ராயுதத்தை எடுத்துப் போர் செய். வல்லவனுக்கு வெற்றி என்பது எப்பொழுதும் நன்மையில்லை. விதி விட்ட வழிதான் மாறாது நிற்கும். பொம்மையென நம்மைப் பரமன் ஆட்டி வைக்கிறான். இந்திரனே! என்னைப் பார்! உன்னைக் கொல்ல முன் வந்துள்ளேன். ஆனால் என் சூலமும் கையும் போய்விட்டன. போர் என்பது ஓர் சூதாட்டம். உயிரே பந்தயம். பாணமே தாயமாவது. வாகனங்களே விளையாடும் பலகை. யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்று நிச்சயிக்க முடியாது" என்று உரைத்தான்.

விருத்திரன் சொல் கேட்டு இந்திரன் ஆச்சரியமடைந்தான். "அரக்கனே! கடவுளிடம் பெரும் பக்தி படைத்துச் சித்தியை அடைந்துவிட்டாய். அசுரன் என்ற தன்மையைத் தள்ளி, மாயையைத் தாண்டிய மகா புருஷனாக அன்றோ விளங்குகின்றாய். முக்தியளிக்கும் முகுந்தனிடம் முதிர்ந்த பக்தி என்ற அமிருதக் கடலில் விளையாடுபவனுக்கு இன்பமென்ற ஓடை நீர் எம்மாத்திரம்" என்று அசுரனைப் புகழ்ந்தான்.

மறுபடியும் இருவரும் போர் புரிந்தனர். விருத்திரனுடைய இரண்டாவது கையையும் இந்திரன் வெட்டி விட்டான். வாயை ஆகாயமளவுத் திறந்து இந்திரனை அசுரன் விழுங்கினான். வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியேறி இந்திரன் அசுரன் தலையை வெட்டி எறிந்தான். வானத்தில் பேரிகை முழங்கியது. விண்ணவர் பூமாரி பெய்தனர். விருத்திரனுடைய ஆத்மா ஆண்டவனை அடைந்தது.



தளராத சக்திக்கு அவர்கள்

ஷாலிமர்

சாப்பிட ஆரம்பிக்கட்டும்



இதோ! பாமாலிவ்-

இந்தியாவின் மிகப்பிரசித்தியுற்ற

அழகுத் தைலங்களினுல் செய்தது

உங்கள் வனப்பைக் காக்க



பாமாலிவ்

பியூட்டி சோப்



அத்தியாயம் 16

நெஞ்சம் வலித்தது

"கல்மனம் படைத்த அந்தச் சோழிய அந்தணர், 'என் மகனானால் என்ன? வேறொருவனானால் என்ன? செய்தது தவறு. பெற வேண்டியது தண்டனைதான்' என்று பாசத்தை மறந்து நியாயத்தை ஒப்புக் கொள்கிறார். ஆனால்.....நான் உங்களிடம் எப்படிச் சொல்வேன், மகாராணி! அவனைப் பெற்ற அந்தச் சோழிய நங்கையின் கதறல் அந்த மண்டபத்தையே சோக வெள்ளத்தில் மூழ்கச் செய்திருக்கிறது. அந்தத் தாய் தூணில் முட்டிக் கொள்கிறாள்; முறையிடுகிறாள். 'என் மகன் கையை நெய்க் கொப்பரைக்குள் விடுமுன் நானே கொப்பரையின் கொதிக்கும் நெய்க்குள் பாய்ந்து உயிரை விட்டு விடுவேன்' என்று அடம் பிடிக்கிறாள். அவளுக்கு ஒரே மகன் அவன். தந்தைக்கு நியாயம் பெரிதாகத் தெரிகிறது! தாய்க்குப் பாசம் பெரிதாகத் தெரிகிறது. தாய் ஈரைந்து திங்கள் வயிற்றில் சுமந்தவள். என்ன செய்வது, தேவி? தாயாக இருந்தால் தான் மகனை உணர முடிகிறது. அடியானாக இருந்தால் தான் தெய்வத்தை உணர முடிகிறது.

நா. பார்த்தசாரதி

ஆண்டவனாக இருந்தால்தான் அடியா வின் வேதனை தெரிகிறது. வாழ்க்கையே நீதி அமைப்பை அமைத்துவிடுகிறது.''

அர்ச்சகர் உணர்ச்சிகரமாக, உருக்கமாகத் தம் மனத்தில் புதைந்து கிடந்த துன்பத்தை மகாராணிக்கு முன் கொட்டினார். அவர் முடித்ததும் மகாராணி ஆவலோடு கேட்டார்:—

"அதெல்லாம் சரி! முடிவு என்ன ஆயிற்று? 'கை முடக்குத் தண்டனை'யை நிறைவேற்றினார்களோ, இல்லையோ?''

"நீதி மன்றத்தார் தண்டனையை அளித்து விட்டார்கள். ஆனால் தண்டனையை நிறைவேற்ற முடியாமல் ஒரு தாயின் இரண்டு கைகள் தடுத்து அடம் பிடிக்கின்றன. நெய்க் கொப்பரை கொதித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு கூட்டமும் அதைத்தான் வேடிக்கை பார்க்கப் போகிறது. முடிவு என்ன ஆகுமோ தெரியவில்லை.''

அர்ச்சகருடைய வார்த்தைகளைக் கேட்டு முடித்ததும், மகாராணி வானவன் மாதேவியார் பெருமூச்சு விட்டார். அவருடைய பேச்சு மகாராணியின் மனத்தில் இரண்டொரு செய்தினை ஆழப் பதிந்து விட்டது.

"தாயாக இருந்தால் தான் மகனை உணர முடிகிறது. ஆண்டவனாக இருந்தால்தான் அடியானின் வேதனை தெரிகிறது!''


யாரும் அறியாமல் புதையல் எடுத்த ஏழைமகன் அதனைத் திரும்பத் திரும்பத் தனிமையில் தான் மட்டும் பார்த்து மகிழ்வது போல் இந்த உயிரோட்டமுள்ள வாக்கியங்கள் அவர் மன ஆழத்தைத் தொட்டுத் [illegible] ஊட்டின.

தெய்வநீதி மன்றம் அந்தக் கோயிலின் வேறொரு பகுதியில் இருந்தது. ஏக்கத்தோடும், அநுதாபத்தோடும், நிராசையோடும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார் மகாராணி. கூட்டம் திரள்திரளாகத் தெய்வநீதி மன்றம் இருந்த பகுதிக்குள் சென்று கொண்டிருந்தது. இவ்வளவு கூட்டமும் கைமுடக்குத் தண்டனையை வேடிக்கை பார்க்கப் போகிறது. ஆனால் இவ்வளவு பேரும் அடையாத சோக உணர்ச்சி தண்டனை அடைந்தவனைப் பெற்ற தாய்க்கு மட்டும் ஏற்படுகிறது. உலகத்துக்கு வேடிக்கை. தாய்க்கு வேதனை. தாயாக இருந்தால் எத்தனை துன்பங்கள்? ஆனாலும் தாயாக இருப்பதில்தான் எவ்வளவு பெருமை!

யாரையோ அடிப்பதற்காக ஓங்கிய கை, யார்மேலேயோ விழுந்ததுபோல், எந்தத் தாயையோ நினைந்துக் கொண்டு அர்ச்சகர் கூறிய அந்த வாக்கியம் தம் இதயத்தையே கசக்கிப் பிழிவதை வானவன்மாதேவி உணர முடிந்தது. அந்த விநாடி வானவன்மாதேவியின் மனத்தில் மின்னலைப்போல் ஒரு எண்ணம் உண்டாயிற்று. முகம் மலர, விழிகளில் சத்தியம் ஒளிர, அர்ச்சகரை நிமிர்ந்து பார்த்தார்.

"அர்ச்சகரே! நீங்கள் எனக்கு ஒரு சிறு உதவி செய்ய வேண்டும். இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கடந்து உள்ளே போய்க் கைமுடக்குத் தண்டனை நிறைவேறும் இடத்தில் நான் இங்கு வந்திருப்பதை வெளிக் காட்டிக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. நீங்கள் தயவுசெய்து இந்தப்





பணிப் பெண்ணையும் உடன் அழைத்துச் சென்று அந்தச்சோழிய கங்கையை மட்டும் இங்கே தனியாகக் கூப்பிட்டுக் கொண்டு வர ஏற்பாடு செய்யுங்கள்."

அர்ச்சகருக்கு மகாராணியின் அந்த வேண்டுகோள் ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு, "அப்படியே அழைத்து வர முயல்கிறேன், தேவி!" என்று கூறிப் புவனமோகினியையும் உடன் அழைத்துக் கொண்டு கூட்டத்துக்குள் புகுந்தார். சந்நிதிக்கு முன் தனியாக நின்ற மகாராணி பிறருடைய கவனம் தம்மால் கவரப்படக் கூடாதென்று நினைத்து யாரோ தரிசனத்துக்கு வந்தவள் போலத் தோன்றும்படி, ஒரு தூண் ஓரமாக ஒதுங்கி, ஒடுங்கி நின்றார். பாண்டி நாட்டின் மாபெருந் தாய்போன்ற அந்தத் தேவியின் மனம் எங்கோ ஒரு சிறிய ஊரில் கோவிலில் தொண்டு செய்யும் அர்ச்சகரின் மனைவியான மற்றொரு தாய்க்காக நெகிழ்ந்து உருகியது. உலகத்தில் எங்குமே எதற்காகவும் தாய்க்குலம் மனவேதனைப் படக் கூடாதென்கிற மாதிரி ஒரு பரந்த கருணை அந்த மகாராணியின் நெஞ்சில் அந்தச் சில கணங்களில் வந்து நிறைந்து கொண்டது. ஒரு தாயின் அன்பத்தை உணர இன்னொரு தாய். ஆகா! உலகத்துத் தாய்க்குலத்தின் இணையற்ற பெருமை அது.

அர்ச்சகரும், புவன மோகினியும் எப்படியோ அந்தச் சோழிய கங்கையை அழைத்து வந்து விட்டனர். அவளைச் சுற்றி ஒரு சிறு கூட்டமும் வந்தது.

அழுது அழுது சிவந்த கண்கள்; வெளிறிய முகம்; கலைந்த கூந்தல். முகம் முழுதும் தன் மகனின் உயிர் காப்பதற்கு வீறு கொண்டெழுந்த தாய்மை வெறி. "பார்! இதுதான் உலகத்தில் தாய்மைத் துடிப்பின் உண்மை ஓவியம்" என்று எழுதி ஒட்டி விருப்பது போன்ற முகம் அவளுக்கு. அவளைச் சுற்றிலும் பைத்தியத்தைப் பார்க்க வருவது போல் தொடர்ந்து வந்த கூட்டத்தை அர்ச்சகர் ஏதோ சொல்லி அதட்டி விரட்டினார்.

அந்தத் தாயும், அர்ச்சகரும், புவனமோகினியும், மகாராணி நின்று கொண்டிருந்த தூணுக்கு அருகே வந்தனர். அர்ச்சகரையும், புவனமோகினியையும் ஒதுங்கிச் செல்லுமாறு குறிப்புக் காட்டிவிட்டு அவளை நோக்கி, "வா! அம்மா உன் துன்பத்தைக் கேள்விப்பட்டேன். என் மனம் பெரிதும் கலங்கியது. உனக்கு மட்டுமில்லை, அம்மா! உலகத்துத் தாய்மார்களெல்லாரும் துன்பப்படவே பிறந்திருக்கிறோம். இந்த நாட்டு மகாராணி வானவன்மாதேவியைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். அவர் கூடத் தம் மகனை எண்ணித்தான் ஓயாமல் கலங்கிக் கொண்டிருக்கிறார். நாம் என்ன செய்வது? நாம் பெற்ற பிள்ளைகள் அசடுகளாக இருந்து விட்டால் அவைகளுக்கும் சேர்ந்து நாம்தான் வருந்தப்பட வேண்டியிருக்கிறது" என்று தாம் இன்னாரெனக் காட்டிக் கொள்ளாமல் மூன்றாவது மனிதர் தற்செயலாக அனுதாபப் படுவதுபோல் பேசினார் மகாராணி.

அந்தச் சோழிய நங்கை விக்கலும், விசும்பலுமாக வெடித்துக் கொண்டு வரும் அழுகையோடு சீறினாள்:—

"இவ்வளவு ஆறுதல் சொல்கிறீர்களே? உங்களுக்கு ஒரு மகன் இருந்து அவனும் இம்மாதிரித் திருடிக் கொண்டு ஓடி அகப்பட்டு விட்டால் அவன் கைமுக்குத் தண்டனை அடைவதைக் கண்டு உங்களால் பொறுமையாக இருந்துவிட முடியுமா? பெரிய ஒளவை மூதாட்டியைப் போல் கூப்பிட்டு விட்டு இருந்த இடத்திலிருந்து கொண்டே எனக்கு அறிவுரை சொல்ல வந்து விட்டீர்களே!......யார் நீங்கள்? உங்களுக்கென்ன அக்கறை இதில்?"

"அம்மா! நானும் உன்னைப்போல் ஒரு தாய். எனக்கும் ஒரு மகன் இருக்கிறான்." மகாராணி ஒவ்வொரு சொல்லாக நிறுத்திப் பதில் கூறினாள். வானவன்மாதேவியின் உள்ளத்தில் பேரிடியைப் பாய்ச்சியிருந்தாள் அந்தச் சோழிய நங்கை:—"உனக்கும் ஒரு மகன் இருந்து அவனும் இப்படித் திருடிக்கொண்டு ஓடி அகப்பட்டிருந்தால்..." சரியாகக் கேட்டிருந்தாள் அவள். "ஆம்! எனக்கும் மகன் இருக்கிறான். அவனும் ஒருவிதத்தில் திருடியிருக்கிறான்!" மகாராணி மனத்துக்குள் சொல்லிக் கொண்டார். அவருடைய மனம் வலித்தது; மிகவும் வலித்தது.

அத்தியாயம் 17

தாயாகி வந்த தவம்

திருவாட்டாற்றிலிருந்து சுசீந்திரத்துக்கு வந்திருந்த அந்தத் தாய் தன் சொற்களால் மகாராணியின் உள்ளத்தில் ஓங்கி அறைந்து விட்டிருந்தாள். எழுத்தாகிச் சொல்லாகி ஒலியாகிப் பொருள்பட்டுப் புரிந்த வெறும் சொற்களா அவை? ஒரு தாயுள்ளத்தின் கொதிப்பு, பெற்றவளின் பீடு, அன்னையின் ஆணவம்,—அவளுடைய வார்த்தைகளில் சீறிக் குமுறின.

அந்த வார்த்தைகள் நெஞ்சில் கிளப்பிய வலியைத் தாங்கிக் கொண்டு அதிலிருந்து விடுபட்டுத் தன் நிதானத்துக்கு வரச் சிறிது நேரம் ஆயிற்று வானவன்மாதேவிக்கு. ஒரு தாய் இன்னொரு தாய்க்கு விடுத்த அறைகூவலாக இருந்தது திருவாட்டாற்றுப் பெண்ணின் கேள்வி. அதன் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தலைகுனிந்து கொண்டு நின்ற மகாராணி நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பெண்ணும், அர்ச்சகரும், புவனமோகினியும் தமது முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் இன்னும் வேதனையாக இருந்தது அவருக்கு.

மற்றவர்கள் தன் முகத்தைப் பார்க்கவில்லையே என்று ஏங்கும் மனநிலையும் வாழ்வில் உண்டு. மற்றவர்கள் தன் முகத்தைப் பார்க்கிறார்களே என்று ஏங்கும் மனநிலையும் வாழ்வில் உண்டு. அன்று அவ்வளவு அவசரமாக யாருக்கும் தெரியாமல் சுசீந்திரத்துக்குப் புறப்பட்டு வந்திருக்காவிட்டால் இந்த இரண்டாவது நிலை மகாராணிக்கு ஏற்பட்டிருக்காது. அந்தக் கைமுக்

குத் தண்டனையைக் காணவும், அதற் காரணமான மகனின் தாயைச் சந்திக்கவும் நேர்ந்திருக்காது. அந்தத் தாயைச் சந்தித்திருக்காவிட்டால் அவள் அப்படி ஒரு கேள்வி கேட்டிருக்கவும் மாட்டாள்.

வானவன்மாதேவி, ஆத்திரமும், அலங்கோலமுமாக நின்ற அந்தத் தாயின் அருகே சென்று, அவளைத் தம் தோளோடு தோள் சேரத் தழுவிக் கொண்டார். புன்முறுவலும், சாந்தமும் தவமும் முகத்தோடு அவளை நோக்கி ஆறுதலாகப்பேசினார்:

"அம்மா! தாயானாலும் நீதி நியாயங்களுக்குக் கட்டுப்பட்டுத்தானே ஆக வேண்டும்? நீ அழுதும், அலறியும் என்ன பயன் விளையப் போகிறது?"

"நீதியாம்! நியாயமாம்! அவைகளை உண்டாக்கியவர்களைப் பெற்றவளும் தாய்தான். இந்த வறட்டு அறிவுரைகளை என் செவிகளில் திணிப்பதற்குத்தான் என்னை இங்கே கூப்பிட்டு அனுப்பினீர்களோ?"

"பதறாதே, அம்மா! என் வார்த்தைகளை முழுவதும் கேள். உலகத்து உயிர்களைப் படைத்ததால் கடவுளுக்கும், ஒரு மகாகாவியத்தை எழுதியதால் கவிஞனுக்கும், எவ்வளவு பெருமை உண்டோ, அதைவிட அதிகமான பெருமை ஒரு மகனைப் பெற்றதால் தாய்க்கு உண்டு. ஆனால் அந்தப் பெருமையை நாம் அடைவதற்கு நாம் பெற்ற பிள்ளைகளும் தகுதி உள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டாமா?"

மகாராணியின் கேள்விக்கு அந்தப் பெண்ணால் பதில் சொல்ல முடியவில்லை. கோபத்தால் அவளுடைய உதடுகள் துடித்தன. பளிங்குக் கண்ணாடியில் முத்துக்கள் உருள்வதைப் போல் அவளுடைய கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் உருண்டன. மகாராணி உரிமையையும், பாசத்தையும் தாமாகவே உண்டாக்கிக் கொண்டு நடுங்கும் கையால் அந்தப் பெண்ணின் கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னார்.

"உன் அழுகை என் நெஞ்சை வருத்துகிறது, அம்மா! நீ அழாதே. தாயாக வாழ்வதே பெண்ணுக்கு ஒரு தவம். அந்தத் தவத்தில் சுகபோக ஆடம்பர இன்பங்களுக்கு இடமே இல்லை. பெறுவதற்கு முன்னும் துன்பம்! பெறும் போதும் துன்பம், பெற்ற பின்னும் துன்பம். ஒரே துன்பம்—ஓயாத துன்பம்! அந்தத் துன்பம்தான் தாய்மை என்கிற தவம். எந்தப் பொருளின்மேல் அதிகமாகப் பற்றும், பாசமும் இருக்கிறதோ, அந்தப் பொருளைக் கூட இழக்கத் துணிவதுதான் தவம்!"

அந்தத் தாய் மகாராணியின் தோளில் சாய்ந்து முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். பதவியும், பொறுப்பும், பெருமையுமாகச் சேர்ந்து கொண்டு எந்த ஒரு அழுகையைத் தான் அழ முடியாமல் தடைப்படுத்தி வைத்திருக்கின்றனவோ, அதே அழுகையை—மகனுக்காகத் தாய் அழும் அழுகையை—அந்தப் பெண் தம் முன் அழுது கொண்டிருப்பதை மகாராணி இரு கண்களாலும் நன்றாகக் கண்டார்.

"இந்த ஏழைச் சோழியப் பெண்ணும் ஒரு தாய். நானும் ஒரு தாய்! இவள் ஏழையாயிருப்பதனால் பெரிய



நன்மை துன்பம் வந்தால் மனம் விட்டு அழ முடிகிறது. நான் மகாராணியாயிருப்பதனால் அப்படி அழக் கூடச் சுதந்திரமில்லை. நல்ல பதவி! நல்ல பெருமை! அழவும் உரிமையில்லை; சிரிக்கவும் உரிமையில்லை!" மகாராணி தம் மனத்துக்குள் நினைத்துக் கொண்டு வேதனைப்பட்டார். தம் தோளில் சாய்ந்திருந்த அந்தத் தாயை ஆறுதலாக அணைத்துக் கொண்டு முதுகைத் தடவிக் கொடுத்தார். தாயும், தாயும் அணைத்துக் கொண்டு நின்ற அந்தக் காட்சி கங்கையும், காவிரியும் கலந்தாற் போல் புனிதமாகத் தோற்றியது.

விலகி நின்று கொண்டிருந்த அர்ச்சகரும், புவனமோகினியும், அந்தக் காட்சியைக் கண்டு உள்ளம் உருகினர்.


பண்டிகை தினத்தன்று சிறந்ததொரு
மாடல் 717 : மாடல் U-717 ஏஸி/டிஸி செட், 5 வால்வுகள், 3 பாண்டுகள். மாடல் B-717 டிரை பாட்டரி செட்; 4 வால்வுகள், 3 பாண்டுகள்.
ரூ. 250/-
மாடல் 722 : மாடல் A-722 ஏஸி செட், மாடல் U-722 ஏஸி/டிஸி செட், 6 வால்வுகள், 3 பாண்டுகள்.
ரூ. 335/-



சென்னை ஸ்ரீ கிருஷ்ண கலாகேந்திரத்தின் அங்கத்தினர்கள் மயிலை, ரசிக ரஞ்சனி சபாவில் சமீபத்தில் "ஸ்ரீ கிருஷ்ண அவதாரம்" நாடகத்தை மிகவும் விமரிசையாக நடத்தினார்கள். ஆடிட்டர் கிருஷ்ண மூர்த்தி எ. சி. ஏ., கிருஷ்ண பரமாத்மாவாக வந்து மிக நன்றாக நடித்தார். நாரதராக வந்த கோத்தமங்கலம் சீனு, மற்றும் சகுந்தலா, விஜயலட்சுமி, மீனாட்சி யாவரும் நன்றாக நடித்தனர். நாடக டைரக்ஷனை ஆர். பட்டு ஐயரும், சங்கீத டைரக்ஷனைப் பத்தமடை சுந்தரமய்யரும் எத்துப் பாராட்டத்தக்க முறையில் தங்கள் பணியைச் செய்திருந்தனர்.

"அம்மா! தெய்வத்தின் சந்நிதியில் உலகத்தை யெல்லாம் காக்கும் ஆதி பராசக்தி போல் வழியில் வந்து என்னைக் கூப்பிட்டு எனக்கு ஆறுதலை கூறினீர்கள். நீங்கள் யார்? எங்கே யிருக்கிறீர்கள்? உங்கள் திருப்பெயர் என்ன? மறுக்காமல் எனக்குச் சொல்லுங்கள். என்னிடம் கூச்சமோ, தயக்கமோ கொள்ள வேண்டாம், நீங்கள்" என்று மகாராணியின் முகத்தை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள் அந்தச் சோழியப் பெண். அர்ச்சகரும், புவனமோகினியும் பொருள் பொதிந்த பார்வையால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தனக்கு ஆறுதல் கூறிக் கொண்டு தன் முன் நிற்கும் தாய் யாரென்று தெரிந்து கொண்டால் அந்த ஏழைப் பெண் எவ்வளவு பரபரப்பும், பதற்றமும் அடைவாளென்று புவனமோகினி மனத்துக்குள் கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள்.

மகாராணி அந்தப் பெண்ணுக்கு என்ன மறுமொழி கூறுவதென்று தோன்றாமல் நின்றாள். உதடுகள் பிரியாமல் சிரிக்கும் தன்னடக்கம் நிறைந்த கண்ணியமான சிரிப்பை மட்டும் மகாராணியின் இதழ்களில் காண முடிந்தது. அவருடைய உள்ளத்திலோ அந்தத் தன்னடக்கச் சிரிப்புக்குப் பின்புலமான சிந்தனைகள் மலர்ந்து கொண்டிருந்தன. மகனைக் கொதிக்கும் நெய்க் கொப்பரைக்குப் பலி கொடுத்து இழக்கப் போகிறோமே! என்ற துடிதுடிப்போடு தம் முன் கதறி நிற்கும் அந்தச் சோழியப் பெண்ணின் நிலையில் தம்மை, எண்ணிப் பார்த்தார் மகாராணி. எண்ணம் விசும்பிப் பொங்கியது!

"தாய்க்குப் பெண்ணாகப் பிறந்து, தானும் தாயாகித் தனக்குப் பிறந்த பெண்களையும் தாயாக்கித் தன் தாய் போன இடத்துக்குப் போய்ச் சேருவதுதான் உலகத்துப் பெண் இனத்தின் அவலக் கதை. உலகத்தின் முதல் பெண் பிறந்த நாளிலிருந்து இந்தத் துன்பக் கதை தொடர்ந்துகொண்டே வருகிறது. இந்தத் தொடர்பு முடியும் போது உயிர்க் குலமே அழிந்து விடும். கனமான பெரிய மாங்காய் கனமற்ற சிறிய காம்பில் தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தாய்மை என்ற ஒரு மெல்லிய அடிப்படையில் இந்தத் தொல்லைப் பழம்பெரும் பூமி இன்னும் தன் உயிர்த் துடிப்பை இழந்து விடாமல் இருந்து கொண்டிருக்கிறது."

சிந்தனைப் பெருக்கின் ஊடே எப்போதோ கேள்விப்பட்டிருந்த தாயைப் பற்றிய செய்யுள் ஒன்று மகாராணியாரின் நினைவில் குமிழியிட்டது.

"எனக்குத் தாயாகியாள் என்னை யீன்றிட்டுத்
தனக்குத் தாய்நாடியே சென்றாள் —
தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்த்தாய்க்
கொண்
டேகும் அளித்தாய் வகை."

'நீராழி உடுத்த நெடும்புவனமாகிய இந்த மண்ணுலகம்' — இது தாய்க் குலம் அளித்த பிச்சை. அந்தத் தாய்க் குலத்தில் ஒருத்தி துன்பம் அடைய அதை மற்றொருத்தி பார்த்துக் கொண்டிருப்பதா? 'நீயும் ஒரு தாயாக இருந்தால் — உனக்கும் ஒரு

மகன் இருந்தால் — அவனும் திருடி விட்டு அகப்பட்டுக்கொண்டிருந்தால்? இப்படிக் குத்திக் காட்டிக் குமுறிக் கேட்ட பின்பும் வாளா இருக்கலாமா?

மகாராணியின் உள்ளத்தில் ஒரு பெரிய போராட்டம். நினைவில் வேதனை. சிந்தனையில் தடுமாற்றம். அப்படியே பிரமை பிடித்தவர்போல் சிந்தனையிலிருந்து விடுபடாமல் நின்றார் அவர்.

"என்னம்மா திகைக்கிறீர்கள்? என் கேள்விக்கு மறுமொழி சொல்வதற்கு உங்களுக்கு விருப்பமில்லையா?" அந்தப் பெண் மறுபடியும் கேட்டாள். அவள் குரல் பணிவோடு குழைந்து ஏங்கியது.


"பெண்ணே! நான் யார் என்பதை நீ தெரிந்துகொள்வதைவிடத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது. ஆனால் ஒன்று மட்டும் நான் உனக்குச் சொல்ல முடியும். நானும் உன்னைப் போல் ஒரு துர்ப்பாக்கியவதி. கொஞ்சம் அதிகமான புகழும் பெருமையும் உள்ள துர்ப்பாக்கியவதி. வேறுபாடு அவ்வளவுதான். உன்னைப் போலவே பிள்ளையைப் பெற்றதால் தொல்லையை அடைந்து கொண்டிருக்கும் தாய்தான் நானும். இதைத் தவிர வேறு என்ன நான் உனக்குச் சொல்ல வேண்டும்?"

சொல்லி விட்டுப் பெருமூச்சுவிட்டுக் கொண்டே அந்தப் பெண்ணின் கண்களைக் கூர்ந்து பார்த்தார் மகாராணி. அவைகளில் ஏமாற்றம் தேங்கிப் பதிந்திருந்தது.

"நான் வருகிறேன். ஆத்திரத்தில் உங்கள் மனம் புண்படும்படி ஏதாவது பேசியிருந்தால் என்னை மன்னித்து மறந்து விடுங்கள்!" அந்தப் பெண் மகாராணியிடம் விடைபெற்றுக் கொண்டு வந்த வழியே திரும்பிக் கைமுக்குத் தண்டனை நடக்கும் மண்டபத்தை நோக்கி நடக்கலானாள்.

"உன்னை மன்னித்து விடுகிறேன். ஆனால் மறந்து விடச் சொல்கிறாயே; அது மட்டும் என்னால் முடியவே முடியாது. உன்னை என்றுமே நான் மறக்க மாட்டேன்."

மகாராணியின் இந்தச் சொற்கள் வேகமாக நடந்து சென்ற அவள் செவிகளில் விழுந்தனவோ, இல்லையோ? அவள் திரும்பிப் பாராமல் வேகமாக நடந்து சென்று கூட்டத்தில் கலந்து விட்டாள்.





இந்தோர் தென்னிந்திய கலைச் சங்கம், அபிநவ கலா சமாஜ் ஆகியவற்றின் ஆதரவில் ஸ்ரீமதி கமலா லக்ஷ்மணனின் நாட்டியம் விமரிசையாக நடைபெற்றது. இவ் விழாவுக்குத் தலைமை தாங்கிய மத்தியப் பிரதேச கல்வி அமைச்சர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா நடனமாடிய கமலா லக்ஷ்மணனை யும், குமாரி ராதாவையும் மிகவும் பாராட்டினார்.

புவனமோகினியும், அர்ச்சகரும் மகாராணி வானவன்மா தேவிக்கு அருகில் நெருங்கி வந்தார்கள்.

"தேவி! அந்தப் பெண்ணிடம் நாங்கள் இன்னாரென்ற உண்மையைக் கூறாததே நல்லதாயிற்று. கூறியிருந்தால் உங்கள் கால்களைப் பிடித்துக் கொண்டு தன் மகனைக் காப்பாற்று மாறு கெஞ்சி விருப்பாள்" என்றார் அர்ச்சகர்.

"அர்ச்சகரே! அவள் நிலையில் யார் இருந்தாலும் அப்படிக் கெஞ்சுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?"

மகாராணியிடமிருந்து இந்தப் பதில் கேள்வியை அர்ச்சகர் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

"வேறொன்றும் செய்ய முடியாது தான். ஆனால் அதற்காக யாருக்கும் தெரியாமல் இரகசியமாக இங்கே வந்திருக்கும் உங்களிடம் மகனைக் காப் பாற்றச் சொல்லி முறையிட்டால் நீங்கள் என்ன செய்ய முடியும்?"

"என்ன செய்ய முடியுமோ, அதை இப்போதும் நான் செய்யத்தான் போகிறேன், அர்ச்சகரே! ஆனால் நான் தான் செய்தேன் என்பதை வெளிக் காட்டிக் கொள்ள மட்டும் எனக்கு விருப்பமில்லை."

"என்ன செய்யப் போகிறீர்களோ?" அர்ச்சகர் பரபரப்படைந்து வினவினார்.

"நான் செய்யப் போவதில்லை. எனக்காக நீங்களே அதைச் செய்துவிட வேண்டும். இந்தச் சமயத்தில் நான் இங்கு வந்துபோனது யாருக்குமே தெரிய வேண்டாம்."–

இப்படிக் கூறிக் கொண்டே தமது வலது கை விரலில் அணிந்திருந்த அரசமுத்திரை யோடு கூடிய கணையாழி மோதிரத்தைக் கழற்றினார் மகாராணி. அர்ச்சகர், புவன மோகினி, இருவருக்கும் விழிகள் ஆச்சரியத்தால் அகன்றன.

"கைமுக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு இருக்கும் தெய்வ நீதி மன்றத்துத் தலைவரிடம் இந்த மோதிரத்தைக் காண்பியுங்கள். அந்தத் தாயின் மகன் இருடிய போன அணிகலன்களைப் போல் நான்கு மடங்கு பெறுமானமுள்ள பொன்னை அவன் அபராதமாகச் செலுத்தினால் போதும். கைமுக்குத் தண்டனை வேண்டாமென்று நான் கூறியனுப்பியதாகச் சொல்லுங்கள். அந்தத் தாயின் பெருமையைக் காப்பாற்றுவதற்காக அபராதம் விதிக்கப் பெறும் நான்கு மடங்கு பொன்னை நானே அரண்மனையில் இருந்து கொடுத்து அனுப்பிவிடுகிறேன். இது உமக்கும், நீதிமன்றத்தின் தலைவருக்கும் தவிர வேறெவர்க்கும் தெரிய வேண்டாம்."


சிறிய மகர மீன் இலச்சினையோடு கூடிய அந்த மோதிரத்தைப் பயபக்தி யோடு இரு கைகளையும் நீட்டி வாங் கிக் கொண்டார் அர்ச்சகர்.

"காரியம் முடிந்ததும் மோதிரம் பத்திரமாக எனக்குத் திரும்பி வந்து சேர்ந்துவிட வேண்டும்."

"அப்படியே செய்கிறேன், தேவி!" என்றார் அர்ச்சகர்.

"புவனமோகினி! இனி நமக்கு இங்கு வேலை இல்லை. வா. நாம் போகலாம்." மகாராணி புவனமோகினியை உடன் அழைத்துக் கொண்டு சிவிகையில் ஏறுவதற்காக வெளியேறினாள். அர்ச் சகர் முத்திரை மோதிரத்தோடு கைமுக்கு மண்டபத்துப் பக்கம் சென்றார்.

(தொடரும்)


Lakmé
டால்கம் பௌடர்
யூ டி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு



தலாக்

மணம் மிக்க ரோஜா மலருக்காக ரோஜாச் செடியின் முட்களை நாம் மறந்து விடுகிறோம். சுவையுள்ள பாலுக்காகப் பசு மாட்டைப் பேணி வளர்ப்பதிலுள்ள சிரமங்களை மறந்து விடுகிறோம். நினைக்கும் போதே இனிக்கும் தீஞ்சுவைச் சுளைகளுக்காகப் பலாப்பழத்தின் கடினமான தோலையும், அதன் உள்ளிருக்கும் சடையையும், பிசினையும் மறந்து விடுகிறோம்.

இதேமாதிரி சினிமாப் படங்கள் பார்க்கும் போது சில நல்ல அம்சங்களுக்காகப் பல உபயோகமற்ற கேலிக் கூத்துக்களையெல்லாம் மறந்துவிட வேண்டியிருக்கிறது. ஆனால் அனேகமாகப் பல படங்களில் ஒன்றுமே இல்லாமல் (இலவு காத்த கிளி போல்) ஏமாற்றம் அடைய நேருகிறது; இன்னும் சில சமயங்களில் குளிக்கப் போய்ச் சேற்றை வாரிப் பூசிக் கொண்ட கதையாக, 'ஏன் இந்தப் படத்தைப் பார்த்தோம்!' என்று மனவேதனை அடையவும் நேருகிறது.

நான் மேலே கூறியிருக்கும் அநுபவம் நம் தமிழ்ப் படங்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்பதில்லை. ஆங்கிலம், ஹிந்திப் படங்களுக்குங் கூடப் பொருந்தும். ஆங்கிலப் படங்கள் எல்லாவற்றையும் நாம் பார்த்து ரஸித்துவிட முடியாது. கேட்டுச் சகிக்க முடியாத மேல்நாட்டு இசை நிகழ்ச்சிகளை முக்கிய அம்சமாகக் கொண்ட படங்கள் எவ்வளவோ நம் நாட்டுக்கு வருகின்றன. அவைகளைப் பார்க்கும்போதும்கூட நமக்குச் சங்கடமாகத்தான் இருக்கின்றது.

தாந்தன்

அநுபம் சித்ராவின் தயாரிப்பான "தலாக்" (விவாக ரத்து) என்னும் ஹிந்திப் படம் பார்த்தேன். அதிகப்படியான கவர்ச்சியூட்டும் விளம்பரங்கள் எதுவும் இன்றி மிகவும் தன்னடக்கத்துடன் வெளிவந்திருக்கும் படம் என்று அதைக் கூற வேண்டும்.

சுவாரஸ்யமான கதைப்போக்கு, உள்ளத்தை நெகிழ்த்தும் உருக்கமான பாடல்கள், இயல்பான நடிப்பு இவ்வளவும் சேர்ந்து இந்தப் படம் வெற்றியடைய உறுதுணையாயிருக்கின்றன. திரைக்கதையைச் சுலபமாகவும், அலுப்பில்லாமல் மேலும் மேலும் பார்க்கத் தூண்டும் விதத்திலும் அமைத்திருக்கும் பண்டிட் முக்ராம் சர்மா பாராட்டுக்குரியவர்.

காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட இருவர் வாழ்வில் குழந்தை காரணமாகச் சாதாரணமாகவே புகுந்து விட்ட பூசல் விவாகரத்து வரையில் கொண்டு போய் விட்டு விடுகிறது. தாயை இழந்த இந்துபாலா ஒரு பள்ளிக்கூடத்தில் பாட்டு சொல்லித் தரும் உபாத்தியாயினி. அவள் வீட்டுக் கீழ்ப் பகுதிக்குக் குடி வந்த இளைஞன் ரவிசங்கர் விவாகமாகாதவன். சுதந்திர தினத்தன்று பொதுக் கூட்டத்

நில் அவன்பாடியபாட்டு அவளைக்கவர்ந்து விடுகிறது. கவர்ச்சி அன்பாக மாறிநெருங்கிய காதலாகிக் கல்யாணமும் நடக்கிறது. குழந்தையும் பிறந்து விடுகிறது. பிறகு தான் திரைக் கதையிலும் ஒரு வேகம் பிறக்கிறது. அவளுடைய தந்தை சீட்டாட்டத்தில் ஏராளமாகப் பணத்தை இழக்கிறார். விவாகத்துக்கு முன்பே அவள் உபாத்தினிமைத் தொழிலை விட்டு விட்டபடியினால் தந்தையின் அபரிமிதமான செலவுக்குக் கணவன் கையையே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அத்துடன் அவன் குழந்தையை வளர்க்கும் விதம் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவன் கண்டிக்கிறான். இதன் காரணமாகத் தம்பதிகளுக்குள் பூசல் உண்டாகிறது. கடைசியில், அவள் மீண்டும் பழைய உபாத்தினிமைத் தொழிலையே மேற்கொள்ள நேரிடுகிறது. இதை விரும்பாத கணவன்



குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறி ஹோட்டலில் குடியேறுகிறான். அவள் போய்க் கெஞ்சியும் அவன் குழந்தையை அவளிடம் விடத் தயாராயில்லை.

இந்தக் கதையில் பிரமாதமான காதல் காட்சிகள் இல்லை: காதல் பாட்டுக்களும் இல்லை. காதலர்களுக்குக் குறுக்கே முளைத்துக் கழுத்தை அறுக்கும் வில்லன் இல்லை. காதலர்களுக்கென்று ஏற்படும் கஷ்டங்கள் இல்லை. பிரமாதமாகச் சொல்லக்கூடிய 'சஸ்பென்ஸ்' எதுவும் திரைக் கதையில் இல்லை. பின்பு இந்தப் படத்தில் என்னதான் இருக்கிறது என்கிறீர்களா?

உள்ளத்தை உருக்கும் குழந்தை மனப் பிரதிபலிப்பு படம் முழுவதும் இருக்கிறது. கள்ளங்கபடமற்ற குழந்தைப் பேச்சு இருக்கிறது. சாதாரணத் திரைக் கதை குழந்தை அஷிஷின் அபாரமான நடிப்பினால் பெருமையடைந்து விடுகிறது.

இந்தப் படத்தில் வசனம் குறைவாகவே இருக்கிறது. அதுவும் குழந்தை பேசும் பேச்சு மிகக் குறைவு. ஆனால் அது மனத்தில் நிறைந்து விடுகிறது. படத்தில் குழந்தைக்கு நடிப்பும் பேச்சும் சொல்லிக் கொடுத்த மாதிரியே இல்லை. அது தானாகவே இயல்பாகப் பேசுகிறமாதிரி இருக்கிறது. இது டைரக்டரின் நல்ல திறமையைக் காட்டுகிறது.

பாரதப் பண்பு, பாரத நாட்டுப் பெண்களின் பெருமை, சீதாதேவியின் மகிமை இவற்றை யெல்லாம் பாராட்டி ஒரு பாட்டு பாடப்படுகிறது. படம் ஆரம்பிக்கும்போதே, பள்ளிக்கூடத்தில் பாடப்படும் பாட்டு இது. மனத்தில் எடுத்த எடுப்பில் இடம் பிடித்துக் கொள்ளுகிறது.

ஆனால், படத்தில் மேல்நாட்டுப் 'பாணி' உடைகளுக்குப் பதிலாக நம் நாட்டு உடைகளைக் கொடுத்திருந்தால், பாரத நாட்டுப் படம் பார்க்கிறோம் என்னும் பெருமிதம் படம் பார்ப்பவர்கள் உள்ளத்தில் இருந்திருக்கும். அதற்கு இடம் இல்லாமற் போய் விட்டது.

இந்தப் படத்தில் ஒரு பெரிய அதிசயம் கண்டேன். அது நடன நிகழ்ச்சி எதுவும் இல்லாததுதான். அனேகமாக எல்லாப் படங்களிலும் அலுக்காமல் பலவிதமான நடனங்களைப் பார்த்துக் கொண்டுவரும் எனக்கு இந்த அதிசயம் தாங்கவில்லை.

விவாகரத்து விஷயத்தை நீதிமன்றம் வரையில் கொண்டு போகாதது பாராட்டப்பட வேண்டிய அம்சம்.

இந்துபாலாவின் தந்தை அவ்வளவு இரைச்சல் போடுவது சகிக்கவில்லை.

காமினி கதம் கதாநாயகி இந்துபாலாவாக வருகிறார். கச்சிதமாக நடிக்கிறார்.

ராஜேந்திரகுமார் கதாநாயகன் ரவி சங்கர் பாகத்தை ஏற்று மிகவும் நன்றாக நடிக்கிறார். காதல், பரிகாசம், வெறுப்பு, கோபம் முதலிய ரஸங்கள் அவர் முகபாவங்களில் நன்கு உருவாகின்றன.


வேலைக்காரி தாராவும் அவள் கணவனும் படத்தில் கொஞ்சம் அதிகமாகவே பங்கெடுத்துக் கொள்ளுகிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ரவிசங்கர் சுதந்திர தின விழாவில் பாடும் பாட்டு மீண்டும் கேட்க வேண்டும் என்ற ஆவலைத்தூண்டுகிறது. பாட்டின் பின்னணியாகக் காட்டப்படும் காட்சிகளும் நன்றாயிருக்கின்றன.

ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு இவ்வளவு சுவாரஸ்யமான கதையைப் புனைந்து படமாக்கி இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

குழந்தையின் மழலைப் பேச்சுக்காகவும், சிறந்த நடிப்புக்காகவும், இனிய பாடல்களுக்காகவும் யாரும் போய்ப் பார்க்கக் கூடிய நல்ல படம் ''தலாக்.''


வாதத்திற்கு வழியேது இல்லை! உங்கள் பணத்திற்கு தரம் உயர்ந்த தேநீர், மிகுந்த கோப்பைகள் தருவது ப்ரூக் பாண்ட் தேயிலைதான்!
வழக்குக்கு இடமேது? தனிச்சிறப்புற்ற பாக் செய்யும் முறை ஒன்றே, ப்ரூக் பாண்ட் தேயிலையின் பரிசுத்தத்திற்கு சாட்சியாக விளங்குகின்றதே!
முடிவு கூறுமிடத்து, மற்றெல்லாத் தேயிலையை விட மக்கள் யாவரும் விரும்பி அருந்துவது ப்ரூக் பாண்ட் தேயிலையையே! சந்தேகமே இல்லை!
எப்பொழுதும் இன்பம் தப்பாது அளிப்பது
ப்ரூக் பாண்ட் தேயிலையே
ப்ரூக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்
BB 272K




நிச்சயமான
குணம்
ஆபத்தில்லாதது
வயிற்றுக் கோளாறுகளுக்கு
நம்பகமான நிவாரணம்
HEWLETT'S
MIXTURE
அபின் கலந்ததும் கலவாததும் 4 அவுன்ஸ் 10 அவுன்ஸ் பாட்டில்களில் கிடைக்கும்.
உடனே குணம் தெரியும்—எல்லா வலிகளையும் போக்குகிறது. ஜீரண சக்தியை ஊக்குகிறது. அதிகப்படியான புளிப்பை நீக்கி வயிற்றுப் பொருமலையும் போக்குகிறது. குடல் சம்பந்தமான கோளாறுகளுக்குக் கைகண்ட ஔஷதம். வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்டது
வி.ஜே.ஹியூலெட் & சன் (இந்தியா) லிமிடெட்
சென்னை.1.



பிரிப்மென் மற்றும்
ஸுலேகா
இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனாக்கள்
PENMEN'S INDUSTRIAL SERVICES



விரும்பத்தக்க
நீளமான
செழிப்பான
கூந்தல்
ரேமி
கூந்தல் வளர்க்கும் டானிக்



64

முனிவருடைய தனிப் பெருமை என்னவென்றால் தாம் உபதேசிக்கும் உபதேசத்தின் கஷ்டத்தை நன்றாக அறிந்து சொல்லுகிறார். அதை மறப்பதில்லை. வெற்று உபதேசக்காரரைப் போல் அல்ல அவர் சொல்லுவது.

உனக்கு ஒருவன் தீமைக்குமேல் தீமை செய்து விடுகிறான்—கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போன்ற தீமை. உனக்குக் கோபம் பொங்குகிறது. அது இயற்கை. ஆயினும், மகனே, அதனுடன் கூடுமாயின் போர் செய். வெல்வாய் என்று உபதேசிக்கிறார்.

இணர்எரி தோய்வுஅன்ன
இன்னா செயினும்
புணரின் வெகுளாமை
நன்று.

இணர்எரி தோய்வுஅன்ன-பல கொழுந்துகள் விட்டு எரியும் நெருப்பைப் போல்; புணரின்-கூடுமானால்.

கோபத்தை அகற்றுவதால் நீ ஒரு நஷ்டமும் அடைய மாட்டாய். அது ஒரு நற்பொருள் அல்ல. அதை அகற்றினாலும் நஷ்டமும் இல்லை. லாபம் உண்டு. நீ அடைய விரும்பும் பொருளை அதைவிடச் சீக்கிரமே கோபத்தை அகற்றுவதன் பயனாக அடையலாம். இது பெரியோர் தம் அனுபவத்தில் கண்ட உண்மை. அதை உபதேசிக்கிறார்.

உள்ளியது எல்லாம்
உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி
எனின்.

உள்ளத்தால்-மனத்தால்; உள்ளான்-நினைக்காமல் இருப்பவன்; உள்ளத்தால் உள்ளான் வெகுளி எனின்-மனத்தில் கோபத்துக்கு இடம் தராதவனாயின்.

வெளியில் மட்டுமல்ல, மனத்திலேயும் கோபம் இல்லாமல் காப்பவன் அவன் விரும்புவதெல்லாம் அடைவான். நினைத்த காரியம் எல்லாம் கைகூடும். தவம் சித்தியடையும்.

கோபத்தைத் தீர அகற்றிய ஒருவருடைய ஆன்மா தெய்வ சக்தி அடையும். அதை அனுபவத்தில் காணலாம். கோபத்தைப் பூரணமாக விலக்கியவர்கள் துறவிகளே யாவார். முனிவர்களின் சக்தியை அடைவார்கள்.



இதோ மற்றொரு மகாத்மா

கல்கி 21-12-58 இதழில் "நோய்க்கு மருந்து" என்ற தலைப்பில் "நவீன தேவாலயங்கள் நமக்கு உணவும் உடையும் கொடுத்து விட்டு, உள்ளத்தின் நிறைவைப் பறித்து விடும். அப்படிப் பறிக்காமல் இருக்க இவ்வுலகுக்கு மற்றொரு மகாத்மா தேவை" என்று எழுதியிருப்பது பொய்யாத மொழியாம். ஏனெனில் இத்தலைப்பு இன்றைய உலகத்தின் இருண்ட கேவல நிலையை - விஞ்ஞானமே பெரிதெனப் பாராட்டிச் சீராட்டி, எல்லாம் வல்ல ஈசனிடம் பக்தி செய்யாமல் அல்லலுற்று, ஆன்மாவின் ஆணைக்கு இணங்கி ஒழுகாது, அழிவை நோக்கிச் செல்லும் அவல நிலையைச் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகிறது.

இன்று உலகுக்கு ஞானமும் பக்தியும் சேர்ந்த ஒரு ஒப்பற்ற கலங்கரை விளக்காகத் திகழும் பேரறிஞர் இராஜாஜி அவர்கள் 'மற்றொரு மகாத்மா' வெனில் மிகையாகுமோ? இராஜாஜி அவர்களின் பொய்யாத அமுத மொழியைப் பின்பற்றி நடப்பின் இவ்வுலகத்தின் துன்பங்களெல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல் நீங்கும். இவ்வாறு தக்க காலத்தில் பயன் கருதாது செய்யும் தொண்டுக்கு உருவே ஆகிய இராஜாஜி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறேன்.

அவிநாசி
19-12-58 வே. பாலசுப்பிரமணியன்

நோய்க்கு மருந்து

கல்கி இதழில் வெளியான 'நோய்க்கு மருந்து' என்ற கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். ஆன்மீக நெறியின் இன்றியமையாமையை நினைவூட்டும் வகையில் அது அமைந்து போற்றற்குரியது. நாமும் ஆன்மீக நெறியை மறந்து மேற்கத்திய நாடுகள் சென்ற போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அதனாலோ என்னவோ, பத்திரிகைகள்கூட, தார்மீக உணர்ச்சியில் சிறந்து விளங்கிய இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமலிங்க சுவாமிகள் போன்ற பெரியோர் பலரை மக்களுக்கு நினைவூட்டுவதில்லை. அக்குறையை நீக்கும் வகையில், அப் பெரியோர்க்குக் கல்கியில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆன்மீக நெறியில் தளர்ச்சியுற்றிருக்கும் இக்காலத்தில், இத்தகைய சான்றோரையும் அவர்தம் அருஞ் செயலையும் அடிக்கடி நினைப்பூட்டுவது நமக்கு அருமருந்தாகப் பெரிதும் பயன்படும்.

இராஜபாளையம்
27-12-58 க. பாலசந்திரன்

நிறுத்த வேண்டாம்

தென்னிந்திய ரயில்வேயினர் 1-1-59 முதல், நெ. 656 ரயில் வண்டிப் போக்குவரத்தை நிறுத்தி விடுவதாகத் தீர்மானித்து முடிவு செய்திருக்கின்றனர். அது ஆயிரக்கணக்கான பிரயாணிகளுக்குச் சிரமத்தையும் கஷ்டத்தையும் கொடுக்கும். குடந்தையிலுள்ள பெரிய ஸ்தாபனங்களிலும் சிறிய ஸ்தாபனங்களிலும் வேலை பார்க்கும் சிப்பந்திகள் பாபநாசத்திலிருந்து குத்தாலம் வரையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களையடுத்த கிராமங்களிலிருந்தும், மற்ற சுற்றியுள்ள வட்டாரங்களிலும் உள்ள சிறிய கிராமங்களிலிருந்தும், கும்பகோணத்துக்குத் தினந்தோறும் காலை வந்து கொண்டு மேற்படி ரயில் மூலம்தான் இரவு வீட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த வண்டியை நிறுத்துவது, வேலையில் இருந்து கொண்டு குடும்பம் நடத்தும் ஏழைகளுக்கும், மற்ற பொதுஜனங்களுக்கும் பெரிய கஷ்டத்தை உண்டுபண்ணி விடும்.

தேப்பெருமாநல்லூர்
26-12-58 அ. வெங்கட்ராமய்யா

உலகத்துக்கோர் அதிசயம்

இன்று காலை 21-12-58 'கல்கி' இதழில் தலையங்கத்தில் முதலிடம் கொடுத்திருந்த 'இலங்கைக்கு எச்சரிக்கை' என்ற தலைப்பின் கீழ் இலங்கைவாழ் இந்தியரின் மனித உரிமையற்ற அவல நிலையை வெள்ளிடைமலைபோல் எடுத்துக் காட்டியதற்காகத் தங்கள் பத்திரிகைக்கு நான் ஒரு இலங்கைத் தமிழன் என்ற சார்பில் நன்றி செலுத்துகிறேன். இதுவரையும் நேரு அரசாங்கம் இப் பிரச்னையைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் இருந்தும், தாங்களாவது அண்டை நாட்டார் என்ற அடிப்படையில் ஆதரவு காட்டி இவ்வநீதியை இடித்துக் காட்டியதற்கு நன்றி.

அன்று கொடும் விலங்குகள் வாழும் காடாகக் கிடந்த காட்டை இந்தியத் தமிழன் தன் ஓயாத உழைப்பினால் பொன் விளையும் நாடாக மாற்றினான். ஆனால் இன்று அவர்களின் நிலை படுத்துறங்கவும் பாய் இல்லையே என்பதுதான். அப்பேர்ப்பட்டவர்களைத்தான் திரு பண்டாரநாயகாவின் ஆட்சி பிறப்புரிமையையும் மனித உரிமையையும் அபகரித்து அல்லற்படுத்துகிறது.

இவ்வித நிகழ்ச்சிகள் உலக சரித்திரத்திலேயே நிகழ்ந்ததாகவோ நிகழுவதாகவோ தெரியவில்லை. இவ்விழிய செயலால் இலங்கை என்றென்றும் அழியாத அபகீர்த்தியைத் தேடிக்கொண்டு விட்டது

மேஜை

என்பதை மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.

பட்டுக்கோட்டை
20-12-58
கே. ஆர். தங்கையா

இணையற்ற விமர்சனம்

'தி டென் கமாண்ட்மெண்ட்ஸ்' என்ற படத்தை இம்மாதம் 18-ம் தேதி வெகு கஷ்டங்களுக்குப் பிறகு பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பல பத்திரிகைகளில் வெளிவந்த விமர்சனங்களிலிருந்து இதன் சிறப்பை அறிய முடிந்தது. இருந்தபோதிலும் 21-12-58ம் தேதி "கல்கி"யில் 'இணையற்ற படம்' என்ற தலைப்பில் வெளியான கர்நாடகத்தின் விமர்சனத்தைப் பார்த்து, எனக்கு விளங்காத கட்டங்களை விளக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது.

எப்பொழுதுமே கர்நாடகத்தின் சினிமா விமர்சனங்கள் ஒளிவு மறைவு இல்லாமல் இருக்கும் என்பது இந்த ஒப்பில்லா ஆங்கிலப் பட விமர்சனத்தின் மூலம், தெளிவாகிவிட்டது.

புதுச்சேரி
22-12-58
நாகமணி

அதற்கும் பஞ்சமா?

தேவர் யாரேனும் தாலுகா அலுவலகத்துக்கு மாலை 6-மணிக்கு மேல் சென்றால், சர்க்கார் குமாஸ்தாக்கள் ராந்தல் விளக்குகளுக்கு முன் அமர்ந்து மண்ணெண்ணெய்க் கரிப் புகையைச் சுவாசித்துக் கொண்டிருக்கும் நிலைகண்டு ஒரு துளி கண்ணீர் சிந்தத்தான் செய்வார்கள். அரசாங்கத்தின் முக்கிய வருவாயான நிலவரியை வசூலித்துத் தரும் இந்தக் காரியாலயங்களுக்கு மின்விளக்குகள் கிடையா. தாலுகா அலுவலகங்களில் மின்விளக்குகள்தான் இல்லை யென்றால், அமர்ந்து எழுத நல்ல மேஜை நாற்காலிகளுக்குக்கூடப் பஞ்சம் ஏற்பட்டு விடுகிறது. ஊதியக் குறைவினால் முன்பே உற்சாகமற்றிருக்கும் இவ்வூழியர்களுக்கு மற்ற வகைகளிலாவது சிறிது உற்சாகம் மூட்ட அரசாங்கம் முனைந்தால், நிர்வாகத்துக்கு நல்லது நடக்கும்.

திருக்கோயிலூர்
22-12-58
ரா. ராஜசேகரன்

ரசமான கட்டுரை!

திரு க. கா. சுப்ரமணியம் அவர்கள் எழுதிய 'பெஷீப் பாதிரியார்', 'ஆனந்தரங்கம் பிள்ளை' ஆகிய இரண்டு கட்டுரைகளையும் படித்தேன். ஆனந்தரங்கம்பிள்ளை பற்றிய கட்டுரை ரசமாக அமைந்திருக்கிறது. இலக்கியம், தமிழ் என்றெல்லாம் பிரமாதமாகக் கூச்சல் போடுகிற தமிழர்கள் எவ்வளவு அசட்டர்களாக இருக்கிற நல்ல சொத்தை விட்டு விட்டு, குப்பை மேடுகளையும் பாழ்வெளிகளையும் பராமரித்துக் கொண்டிருக்கும் வீணர்களாக இருக்கிறார்கள் என்பதை ஆனந்தரங்கம் பிள்ளை பற்றிய கட்டுரை நன்கு எடுத்துக் காட்டுகிறது. ஆனந்தரங்கம் பிள்ளைக்கும் வசன இலக்கியத்துக்கும் சம்பந்தம் இருக்க முடியும் என்பதே தமிழர்களுக்குப் புதுமையாக, வியப்பாக இருக்கும். ஆனந்தரங்கம் பிள்ளை என்கிற அருமையான சிற்பத்தின்மேல் ஒளி பாய்ச்சிக் காட்டுகிறது கட்டுரை.

அழகியபாண்டியபுரம்
22-12-58
கே. ஏ. நம்பி

பாரபட்சம்

எங்கள் ஊரில் கடந்த தீபாவளி சமயம் கைத்தறி மொத்த சில்லறை — கூட்டுறவு அல்லாத-விற்பனை வெகுவாகக் குறைந்து விட்டது. இதற்குக் காரணம் விசேஷ விற்பனை சமயம் சங்கங்களுக்கு அளிக்கும் ரிபேட் முறையால் தனிப்பட்ட வியாபாரிகளின் வியாபாரம் வெகுவாகக் குறைந்தது. இந்த நிலை ராஜ்யம் முழுதும் நிகழ்ந்துள்ளது. இந்த நிலை நீடித்தால் கூடிய சீக்கிரத்தில் ராஜ்யத்திலுள்ள தனிப்பட்ட மொத்த, சில்லறை கைத்தறி ஜவுளி வியாபாரிகளின் கதி அதோகதியாக முடியும்.

கும்பகோணம்
9-12-58
வி. லட்சுமணப்பா
உதவித் தலைவர்,
ஜவுளி வர்த்தகர் சங்கம்.

அரசாங்கம் கவனிக்க வேண்டும்

எங்கள் ஊர் திருவாண்மியூரின் பழைய வாரவழி கிராமத்தில் பக்கிங்காம் கால்வாய் படகுத் துறையும் 19-ம் எண் சர்க்கார் பஸ் ஒன்றும், ஏ.டி.எம். சர்வீஸ் பஸ்கள் மூன்றும் நின்று சென்னை செல்லுகின்றன. இங்கு வாழுபவர்களுக்கும், பொது மக்களுக்கும் சர்க்கார் எடுத்துக் கொடுத்த குடிநீர்க் கிணறு உப்பு நீராக உள்ளது என்று சைதாப்பேட்டை வட்டார அபிவிருத்தி அதிகாரிக்கு எடுத்துக் கூறி, கிராம எதிர்புறத்தில் உள்ள சர்க்கார் புறம்போக்கில் கிணறு எடுத்துக் கொடுக்க கோரினோம். ஆனால் இன்று வரை ஒன்றும் தெரியவில்லை. நாங்கள் எல்லோரும் வெகுதூரம் தென்னந்தோப்பில் உள்ள குட்டையில் குடி தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்துதான் புழங்குகிறோம். விரைவில் எங்களுக்குக் குடிநீர் எடுத்துக் கொடுப்பதற்குக் கோருகிறேன்.

திருவான்மியூர்
20-12-58
பி. நா. சாரங்கபாணி



சென்னையில் பொருட்காட்சி

வேலன்

கடந்த டிஸம்பர் மாதம் 21-ம் தேதி வைகுண்ட ஏகாதசி புண்ணிய தினத்தன்று, சென்னை நகரில், தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில் அகில இந்திய காதி சுதேசி பொருட்காட்சி விழாவை, இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ கோவிந்த வல்லபபந்த் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

"ஏகாதசி தினத்துக்கும் சுதேசிபொருட்காட்சிக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்கலாம். சிந்தித்துப் பார்த்தால் 'உண்டு' என்பது விளங்கும்.

நாட்டின் பொருளாதார நிலைமை இப்போது அடைந்து வரும் பரிதாபப் போக்கில், பொதுமக்கள் வாழ்க்கையும் மெள்ள மெள்ள ஏகாதசி விரதம் இருப்பது போன்ற நிலை அடைந்து கொண்டிருக்கிறது. இந்த ஏகாதசி நிலைமை மாறி, நாடு சுபிட்சப் பாதையில் முன்னேற வேண்டுமானால் தொழில் வளம் பெருக வேண்டும். முக்கியமாகக் கைத்தொழில் செழிக்க வேண்டும். இதை வற்புறுத்தும் வகையிலேதான் சென்னையில் காதி சுதேசிப் பொருட்காட்சியை வைகுண்ட ஏகாதசி தினத்தன்று ஆரம்பித்து வைத்தார்கள் என்று கருதலாம்.

தமிழ் நாடு காங்கிரஸின் ஆதரவோடு, இந்தப் பொருட்காட்சி விழா சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருவது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு தடவையும் பொருட்காட்சி ஆரம்பமாகும்போது, "போன வருஷத்தைவிட இவ்வருஷம் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கிறது!" என்று பொது மக்களின் பாராட்டுதலைப் பெறுவது வழக்கம். அந்தப் பாராட்டுதல்கள் இந்த வருஷமும் பொருட்காட்சிக்குக் கிடைக்கும் என்ற தமது நம்பிக்கையை, விழா துவக்க வைபவத்தின்போது சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் வெளியிட்டார்.

இந்திய சர்க்கார் உள் நாட்டு மந்திரி பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில், "சென்னை பொருட்காட்சியில் எல்லாவிதமான தொழில்களும் இடம் பெற்றிருக்கின்றன. கைநுட்ப வேலைத் திறத்தில் சென்னைக்குப் புகழ் கிட்டியிருக்கிறது. சென்னை ராஜ்யத்திலிருந்து கையால் செய்து அனுப்பப்படும் பொருள்கள் நாடெங்கும் பரவியிருக்கின்றன. சென்னை கைநுட்ப வேலைக்காரர்கள் எவ்வளவு கலை உணர்ச்சி பெற்றவர்கள் என்பதை அவை எடுத்துக் காட்டுகின்றன. இம்மாதிரி பொருட்காட்சிகள் பாமரர்களுக்கு அறிவூட்டும் சாதனங்களாக அமைகின்றன" என்று குறிப்பிட்டார்.

இந்தப் பொருட்காட்சி அமைப்புக்கு இந்த ஆண்டிலும் சரி, சென்ற சில ஆண்டுகளிலும் சரி பொறுப்பாளராக நின்று பணியாற்றி வரும் ஸ்ரீ வி. ஆர். ராமசாமி எம். எல். ஏ. அவர்களின் சேவையை, விழா துவக்கத்தின்போது மேடையில் பேசிய பலரும் ஒருமித்துப் பாராட்டியதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் பொருட்காட்சி அமைப்பு சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் அதிகச் சிறப்பாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம். காட்சிச்சாலையின் பிரதான வாயில், கண்ணையும் கருத்தையும் கவரக் கூடிய கலைச் செறிவுடன் காட்சி தருகிறது. உள்ளே நுழைந்ததும், "ஸ்டால்"களின் அமைப்பு தாமரை மலர் வடிவில் விளங்குவதைக் காணலாம். அறுநூறுக்கு மேற்பட்ட ஸ்டால்கள் இம்முறை பொருட்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

வழக்கம் போல், ராஜ்ய அரசாங்கத் துறை ஸ்டால்களும், இந்திய அரசாங்கத் துறை ஸ்டால்களும் பல இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

ராஜ்ய சர்க்கார் சார்பாக, தொழில் துறை, கல்வித் துறை, விவசாயத்துறை 'ஸ்டால்'கள் தங்கள் சேவையைப் படங்கள் மூலமாகவும், நேரடியாகவும், அணைத்திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்களின் "மாடல்"கள் மூலமாகவும் எடுத்துரைப்பதைப் பார்க்கலாம். ராஜ்யத்தில் கதர் உற்பத்தியும், உபயோகமும் எவ்வளவு தூரம் முன்னேறி வருகிறதென்பதைக் காதி இலாகா அரங்கில் வைக்கப்பட்டிருக்கும் விளக்கச் சித்திரங்களும்,

விதம் விதமான கதர் ஆடைகளும், கதர் உற்பத்தி உபகரணங்களும் விளக்குகின்றன. முக்கியமாக, நெசவுத் தொழில் சிறப்பை விளக்கிப் பழந் தமிழ் நூல்களிலிருந்து பல செய்யுட்கள் மேற்கோள் காட்டியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். கிராமங்களில் கைத்தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் செய்து வரும் பணிகளை விளக்குகின்றன, கூட்டுறவு, தொழில் துறை 'ஸ்டால்'கள். விஞ்ஞான முறையில் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் இயந்திரங்களையும், சாதனங்களையும் கொண்ட "காவல் துறை" அரங்கில், ஜனசமுதாயத்துக்குப் போலீஸ் இலாகா ஆற்றி வரும் தொண்டுகளைக் காண்கிறோம்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்ற கவியின் கனவை நினைவாக்க, மாதர் நல சேவைத் துறை அரங்குகளின் அரும் பணியைக் காண்கிறோம்.

கால் நடைச் செல்வம், வனப் பொருட் செல்வம் இவற்றை விளக்கும் பகுதிகளைப் பார்த்துக் கொண்டு வரும்போது, "எங்களது சேவையை இதோ கேளுங்கள்!" என்று கூறும் கூறி அழைக்கிறது, இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் அரங்கு. டெலிபோன் அரங்கும் நம்மை நோக்கி 'ஹலோ, ஹலோ' என்று அழைப்பது காதில் விழுகிறது. இவையெல்லாம் அரசாங்க அரங்குகள். தனியார்த் தொழில் வளர்ச்சியின் முன்னேற்றத்தை விளக்கும் அரங்கங்கள் இம்முறை பொருட்காட்சியில் சற்று அதிக இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

கோவையிலிருந்தும், மதுரை, சேலம் முதலிய மாவட்டங்களிலிருந்தும் பல இயந்திரத் தொழில் ஸ்தாபனங்கள் அரங்குகள் அமைத்திருக்கின்றன. சென்னையிலுள்ள பல தொழில் ஸ்தாபனங்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் கருவிகள், இயந்திரங்கள், பொருள்கள் முதலியவற்றை அரங்குகள் மூலம் நன்கு விளம்பரம் செய்திருக்கின்றன. கோவையிலிருந்து வந்திருக்கும் தொழில் ஸ்தாபன அரங்கு ஒன்றில் வைக்கப்பட்டிருக்கும் கடைசல் இயந்திரங்களும், மின்சார இயந்திரங்களும் கருத்தைக் கவர்கின்றன.

மற்றும் வாசனைப் பொருள், சர்க்கரை, குழந்தைகள் உணவுப் பொருள்கள், ரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் பிரபல தொழில் ஸ்தாபனங்கள் பொருட்காட்சியில் ஸ்டால்களை அமைத்திருப்பதோடு மட்டும் நில்லாமல், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விவரங்களை நன்கு விமர்சனம் செய்யவும் ஏற்பாடுகள் செய்திருப்பதைக் குறிப்பிட வேண்டும்.

பொருட்காட்சியில் கலை நிகழ்ச்சிகளும், இம்முறை பிரமாதமாக நடந்து வருகின்றன. நாட்டின் பொருளாதார நிலைமை, தொழில் வளர்ச்சி நிலைமை, விவசாய நிலைமை இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் களைப்புத் தட்டிவிடுமல்லவா? இந்தக் களைப்பைப் போக்கிவிடு-

சித்திரத் தையல் கண்காட்சி



வண்ண ஓவியங்கள் தீட்ட வேண்டுமானால் உயர்ந்த ரக வர்ணங்கள், கலவைகள், தூரிகை முதலிய சாதனங்கள் இன்றியமையாதவை. இவை இல்லாமலே ஓவியங்கள், கண்ணைப் பறிக்கும் அழகான இயற்கை அமைப்புகள், மலர்களின் இதழ்கள், பறவைகள் முதலியன தீட்டக் கூடுமானால் நீங்கள் நம்புவீர்களா? அப்படியானால் உஷா தையல் மிஷின் உற்பத்தி செய்யும் ஜே என்ஜினீரிங் கம்பெனியார் சென்னைக் காம்பஸிரானின் கட்டடத்துக்கு அருகில் சாலையை யொட்டினாற் போலவே அமைத்துள்ள பூத்தையல் கண்காட்சியை அவசியம் பார்க்க வேண்டும். போய்ப் பார்க்கக் கட்டணம் இல்லை.

கின்றன. பொருட்காட்சியில் இம்முறை இடம் பெற்றிருக்கும் கலை நிகழ்ச்சிகள். சங்கீதம், பரத நாட்டியம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் பல அரங்கில் அமோகமாக நடந்து வருகின்றன. திரைப்படப் பொழுதுபோக்கும், பொம்மலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளும் நடந்து வருகின்றன. பிரமிப்பூட்டும் தந்திர வித்தைகளும், ஜால வித்தைகளும் நடந்து வருகின்றன. நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள், கருவிகள் முதலானவைகளும் பல பொருட்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வரும்போது ஏற்படும் பசிக் களைப்பைப் போக்கச் சிற்றுண்டிச் சாலையும் அமைந்திருக்கிறது. அங்கே இந்திய டீ போர்டாரின் தேசீய பானம் சோர்வைத் தீர்த்து வைக்கிறது. மொத்தத்தில் கூற வேண்டுமானால், போன வருஷத்தைவிட, இந்த வருஷம் பொருட்காட்சி சிறப்புற விளங்குவதாகவே கூற வேண்டும்.

தமிழ் கூறும் நல்லுலகம்

லண்டன் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் தீபாவளி விழா நவம்பர் 16-ம் தேதி யன்று கொண்டாடப்பட்டது. இந்தியா இலங்கை, பர்மா, மலேயா, தென் ஆப்பிரிக்கா, கிழக்காப்பிரிக்கா முதலிய இடங்களிலிருந்து பணியாற்றவோ, படிப்புக்கோ வந்திருக்கும் ஏராளமான தமிழர்கள் மகாத்மா காந்தி ஹாலில், விழாவைக் கொண்டாடக் கூடி இருந்த பொழுது லண்டனில் இருக்கிறோம் என்ற சூழ்நிலையை மறக்கச் செய்துவிட்டது.

தலைவர் டாக்டர் சேகர் அவர்களின் முன்னுரை முடிந்ததும், பி. பி. ஸி.யைச் சேர்ந்த நண்பர் சுந்தரம் (சுந்தா) அவர்கள் விழாவுக்கெனத் தாம் இயற்றிய கவிதையைப் பாடி அங்கே குழுமியிருந்த எல்லோரையும் வரவேற்றார்.

சுந்தா அவர்கள் பாடலுக்குப் பின், குழந்தைகள் வெடிகளை வெடித்துப் பெரியவர்களும், சிறியவர்களும் இன்புறத் தீபாவளி விழாவைத் துவக்கினர்.

அதன்பின் சங்கச் செயலாளர் இராமச்சந்திரன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று, "தீபாவளி விழாவில் எவ்விதம் தீப ஒளியால் உலகம் பிரகாசம் அடைகிறதோ, அவ்விதமே எல்லோர் உள்ளங்களும் பிரகாசம் அடைய இறைவனைச் சிந்திப்போம். இன்று நம்மிடையே வந்து விழாவைச் சிறப்புறச் செய்யும் நண்பர்களில் முக்கியமானவர் மலேயா நண்பர் அ. மு. க. பெரியசாமி அவர்கள். அவர் மலேயாவில் ரப்பர் தோட்ட அதிபர். அத்துடன் 'கலைமகள்' பத்திரிகையின் போஷகருமாவார். அவ்விதம் அவர்களை அறிமுகப்படுத்துவதைக் காட்டிலும் தாம் ஒரு தமிழ் அபிமானி என்று சொல்வதையே அவர் அதிகம் விரும்புகிறார். ஏனெனில், அழியாத தமிழ்ச் செல்வமே அவர் நாடுவது. அதற்காகவே தம்மை அவர் பணித்துக் கொண்டார்" என்று கூறினார்.

செயலாளரின் வரவேற்புரைக்குப் பின் திரு பெரியசாமி அவர்கள் நன்றி தெரிவிக்கும் முறையில் மூன்று நிமிஷங்கள் பேசினார்கள். சங்க வளர்ச்சிக்கு நல்லிதயம் அவசியம் என்று அவர்கள் தம் எண்ணத்தை வெளியிட்டு அதற்காக 101 பவுன் நன்கொடை மிக அடக்கத்துடன் கொடுத்தார்கள். அதைப் பார்த்த நண்பர்கள் உணர்ச்சி வசப்பட்டு விட்டனர்.

அதற்குப் பின், குமாரி நடராஜாவின் கண்ணுக்கினிய நடனமும், ஸ்ரீமதி ரஞ்சனி நாகசாமி அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் ஸ்ரீமதி இந்திராணி வித்யாக் குழுவினரின் சங்கீதமும் நடைபெற்றன.

வந்திருந்த அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

தமிழர்கள் பல நாடுகளில் சென்று வாழ்ந்தாலும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பாட்டை என்றும் மறவாமல் வாழ்ந்து வருகிறார்கள். அந்தமுறையில் லண்டன் தமிழ்ச் சங்கம் இயன்ற அளவில் பணியாற்றி வருகிறது. தமிழர்கள் எல்லாருமே ஒன்றுகூடி அளவளாவவும் கலையை வளர்க்கவும் சங்க அன்பர்கள் இயன்ற அளவு பாடுபடுகிறார்கள். இவை தவிர, தமிழ்க் கலாசாரத்தை மற்றத்துறைகளில் வளர்க்க முக்கியமாகத் திருக்குறள், திருவாசகம் முதலிய நூல்களை எல்லாரும் அறிந்து கொள்ளும் முறையில் மாதந்தோறும் பத்திரிகைகள் மூலமும் பிரசங்கங்கள் மூலமும் செய்ய அவர்களுக்கு மட்டற்ற ஆசை. ஆனால் பொருள் வசதியும் இடவசதியும் இல்லாததால் வேண்டிய அளவுக்கு நடத்த இன்னும் இயலவில்லை. லண்டன் வந்து தாயகம் திரும்பும் தமிழர்கள் இங்கே லண்டன் தமிழ்ச் சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகளை நன்கு அறிவார்கள். ஆகவே லண்டன் தமிழரின் நல்ல பொதுக் காரியம் செவ்வனே நடைபெற அவர்களுக்கு உதவி புரியலாம்.

ரா. ராமச்சந்திரன்
Secretary
7, Fellows Road, LONDON N. W. 3.

●

கல்கத்தா செட்டி காலேஜ் தமிழாசிரியர் திரு வி. கிருஷ்ணசாமி சென்னையிலிருந்து வந்திருந்த பேராசிரியர் திரு வெ. சாமிநாத சர்மா அவர்களுக்கு ஒரு வழியனுப்பு விருந்தளித்துச் சிறப்பித்தார்கள்.

அவ்விருந்தில் கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத் தலைவர் திரு க. சே. கோவிந்தராஜன், துணைத் தலைவர் திரு வெ. அரிஹரன், பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் திரு வெங்கடபதி, தெனாரா திருவள்ளுவர் மன்றத் தலைவர் அரு. சொக்கலிங்கம் செட்டியார், கல்கத்தா எழுத்தாளர் சங்கத்திலிருந்து திரு ச. சி. சாஸ்திரி (வங்கத் தமிழன்), வடக்கே சுற்றுச் செலவினை மேற்கொண்டுள்ள மாயூரம் "குறளிசைச் செல்வர்" திரு டி. ஆர். விசுவநாத சாஸ்திரிகள், திரு ஜி. ஆர். ராமசாமி மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள்.

விருந்து, திருமதி கிருஷ்ணசாமியின் இன்னிசையுடன் இனிது முடிந்தது.]



பி. பி. ஸி. தமிழ்ப்ரோகிராம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஸ்ரீமதி இந்திராணியும் அவரது குழுவினரும்.

நரை மயிரே
தோன்றுமல்
முதுமைப் பருவம்
எய்தும் அழகு







லோமா

அகில உலகும் வியந்து போற்றிட கேசத்திற்கு இயற்கைக் கருமையூட்டும் தைலம்,

நிச்சயமாகக் கருமையூட்டும் லோமாவின் சக்திக்கும் மீறி நரை மயிர் எய்தியவர் எவருமே கிடையாது! லோமா என்பது ஒரு சாயச் சரக்கல்ல, கேசத்திற்கு இயற்கை கருமையூட்டும் தைலமாகும்; அதே சமயம், இயற்கையான மூலப் பொருள்கள் கலந்துள்ள அது கேசத்திற்கு போஷாக்களிக்கும். தைலமுமாகும் .. அதோடு மனோகர நறுமணமுள்ளது.

ஏகபோக ஏஜெண்டுகள்: எம். எம். கம்பாட்வாலா அஹமதாபாத்-1.
ஏஜெண்டுகள்:
ஸி. நரோத்தம் & கம்பெனி, மங்கள்தாஸ் ரோடு, பம்பாய்-2.

MPS-TAM

சென்னை ஏஜெண்டுகள் ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட் மதராஸ்-1
இலங்கை ஏஜெண்டுகள் சிக்கும் கதீர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

86 தலைவலி

'ஒற்றைத் தலைவலி ஏன் வருகிறது? சாதாரணத் தலைவலிக்கும் ஒற்றைத் தலைவலிக்கும் என்ன வித்தியாசம்? இவற்றுக்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டிருந்த நேயருக்குப் பதிலளித்தாக வேண்டுமே! அது ஒரு கட்டுரையாகட்டும். இவ்வாறு கடிதம் எழுதிக் கேட்டவர் சென்னைவாசிதான். நேரில் வந்திருந்தால் விஷயத்தை விளக்கி யிருக்கலாம். வரவில்லை. ஆகவே அவருக்குப் பதில் எழுதுவதை ஒரு கட்டுரையாகவே எழுதியனுப்பி விடத் தீர்மானம்.

தலையில் காணும் வலிக்குத் தலைவலி என்று சொல்லுவது நியாயம். ஆனால்...

'ஒருவனுக்கு இருப்பது ஒரு தலைதான். ஆகவே அவனுக்கு இரட்டைத் தலைவலி வர முடியாதே!' என்கிறீர்களா? அப்படி யில்லை.

நெற்றியின் ஒரு கோடியில் மட்டும் சங்கப் பிரதேசத்தில் உண்டாகும் வலியை ஒற்றைத் தலைவலி என்று சொல்வது வழக்கம். இதையே 'அர்த்தாவ பேதம்' என்று வடமொழியில் வருத்த வைத்திய நூல்கள் கூறும். இரண்டு பக்கமும் தலைவலி இருப்பின்...அதைத் 'தலைவலி' என்று மட்டும் பெயரிட்டு அழைப்பர். இதை 'சிரஸ்தோதம்' என்று வடமொழி நூல்கள் கூறும்.

நடு நெற்றியில் புருவம் தொடங்கும் இடத்தில் ஒரு புறத்தில் மட்டுமோ, இரண்டு புறத்திலுமோ ஒருவகை வலியுண்டாகும். இதைத்தான் பொதுவாகத் தலைவலி என்பர். வேண்டுமானால் இதை மூன்றாவது வகைத் தலைவலி என்று வைத்துக் கொள்ளலாம்.

இதே தலைவலியில் 'சூர்யாவர்த்தம்' என்று ஒரு வகையுண்டு. அது புருவம் தொடங்கும் இடத்திலும் இருக்கலாம். புருவத்தின் நுனியை அடுத்துச் சங்கப் பிரதேசத்தில் இருக்கலாம். ஒரு பக்கம் மட்டும் இருக்கலாம்; இரண்டு பக்கங்களிலும் இருக்கலாம். மற்றுள்ள தலைவலிகளிலிருந்து இது வித்தியாசப்படாது. காலையில் சூரியன் உதயமாகும் நேரத்தையடுத்து இந்தத் தலைவலி உண்டாகும். வெய்யில் ஏற ஏறத் தலைவலியின் கடுமையும் அதிகரித்துக் கொண்டே போகும். உச்சி வேளைக்குத் தலைவலியின் கடுமை உச்ச நிலையை அடைந்து, மனிதன் மூர்ச்சை போடும் அளவையும் எட்டும். பிறகு மேற்குத் திசையில் சூரியன் இறங்க இறங்கத் தலைவலியின் கடுமையும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து மாலை 4-மணி 5-மணி சுமாருக்கு அறவே இல்லாமல் தீர்ந்துவிடும். மறுபடியும் மறு நாளும் இதே விதத்தில் சூரியோதய காலத்தில் தொடங்கும். இதைச் சூர்யாவர்த்தம் என்று சொன்னேன். காரணம் இப்போது விளங்குகிறதில்லையா? இதையும் ஒரு வகைத் தலைவலி என்று கணக்கிட்டுக் கொள்ளலாமே!

காரணங்களை உத்தேசித்துத் தலைவலிகளைப் பிரிப்பது அவசியம். காரணத்தை யொட்டிச் சிகிச்சையும் மாறும். ஆகவே, மேலே குறிப்பிட்ட வகைகளோடு, தலைவலியின் காரணத்தால் ஏற்படும் பாகுபாடுகளையும் கண்டறிந்து, ஒவ்வொன்றுக்குத் தலைவலியை விளக்கிச் சிகிச்சையையும் கவனிக்கலாம்.

இதில் முதல் வகை காப்பித் தலைவலி. காலையில் காப்பி குடித்துப் பழக்கப்பட்டவருக்கு அது ஒருநாள் தட்டி விட்டால் தலைவலி வரும். காப்பியின் தரம் குறைந்தாலும் தலைவலி வந்து விடும். ஆகவே, இதை ஒரு வகையில் குடிப் பழக்கத்துக்கு ஒப்பிடலாம். இந்த வாதத்திலும் உண்மை இருக்கிறது. பித்ருக்களுக்குத் திதி முதலிய நாட்களில் சாப்பாட்டுக்கு நேரமாகி விடுமே! காலையில் காப்பியும் கிடையாது. ஆகவே திதி விஷயம் பாதி நடந்து கொண்டிருக்கும் போதே தலைவலி தொடங்கி விடும். பிறகு 'ஆச்சோ போச்சோ'வென்று திதிக் கிரியைகளை முடித்துக் கொண்டு - முதலில் கடகட ஒரு கப் காப்பி குடித்து விட்டுச் சிறிது இளைப்பாறிய பிறகுதான் சாப்பாடு முதலிய பிற அலுவல்களைக் கவனிப்பார்கள். ஆகவே இத்தலைவலிக்குக் காரணத்தை உத்தேசித்துச் சிகிச்சை செய்வது - அதாவது ஒன்றுக்கு இரண்டு'கப்'பாகக் காப்பி அருந்துவதுதான் மருந்து.

அளவுமீறி வெய்யிலில் அலைவதாலும் தலைவலியுண்டாகும். இதற்கு அன்றை யப்பொழுது ஓய்வு எடுத்து மறுநாள் இஞ்சியிட்டுக் காய்ச்சிய எண்ணெயைப் பொறுக்கும் சூடுள்ளபோது தேய்த்து ஓரே சூடாகக் காய்ந்த வெந்நீரில் ஸ்நானம் செய்து தலை சரத்தைத் துவட்டிச் சாம்பிராணிப் புகை காட்டி இதே



''புலித்தோல் "பெல்டு" கேட்டு என் வலை நாசமாகிறது. பேசாமல் போலீஸ் நீர்களே!''

''இருங்க சார்! இப்பத்தான் புலியைச் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள்!''

''அப்படிச் சொல்லேன், பேசாமலே போயிண்டிருந்தால்...!''

லான சூடான ஆகாரத்தைப் புசித்துப் பகல் பொழுது உறங்காமல் வெய்யிலில் மறுபடியும் அலையாமல் ஓய்வு பெறவும்.

வாரத்தில் ஒரு முறையோ இரண்டு முறையோ எண்ணெய்க் குளி செய்து வரும் ஒரு நபர் ஏதோ காரணத்தால் அடுத்தடுத்து 2 - 3 முறை எண்ணெய்க் குளியைத் தப்ப விட்டு விட்டார் என்றாலும் ஒருவகைத் தலைவலி ஏற்படும்.

மிளகாய்ப் பழம்-புழுங்கலரிசி அல்லது சாம்பிராணி என்பதில் ஒன்றையோ இரண்டையோ இட்டுக் காய்ச்சிய எண்ணெயை மேற்சொன்னவிதத்தில் தேய்த்துக் குளித்து மேற்சொன்ன பத்தியப்படி நடந்து கொள்வது இவ்வகைத் தலைவலிக்கு நல்லது. அவசியமானால் அடுத்தடுத்து இரண்டு மூன்று முறைகள் இவ்விதமே எண்ணெய்க்குளி - செய்யவும்.

கும்பல் நெருக்கடிகள் - புகை, தும்பு, தூசி இவையுள்ள இடங்களில் புழங்குவது போன்ற காரணத்தாலும் தலைவலி வரும். இதற்கு நல்ல காற்று வாட்டமான இடத்தில் ஓய்வு பெறக் கிடந்து உறங்கி எழுந்தாலே போதும். மேலும், கடசுட வெந்நீரில் குளித்து விட்டு வந்து இலகுவான சூடான ஆகாரத்தை ஏற்றுக் கொள்வதும் அவசியம்.

இரவில் உறங்கியது குறைவுபட்ட காரணத்தால் காலையில் சரியானபடி ஆகாரமும் ஜெரிக்காமல், 'நம நம' வென்ற சிறியதொரு தலைவலியும் ஏற்படலாம். இதற்கு வெறும் வயிற்றுடன் கிடந்து தொடர்ந்து தூங்கி எழுந்து வெந்நீரில் குளித்து உடலைப் பேணிக் கொண்டாலே போதும்.

பனி - மழைகளில் நனைந்த காரணத்தால் ஜலதோஷமும் சளி, இருமல், ஜுரத்துடன் கடுமையான தலைவலியும் ஏற்படும். இதற்குத் தலைவலிக்கும் பற்று இடுவதும் பிராநிமோயிக ஜுரத்துக்குச் சொன்ன சிகிச்சைகளைச் செய்க.

இவ்விதம் ஏதும் இல்லாமல் திடீரென்று ஒரு தலைவலி வருவதுண்டு. எப்போது வரும், என்ன காரணத்தால் வரும் என்று நிச்சயமாகச் சொல்லவும் முடியாது. ஏதோ ஒரு சிலருக்குத் தேங்காய்ச் சோறு தின்றது, அல்லது எண்ணெய்ப் புகை கொண்டது என்று ஏதோ ஒரு தொண்டிச் சாக்கைச் சொல்லவும் முடியலாம். இப்படிச் சொல்லக் கூடிய காரணத்தாலோ சொல்லக்கூடாத காரணத்தாலோ இந்தத் தலைவலி வரும். மிகக் கடுமையான தலைநோவாக இருக்கும். சில சமயம் ஒரு பக்கமும், சிலசமயம் மற்றொரு பக்கமும் வேறு சில சமயம் இரண்டு பக்கமும் இத் தலைவலி இருக்கும். அன்று முழுதும் தலைவலியுள்ளவர் அனத்தலும் படுத்த படுக்கையுமாகக் கண்ணை விழித்துப் பாராமல் கிடப்பார். மறுநாள் குடம் குடமாக வாய்க்கசப்புடன் பச்சைத்திரவமாக வாந்தியானதும் சற்றுக் குறைந்து, மறுநாளைக்குள் சிறிதுசிறிதாகக்குறைந்து கொண்டே வந்து சமனமாகும். சிலருக்கு வாந்தி வரும் போலிருக்கும். வராது. வாந்தி எடுத்தால் சுகம் ஆகுமென்று தோன்றும். ஒருவித வயிற்று நிலையும் உமிழ்நீர் சுரப்பதும் குமட்டலுமாக இருக்கும். வாந்தி வராது. பலவந்தமாக வாந்தி எடுத்தாலோ, ஊரைக் கூட்டும் சத்தத்துடன் சிறிது மஞ்சள் நிறப் பித்த நீரும் வெளுத்த எச்சில் போன்ற திரவமும் வெளிப்படும். இதனால் தலைவலி சிறிது குறையும். இன்னும் நன்றாக வாந்தியாகவில்லையே என்று குறைப்படுவர். வாந்தி எடுத்தாலோ தொண்டையெல்லாம் புண்ணாகி விட்டதுபோலும், விலாப்புறமெல்லாம் கொக்கிபோட்டது போலும் வலியும் பிடிப்பும் ஏற்பட்டு விட்டன என்றுசொல்லக் கஷ்டப்படுவர்.

இப்படி இன்னதுதான் தலைவலிக்குக் காரணம்-இதுதான் இதற்கான சிகிச்சை என்று நிச்சயமாகச் சொல்லத் தெரியாத தலைவலியை என்ன தலைவலி என்பது?

இதுதானே கஷ்டம்! தலைவலி என்ன! இருமல், சளி, ஜலதோஷம் முதல் உடம்பில் தமைச்சல், சொறி, தண்டு தண்டாய் வீங்கிப் புடைத்தல் வரை எத்தனையோ உபாதைகளுக்கு நிச்சயமான காரணமோ, குறிப்பாகச் சிகிச்சையோ சொல்ல முடியாதுதான். இவைகளுக்கெல்லாம் பெயரா இல்லை? உண்டு. அதுதான் "அலர்ஜி !"



நரஸூ

காபி

அருந்தி அதன்

பிரத்யேகமான

ருசியை

அனுபவியுங்கள்

நரஸூ'ஸ் மானுபாக்சரிங்

கோ. பிரைவேட் லிட்.,

சேலம் & சென்னை





தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை கரைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.



FPY-54-TAM

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

சோல் ஏஜன்டுகள்: தாதா பண்டு கம்பெனி
95, ஸைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

படித்துப் பாருங்கள்

அநாசக்தியோகம்

இந்து மதத்தின் ஒப்பற்ற நூலாகிய பகவத்கீதையில் மக்கள் கடைப்பிடித் தொழுக வேண்டிய பல அரிய தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. கீதையில் கூறப்பட்டுள்ளவை அர்ச்சுனன் மூலம் உலக மக்கள் அனைவருக்கும் கூறப்பட்டவையாகும். இதற்கு விளக்கத்தைக் காந்தியடிகள் குஜராத்தி பாஷையில் முதன் முதலாக 'அநாசக்தி யோகம்' என்ற பெயரில் வெளியிட்டார்.

அந்நூலின் முன்னுரையில் அவர் கூறியதாவது: 'அதிகப் படிப்பில்லாதவர்க்கு மூல வடமொழியில் கீதையைக் கற்றறிய அவகாசமும் அவாவும் இல்லாமலிருந்தாலும், கீதையைப் போன்ற வழிகாட்டி இன்றியமையாததால் அவர்கள் பொருட்டு இம்மொழிபெயர்ப்பு செய்யப்படுகிறது. இழிவான நூல்கள் வெள்ளமாகப் பரவும் இந் நாட்களில் இந்து மதத்தின் ஒப்பற்ற நூலின் இந்தச் சரள மொழிபெயர்ப்பை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் அவ் வெள்ளத்தைத் தடுக்கக் குஜராத்தி மகாஜனங்கள் ஆற்றல் பெற வேண்டுமென மிகவும் விரும்புகிறேன்.' குஜராத்தியில் முதலில் வெளியான இவ்விளக்கம் பின்னர் எல்லா இந்திய பாஷைகளிலும் வெளியாகியிருக்கிறது. தமிழாக்கமும் பல ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த போதிலும் ஸ்ரீ க. சந்தானம் அவர்கள் எளிய நடையில் குறைந்த விலைப் பதிப்பாகக் கண்ணைக் கவரும் அட்டைப்படத்துடன் பிரசுரிக்கச் செய்திருக்கும் இந்தப் புதிய நூல் தமிழ் மக்கள் எல்லோருடைய இல்லத்திலும் உள்ளத்திலும் இடம் பெறுதற்குரியதாகும்.

உடல் படைத்த ஒவ்வொருவனும் இஷ்டப்பட்டோ, இஷ்டப்படாமலோ கர்மம் செய்த வண்ணமாகவே இருக்கிறான். சரீரத்தாலும் மனத்தாலும் செய்யும் காரியங்கள் அனைத்தும் கர்மமே. அப்படியானால், கர்மத்தில் ஈடுபட்டிருக்கும் மனிதன் அதன் கட்டிலிருந்து விடுதலை அடைவது எப்படி? காந்தியடிகள் கூறுகிறார்: "எனக்குத் தெரிந்த வரையில் இப்புதுக் கேள்விக்குக் கீதையைப் போல் மற்றெந்த அறநூலும் பொருத்திய பதில் உரைக்கவில்லை. 'பலனில் பற்றை விலக்கிக் கர்மம் செய்' 'ஆசையை விட்டு விட்டு உன் கடமையைப் புரி' 'காமமின்றிக் காரியத்தில் ஈடுபடு' என்று கீதை உபதேசிக்கிறது. கீதையின் இந்தக் கம்பீர கர்ஜனையை எவரும் அலட்சியம் செய்ய முடியாது. கர்மத்தைத் துறந்தவன் அதோகதி அடைகிறான். கர்மத்தைச் செய்து கொண்டு அதன் பலனைத் துறப்பவன் நற்கதி பெறுகிறான்."

இதுவே அநாசக்தியோகம் என்று காந்தியடிகளால் கூறப்படுவது. அநாசக்தியோகமாவது பலனில் பற்றின்மை. இது கீதையின் அடிப்படையான உபதேசம்.

மோட்சத்துக்கும் லௌகிக விவகாரத்துக்கும் இடையில் ஒருவித பேதத்தையும் கீதாசாரியன் அங்கீகரிக்கவில்லை என்பது காந்தியடிகளின் அபிப்பிராயம். அவர் கூறுகிறார்: "அதற்கு மாறாகத் தர்மத்தை உலக நடவடிக்கையில் புகுத்தியிருக்கிறார். எந்த அறநெறி உலக விவகாரங்களில் பயன்படுவதில்லையோ, அது உண்மையில் அறமல்ல. இந்தத் தத்துவம் கீதையில் இருப்பதாக நான் எண்ணுகிறேன். ஆகையால் எந்தக் காரியங்கள் பலனில் ஆசையின்றி, செய்யக் கூடாதவையாக இருக்கின்றனவோ, அவை அனைத்தையும் விட்டுவிட வேண்டும். இந்த அரிய நியமம் மனிதனைப் பல தர்மசங்கடமான காரியங்களிலிருந்து காப்பாற்றும். மானிட வாழ்க்கை ஆடம்பரம் ஒழிந்து சரளமாகும். சரள வாழ்க்கையிலிருந்து சாந்தி உண்டாகும். பலனைத் துறக்க வேண்டும் என்பதால் எந்தக் காரியத்துக்கு என்ன பலன் உண்டாகுமென்று நிர்ணயிப்பதில் அலட்சியமாக இருப்பதென்று பொருளல்ல. பலத்தின் தன்மையையும், அதை அடையும் சாதனத்தையும் பற்றி ஆலோசித்து அறிய வேண்டியது அத்தியாவசியம். இப்படி முடிவு செய்த பின் பலனில் ஆசையின்றிச் சாதனங்களில் தன் முழு கவனத்தையும் செலுத்துபவனே பலனைத் துறந்தவனாவான்."

இப்புஸ்தகத்தில் சாதகன் முன்னேறுவதற்குப் படிகள் ஐந்து எனக் கூறலாம். அவையாவன: 1. ஆஸக்தி, 2. விரக்தி, 3. பக்தி, 4. அநாஸக்தி, 5. முக்தி. முதல் படியிலுள்ளவன் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களில் உள்ளது போன்ற ஆர்வத்தை உலகிலுள்ள இன்பப் பொருள்களில் உள்ளவனாயிருப்பான். அந்த ஆர்வத்தை அடக்காமலும் அழிக்காமலும் பேணுகின்ற செய்கை செய்வித்த முதல்படிக்கேற்ற சாதனம். திருமூல நாயனார் கூறுவதாவது:

"அஞ்சும் அடக்கடக்கென்பர் அறிவிலர்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை;
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே!"

கீதாசாரியன் 'அடக்குதல் என்ன செய்யும்!' என்று கேட்கிறார். (கீ. 3·33)

'கர்மத்தில் பற்றுள்ளவர்களிடம் புத்தி மாறுபாட்டை உண்டாக்கக் கூடாது. ஞானி சமபுத்தியுடன் கூடியவனாய் எல்லாக் கருமங்களையும் தான் அனுஷ்டித்தும் பிறரையும் அக்கருமங்களில் கட்டி வைக்க வேண்டும்.' (கீ. 3·26)

குழந்தைகள் விளையாடுவதைப் பெரியோர்கள் வீண் காரியமென்று தடுக்காமல்



அவர்களுக்கு உற்சாகமூட்டித் தாமும் கூட விளையாடுதலே அழகு. அம்மாதிரியே உலகில் ஆசக்தி உள்ளவர்களுடன் ஞானிகள் பழகி அவர்களைக் கை தூக்கி விடுவர்.

தாயைக் காணுகிறபோது விளையாட்டுப் பொருள்களைக் குழந்தை விரும்பாதவாறு, உலக இன்பங்களில் வைராக்கியம் தோன்றிய நிலை இரண்டாவது படியாகிய 'விரக்தி'. இது தன்னைத்தானே அறியத் தொடங்கும் பருவம்.

"தன்னைப்பற்றினால் தன்வசமேல் பற்றுவது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசப்
பராபரமே"

என்றார் தாயுமானவர்.

இந்நிலையில் தோன்றும் வைராக்கியம் ஒரு அணைக்கட்டு போன்றது. அணைக்கட்டில் தேக்கிய நீரைக் கால்வாய்கள் வழி வயல்களில் பாய்ச்சுவது போன்றது 'அப்பியாசம்.' இந்த அப்பியாசத்தால் பக்தியாகிய பயிர் செழித்து வளரும். அப்போது சாதகன் மூன்றாவது படியை அடைகிறான். காந்தியடிகள் கூறுகிறார்: "பக்தியில்லாத ஞானம் தீங்கு விளைக்கும். ஆனால் பக்தியோ தீமையை வைத்தாடும் பந்தனம். ஆகையால் கீதாசிரியர் பக்தனுடைய லட்சணங்களைக் கூறும்போது மனம் ஒருநிலைப்பட்ட ஸ்திதப்ரக்ஞனுடைய லட்சணங்களையே வர்ணிக்கிறார். கீதையில் சொல்லப்பட்ட பக்தி வெளி ஆடம்பரமல்ல; மூடநம்பிக்கையுமல்ல. அதற்கும் வெளிச் சேஷ்டைகளுக்கும் காரியங்களுக்கும் உள்ள சம்பந்தம் வெகு குறைவு. பக்தன் ஜபமாலை, திலகம் முதலிய சின்னங்களை வேண்டுமானால் உபயோகிக்கட்டும். ஆனால் அவை பக்திக்கு அறிகுறிகள் அல்ல.

"எவன் தனது சத்துருக்களையும் மித்திரர்களையும் சமமாகப் பாவிக்கின்றானோ, எவன் பெருமையையும் சிறுமையையும் பொருட்படுத்துவதில்லையோ, புகழால் பூரிக்காது இகழால் வருந்தாதவன் எவனோ, எவனுக்கு மௌனத்தில் விருப்பமோ, ஏகாந்தமாக இருப்பதில் எவனுக்கு இஷ்டமோ, எவன் ஸ்திர புத்தியுள்ளவனோ அவனே பக்தன்."
(கீ. 12.18-19)

இம்மனம் நிலைபெற்ற பக்தனுடைய உள்ளத்தில் ஞானதீபத்தைப் பகவான் ஏற்றி வைக்கிறார். அந்நிலையில் பக்தியும் ஞானமும் வேறுபாடில்லாமல், பக்தியே ஞானமாய்ப் பரிணமிக்கிறது. இந்நிலையின் முதிர்ச்சியே அநாசக்தி யோகம் என்னும் நான்காவது படி. அந்நிலையில் நிற்பவனைக் கீதை 'குணாதீதன்' எனக் கூறுகிறது. அது வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத நிலை. அந்நிலை எய்தியபின் முக்திக்கு வேறு சாதனம் வேண்டாமல், அதுவே இங்கேயே இப்போதே முக்தியாய் விளைகிறது.

"அற்றது பற்றெனில், உற்றது வீடு."

ஸ்ரீமத் பகவத்கீதை: காந்தியடிகளின் கீதை விளக்கம், தமிழாக்கம்: சு. சந்தானம், கிடைக்குமிடம்: புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், 135, பவழக்காரத் தெரு, மதராஸ்—1. விலை ரூ. 1.

—அன்னு



குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் நல்லது



மார்கோ சோப்

குடும்பத்துக்கு உத்தமமான சோப்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிட்., கல்கத்தா-29

கருமையை வளர்க்கும் கூந்தல் தைலம் வாக்குறுதியைக் காக்கிறது!



Vasmol HAIR DARKENER

எல்லா பிரபல ஸ்டோர்களிலும் ... கிடைக்கும்

ஹைஜினிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்

பி. ஓ. பாக்ஸ் 1192, பம்பாய்-1

விநியோகஸ்தர்கள்: ஆர். எல். கெண்டர் & கோ., 59, பந்தர் தெரு, சென்னை




இல்லாளுக்கு

நம்பிக்கை

ஊட்டுவது

சுடர்



தீப்பெட்டிகள்

தயாரிப்பாளர் :

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

பெரம்பூர். சென்னை

கிடைக்குமிடம் :

தொழில் இலாகா விற்பனை நிலையம்

166-ஏ. மவுண்ட் ரோடு. சென்னை - 2



1. கல்

காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பல்லவ மகா சக்கரவர்த்தி மகேந்திர வர்மர். அப்போது சிராப்பள்ளி மலையுச்சியில் குகைக் கோயில் அமைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அந்நாளைய சோழர் பூமி யனைத்தும் பல்லவருடைய பார்வையில் தான் அடங்கிக் கிடந்தன.

சோழ நாட்டின் பல்வேறு இடங்களில் மகேந்திர வர்மர் குகைக் கோயில்களை அமைத்துக் கொண்டு வந்தார். அவைகளிலே சிராப்பள்ளிக் குகைக் கோயிலுக்காக மிகுந்த சிரத்தையும் எடுத்துக் கொண்டார். தம்முடைய உருவச் சிலையையும் அங்கு வடிக்க ஏற்பாடு செய்திருந்தார். சிலாசாசனங்கள் பலவற்றை விடுக்கவும் முயன்றார்.

அந்த இனிய முயற்சிக்கு முக்கிய காவலன் போன்று விளங்கி நின்றான் சத்தியசந்தன். அவன் திறம் வாய்ந்த சிற்பக் கலைஞன்.

'அவந்தி சுந்தரி கதை'யின் மூலம் பேசப்படும் சிற்பவல்லுநர் லலிதாலயர், அந்நாளையக் காஞ்சியைக் கலைத்தோட்டமாக்கியவர். மாமல்லபுரத்தைச் சிருஷ்டித்த மாபெரும் பெருமையைப் பின்னால் பெறப் போகும் பெருங் கலைஞர். அவருடைய மாணாக்கர்களில் முதலிடம் பெற்றவர்கள்தாம் சத்திய சந்தனும், செந்தாமரையும்.

செந்தாமரை லலிதாலயரின் அன்புக்குப் பாத்திரமான ஒரே மகள். அவர் தம்முடைய மகளுக்கு இலக்கியப் பயிற்சியளித்துப் பல்லவத்தில் தம்மால் எழும் போகும் கலைப்படைப்புக்களைக் காவியமாக எழுத வேண்டுமென்று கனவு கண்டு வந்தார். அந்தக் கனவு கனவோடு நின்று விட்டது. நினைப்பதெல்லாம் நடக்குமானால் பிறகு சிற்பக் கலைக்கே வேலையில்லாமல் போய்விடும்; ஏனென்றால், கோயில்கள் எழுவதற்குக் காரணமில்லாமல் போயிருக்கும்!

லலிதாலயரின் காலம் தாழ்ந்த சிந்தனை இது!

செந்தாமரை சிற்பக் கலையிலேயே சிறந்து விளங்குவதற்கு முயன்றாள்; வெற்றியும் கண்டாள். அதற்கு மூல காரணம், அவள் தன்னுடைய இதயத்திலே காதல் காவியம் தீட்டி வந்த சத்திய சந்தனுடன் கைகோத்து வாழ்ந்ததே!

காதலனுடன் தபதி மகள் எந்நேரமும் காலம் கழித்தாள். கற்கள் பல அழித்தாள்; அதிலே காவியம் சில படைத்தாள். முடிவில் சத்தியசந்தனையும் மணாளனாக ஏற்றாள்.

ஆசானை மீறக் கூடிய அளவுக்குப் புலமை பெற்றுத் திகழ்ந்தான் சத்திய சந்தன். அதனால், சக்கரவர்த்தி மகேந்திர வர்மப் பல்லவருடைய அபிமானத்தையும் பெறலானான். மேலும் பல்லவ மகாசக்கரவர்த்திக்கு அவன்பேரில் அதிக அக்கறை ஏற்பட்டதற்கு முதல் காரணம் அவருடைய பட்டப் பெயரை, அவன் இயற் பெயராகக் கொண்டதே.

பல்லவ மகா சக்கரவர்த்தி அமைத்து வந்த முக்கியமான குகைக் கோயில்கள், சத்தியசந்தன் மேற்பார்வையில் விடப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் ஒருவாறு முடித்துக் கொண்டு திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர்ந்தான் சத்திய சந்தன். தன்னுடைய கைத்திறமை முழுவதையும் சக்கரவர்த்தியின் சிலை வடிப்பதில் காட்ட வேண்டும் என்ற நோக்கில்தான் அவன் கடைசியாகத் திருச்சிராப்பள்ளியை அடைந்தது.

திருச்சிராப்பள்ளிக்கு அடுத்தாற் போல் விளங்கிய பல்லவபுரத்தில் சிற்பிகள் தங்கியிருந்தனர். தலைமைச் சிற்பி சத்தியசந்தனுக்கு அழகிய மாடி வீடு ஒன்று ஒழித்துத் தரப்பட்டது. அது அப்போது அரசாங்க விருந்தினரின் மாளிகையாக இருந்து வந்தது.

இரண்டு காலம் உல்லாசமாக உருண்டது. சத்தியசந்தனுக்கும், செந்தாமரைக்கும் சிராப்பள்ளியின் மனோகரமான சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது.

இருவரும் ஒன்று சேர்ந்து தினம், தினம் பொன்னி நதிக்கரையில் புது இன்பம் காணத் தவறுவதில்லை. வாரத்துக்கு இரு முறையேனும் அரங்கநாதப் பெருமானைச் சேவிக்கச் சென்றார்கள். எப்போதோ ஒரு சமயம் அருகே இருந்த உறையூருக்கும் பயணமாகி, நகர் முழுவதையும் சுற்றிவிட்டுத் திரும்புவார்கள். அப்படித் திரும்பும்போது, அவர்கள் சோழர்களுடைய பழம் பெரும் தலைநகரான உறையூரின் பெருமையை வானளாவப் புகழ்ந்து துதி பாடிக்கொண்டு வருவதில் தனி மகிழ்ச்சி கண்டனர்.

சில சமயங்களில் தங்களுடைய காதல் வாழ்வில் நடந்த களிப்பு மிகு நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்துக் கொள்வார்கள். பல சமயங்களில் வாய்விட்டுப் பேசி, அந்தப் பசுமையான நினைவுகளுக்கு உயிரளித்து உவகை கொள்வார்கள். அப்போது அவர்கள் அந்நாளில் எடுத்துக்கொண்ட மரணச் சபதத்தையும் நினைத்துப் பார்க்கத் தவறவில்லை. அதை நெஞ்சில் மேலும் மேலும் நீடிக்கச் செய்வதில் கண் திறந்த கனவுக்கும் புது பொருள் கண்டனர்.



2 கோடு

திருமணமான மறுமாதம் சத்தியசந்தனும், செந்தாமரையும் மல்லைக் கடற்கரை மணலில் படுத்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது பல்லவ சக்கரவர்த்தி மகேந்திர வர்மரின் தந்தையான சிம்மவிஷ்ணு பல்லவர் அமைத்த சிறு கற்கோயில் ஒன்றுதான் கடற்கரையில் கம்பீரமாகக் காட்சி தந்தது. மற்றப்படி பல கற்கோயில்கள் லலிதாலயரின் மேற் பார்வையில் எழுந்த வண்ணம் இருந்தன. சற்றே தொலைவில் துறைமுகம் இருந்ததால், கரையில், பல தோணிகளும் நாவாய்களும் விடப்பட்டிருந்தன. யவன தேசத்திலிருந்து வந்திருந்த பெரிய மரக்கலமொன்று தொலை தூரத்தில் நின்று கொண்டிருந்தது. பொழுது விடிந்தால் அதற்கான இறக்குமதி துவங்கக் காத்திருந்தது.

இரவின் நடுநிசி வேளையாதலால் ஆள் அரவம் அடங்கிக் காணப்பட்டது. மணற்பரப்பை மஞ்சமாக அமைத்துக்கொண்டு தனிமை நாடிய இளம் மணமக்கள், முதிர்ந்த நிலவின் மோகன ஒளியில் மூழ்கி யிருந்தனர்.

நீலவான் மாடத்தில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்த நிலவு, இன்பத்தில் மூழ்கியிருந்த இளம் மணமக்களைக் கண்டு அங்கலாய்த்துக் கொண்டது. அதனுடைய தனிமை அங்கலாய்ப்பைக் கண்ட தாரகைக் கூட்டங்கள் கண் கொட்டி மௌனமாகச் சிரித்தன!

"செந்தாமரை!"

"ஆம்..."

"இந்த நிலவு எப்படி இருக்கிறது?"

"அப்போது நம்முடைய காதல் வாழ்வைக் கண்டு ரசிக்கத் தேய நாணப்பட்டது! இப்போது..."

"இப்போது...?"

"நம்முடைய திருமண வாழ்வைக் கண்டு வளர வருத்தப்படுகிறது!"

செந்தாமரை நாணத்தால் தலையைத் திருப்பிக்கொண்டு புன்னகை செய்தாள்.

"செந்தாமரை! நம்முடைய வாழ்வு உண்மையில் தேயாச் சந்திரன்! மறையாச் சூரியன்!"

"மகிழ்ச்சி, அத்தான்! வாழ்வில் நாம் எப்படி ஒருமனத்துடன் ஒன்றினோமோ, அப்படியே சாவிலும் ஒருமனத்துடன் சாக வேண்டும். இந்த அடியாளின் கோரிக்கை சரிதானா?"

சத்தியசந்தன் கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தான்.

"ஏன், அத்தான்! சிரிக்க வேண்டும்?"

"உன்னுடைய பேதைமையான நெருக்கத்தை நினைத்து..."

"இதில் என்ன பேதைமை வேடிக்கை கிடக்கிறது!"

"இது எப்படிக் கண்ணே சாத்தியமாகும்?"

செந்தாமரை! 'கலகல' வென்று சிரித்தாள் முத்துப் பல் தெரிய!

"செந்தாமரை! இப்போது நான் உன்னுடைய சிரிப்புக்குக் காரணம் கேட்க வேண்டும். அப்படித்தானே?"

"கேட்கா விட்டாலும் நான் சொல்லத் தானே போகிறேன். அத்தான்! நான் செத்தவர்களை உயிர்ப்பிக்கச் சொல்லவில்லையே! பின் எப்படிச் சாத்தியப் படாமல் இருக்க முடியும்? உயிரோடு இருப்பவர்கள் ஒன்றாகச் சாக வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொள்வதில் என்ன அத்தான் தவறு இருக்க முடியும்? ஒரு காலத்தில் நம்முடைய காதல் வாழ்வைக் கண்டு காஞ்சியே பொறுமைப்பட்டது. மரண வாழ்விலும் ஒற்றுமை கண்டால், காஞ்சி நிச்சயம் காவியம் கண்டு விடும்!"

"கண்மணி! பல்லவர் அமைத்து வரும் இந்தக் குகைக்கோயில்களைக் காட்டிலும், உன்னுடைய நெஞ்சில் நான் சமைத்த காதற் கோயில் உண்மையிலேயே பெருமை வாய்ந்தது. இதோ, இந்தப் பௌர்ணமி நிலவு சாட்சியாக நாம் சபதம் எடுத்துக் கொள்வோம். காதலில் ஒற்றுமை கண்டது போலவே, சாதலிலும் ஒற்றுமை காண்போம்! இது சத்தியம்!"

"சத்தியம், அத்தான்!"



3. உளி

மரணச் சபதத்தை இப்போது அவர்கள் நினைக்கும்தோறும் மகிழ்ச்சி கண்டனர்; மன நிறைவு கொண்டனர்.

ஆனி கரைந்தது; ஆடி பிறந்தது.

எதிர்பாராத விதமாகத் திருச்சிராப் பள்ளியில் கொள்ளை நோய் செப்படி வித்தையாடத் தொடங்கியது. அதன் காரணமாக ஒரு மாத காலம் குகைக் கோயில் திருப்பணியும் கூட நிறுத்தப் பட்டிருந்தது.

வீதிக்கு வீதி வேதனைக் குரல்கள் எழத் துவங்கின. சுடலைக் காட்டில் அறுபது நாழிகையும் மக்கள் நிரம்பிய வண்ணம் இருந்தனர். ராஜபாட்டையில் பிணப் பாடைகள் காட்சியளித்துக் கொண்டே இருந்தன. சங்கும், சேமக்கலமும் ஒரு கணமும் ஓய்ந்தறியா!

பல பேர்கள் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டனர். அப்படிப் பாதிக்கப் பட்டவர்களுள் நம்முடைய செந்தாமரையும் ஒருத்தியாகி விட்டாள்.

உறையூரிலிருந்து சக்கரவர்த்தியின் உத்தரவுக்கு இணங்கிப் பல மருத்துவர்கள் சிராப்பள்ளியில் இறக்குமதியாயிருந்தனர். போதாக்குறைக்குக் காஞ்சியிலிருந்தும், தஞ்சையிலிருந்தும், குடமூக்கிலிருந்தும் மருத்துவர்கள் விஜயம் செய்திருந்தனர். ஆங்காங்கு ஆதுர சாலைகளை நிறுவி மக்களைக் கவனிக்கலாயினர். அப்படியும் கொள்ளைநோய் 'கொள்ளையோ, கொள்ளை' என்று மக்களை வாரிச் சுருட்டிக்கொண்டு செல்ல அஞ்சியதாகக் காணோம்.

காஞ்சி அரண்மனை மருத்துவர் சக்கரவர்த்தியின் தனிக் கவனத்தின் பேரில் செந்தாமரையைக் கவனிக்க வரலானார்; மகாசிற்பியின் மகளாயிற்றே! மேலும் சத்தியசந்தனுடைய உயிர் நாடியே, செந்தாமரையின் போதவிழ்ந்த முகத்தில் தானிருக்கிறது என்பது மகேந்திர வர்மப் பல்லவர் அறியாததல்லவே?

காஞ்சி அரண்மனை மருத்துவர் தம்மாலான முயற்சிகள் எத்தனையோ, அத்தனையும் பயன்படுத்திப் பார்க்கலானார். அப்படியும் செந்தாமரையின் நோய் தெளிவு பட்டதாகக் காணோம்!

சத்தியசந்தன் தினம், தினம் தேம்பி அழலானான். அவனுடைய பரிதாபமான நிலையைக் கேள்விப்பட்டுச் சக்கரவர்த்தியே நேரில் காணப் புறப்பட ஆயத்த மானார். அப்போது லலிதாலயரையும்

உடன் புறப்படக் கேட்டுக் கொண்டாரே யொழிய, உண்மையைக் கூறினாரில்லை.

லலிதாலயருக்கு விஷயம் தெரியக் கூடாது என்றுதான் இதுகாறும் மறைத்து வந்தார் சக்கரவர்த்தி. இனி யும் மறைப்பதில் நன்மையில்லை என்ற முடிவுக்கு வரவே, அவரைச் சேர்ந்து அனுப்ப உத்தேசித்தார். பிறகு அந்த உத்தேசமும் சரிப்பட்டு வரவில்லை. பல்லவத்தையே கலைத் தொட்டிலில் தாலாட்டவிருக்கும் மகா சிற்பியா யிற்றே! ஏதேனும் நடந்து விட்டால்?...

விசித்திரசித்தர் மகேந்திர பல்லவர் செய்த - செய்யப் போகும் மாபெரும் சாதனைகளின் முன்வே இது மிகச் சாதாரணம்! எனவே, அவரும் உடன் புறப்படலானார்.

4. சுருதி

திருச்சிராப்பள்ளியை அடைந்த சக்கரவர்த்தியை, மக்கள் முந்திய பயணம் போல் ஆரவாரத்துடன் வர வேற்கவில்லை. அதிலிருந்தே மக்களின் மருண்ட நிலையை ஒருவாறு ஊகித்துக் கொண்டார் சக்கரவர்த்தி.

எதையும் பொருட்படுத்திக் கொள் ளாத பல்லவ சக்கரவர்த்தி கொள்ளை நோயைப் பற்றி வழியிலே மெல்ல மெல்ல லலிதாலயருக்குக் கூறலானார். அப்படிக் கூறி வரும் போது செந்தாம ரைக்கும் நோய் சிறிதே பாதிக்கப்பட் டிருப்பதாகக் கேள்வி என்று மழுப்பி னார். அவளை நேரிலிருந்து கவனிக்கவே இப்பயணத்தை வைத்துக் கொண்ட தாகவும் தைரியமூட்டினார்.

குணபரனும் மகேந்திர சக்கரவர்த்தி யின் இந்த நாடகம் லலிதாலயருக்கு மிகுந்த வியப்பைத் தூண்டியது. அந்த வியப்பு, செந்தாமரையைக் கண்ட பிறகு அவருடைய நெஞ்சிலிருந்து வெடித்து வேதனையைக் கொப்பளிக்கத் தொடங்கியது. அவரைச் சமாதானப் படுத்தப் பட்ட பாடு பெரும் பாடாய்ப் போய்விட்டது பல்லவசக்கரவர்த்திக்கு.

அன்றிரவு செந்தாமரையின் நோய் உச்சக் கட்டத்தில் விளையாடுவதற்குத் துவங்கியது.

ஒன்றுக்கு மூன்று மகா மருத்துவர்கள் உடன் இருந்து கவனிக்கலாயினர்.

அருகே நின்றிருந்த சத்தியசந்தன், மருத்துவர்கள் முகத்தில் அவநம்பிக்கை கோடிட்டதைக் கவனித்தான். அவ னுடைய இதயமே நின்றுவிடும் போல் இருந்தது. அப்படி நின்று விட்டாலும் போதுமே என்று அரங்கநாதரை வேண் டிக்கொண்டான். மரணச் சப்தம் அவ



"என் பெண் சம்பந்தம் பற்றிக் கேட்கச் சிதம்பரம் போகிறேன்!"

"உங்களிடம் ஏது பணம்?"

"நான் அனுப்பவில்லை. அக்கம் பக்கத்து வீட்டார்க்கு செலவாம் சேர்ந்துதான் அனுப்பி வைக்கிறாங்க!"

னுடைய மனக் கண்முன் நிழலாடியது! மருத்துவர்கள் தங்கள் களையிழந்த முகத்தைத் தொங்கப் போட்டனர்.

சக்கரவர்த்திக்கும் விஷயம் ஒருவாறு புரிந்து விட்டது. லலிதாலயரை அணைத்து அழைத்த வண்ணம் மாளி கைக்குப் பயணமாக முயன்றார். லலிதா லயர் அவ்விடத்தை விட்டு நகருவதற்கு எவ்வளவோ மறுத்தார். அவர் அங்கு தங்குவாரேயானால் நிலைமை வேற்றுருவு கொண்டாலும், கொண்டு விடும் என்ற ஐயத்தால், சக்கரவர்த்தி குரலைச் சற்றே கடுமையாக்கிய வண்ணம் அவரை அழைத்துச் செல்லலானார்.

மருத்துவர்களும் வெளியேறத் துவங் கினர். அப்படி வெளியேறும்போது காஞ்சி அரண்மனை மருத்துவர் சத்திய சந்தனிடம், "எங்கள் முயற்சி தீர்ந்து விட்டது; ஆண்டவன் முயற்சி தான் தேவை!" என்று கூறி விட்டுச் சென்றார். விதியெனும் வேடிக்கைக் காரன் அவருடைய உருவில் வந்தா விளையாட வேண்டும்?

அனைவரும் சென்றனர்.

மாடி வீடே மரணத் தாண்டவத்தில் மூழ்கியிருந்தது.

சத்தியசந்தன் தலையைச் சுவரில் மோதி, மோதி இடித்துக் கொண்டான்.

சீப்பும் தலையும்!



சந்நதம் வந்தவன் போல் வெறிகொண்டு அலறினன். தன்னுடைய மனைவியின் இனிய முகத்தை இரு கரங்கள் கொண் டேந்தி, "ஐயோ!" என்று எழுப்பிய கூச்சல் இரவின் அமைதியைக் கலைத்தது.

5 சிலை

பொழுது பலபலவென்று விடிந்தது. சக்கரவர்த்தியின் மாளிகையை நோக் கிப் பணியாளன் ஒருவன் ஓடி வந்தான். அவன் லலிதாலயரிடம் சொன்ன செய்தி கேட்டு, ஊமைத் தூக்கத்திலிருந்த சக்கரவர்த்தி திடுக்கிட்டு எழுந்தார். அனைவருமே சத்தியசந்தன் வீடு நோக்கி விரைபலாயினர்.

வீட்டின் தோட்டப் புறத்தில் சத்திய சந்தன் மூக்கிலும், வாயிலும் ரத்தம் வழியப் பிணமாகிக் கிடந்தான். அவனைச் சோதனை செய்ததில், விஷ மூலிகை உண்டு மாண்டிருப்பதாகச் செய்தியறி வித்தார்கள் மருத்துவர்கள்.

லொசிந்த்பி லலிதாலயர் 'கோ'வென்று கதறி யழலானர். அவருடைய கலைக் கரங்கள் தலையில் அடித்துக் கொண்டன. ஒருபுறம் மருமகன்; மறுபுறம் தமக்கு நிகரான மாணவன்!

சக்கரவர்த்தியும் கூடக் குழந்தை போல் தேவித் தேவியழலானர். ஏனைய வர்களைப் பற்றி விளக்கம் வேண்டுமா?

அச்சமயம் பார்த்துத்தானு மற்று மொரு செய்தியும் கிடைக்கவேண்டும்?

"செந்தாமரையம்மாள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்!"

அனைவரும் வீட்டினுள் அரண்டு ஓடி வந்தனர். சக்கரவர்த்தி மட்டும் அமைதி யாகச் சத்தியசந்தனுக்கு வணக்கம் செலுத்தி விட்டு உள்ளே நுழைந்தார்.

செந்தாமரை கண் விழித்துச் சுற்று முற்றும் கவனித்தாள். அவளுடைய உடல் வியர்வை கொட்டிச் சற்றே அசைந்து கொடுத்தது. அவளுடைய கரம் 'தாகம்' என்று சைகைகாட்டியது.

உடனே மருத்துவர்கள் உதவினர்.

அவள் இனி தேறிக் கொள்வாள். மருந்து உடலில் பிடித்துக் கொண் டது என்றும் மருத்துவர் கள் விளக்கம் கூறினர். ஆனால், அவள் பூண்ட செம்பொன் கோலத்தைப் பற்றிக் காலதேவன் கூறிய விளக்கத்துக்கன்றோ, ஏனை யவர்கள் காது கொ டுத்துக் கொண்டிருந் தனர்?

உடல் நிலை குணமானதற்குப் பிறகு தான் செந்தாமரை, தன்னுடைய வருங் காலத் தோற்றத்தைப் பற்றிய உண்மை யைக் கேள்விப்படலானள். தன்னுயி ரைக் காக்க வேண்டிச் சக்கரவர்த்தி, செய்தியறிவிக்காமலும், கணவருடைய முகத்தைக் காட்டாமலும் இப்படி நாடகம் நடத்திவிட்டாரா என்று தனக் குள் வசைமாரிப் பொழிந்து கொண் டாள். ஒரு மண்டலம் உருண்டும் ஓயாத அழுகை.

மனைவி இறந்து விடுவாள் என்று முன் கூட்டியே அறிந்து தம்முடைய சப தத்தை நிறைவேற்றிக் கொண்டார் அத்தான்! ஆனால், தான்...

சாவதா? வாழ்வதா?

பிரச்னைக்கு முடிவு காண முடியாமல் விம்மி விம்மி அழலானள் செந்தாமரை.

"செந்தாமரை! உன்னுடைய கணவன் விட்டுச் சென்ற குகைக் கோயிற் பணி உன் மூலம் பூர்த்தியாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். அப்படிப் பூர்த்தி செய்வதன் மூலம்தான், சத்தியசந்த னுடைய தூய ஆத்மாவை நிறைவு படுத்தியவளாவாய்."

சக்கரவர்த்தி மேற்கொண்டு ஏதும் சொல்லவில்லை. மூலையில் கிடந்த உளியை எடுத்து நீட்டினர்.

அவ்வுளியைப் பெற்ற செந்தாமரை ஆயிரமாயிரம் கத்திகள் தன்னுடைய தலையிலே மோதுவன போல் கண்டாள்! லட்சோப லட்சம் உளிகள் தன் உடலைச் சின்னபின்னப் படுத்துவன போல் உணர்ந்தாள்!

மலைக் கோயிலில் மகேந்திரவர்மர் சிலை என்ற பெயரில் ஒன்று உருவானது. அந்தச் சிலைக்கு அருகே 'சத்திய சந்தன்' என்ற கல்வெட்டும் காணப்பட்டது.

மக்கள் சக்கரவர்த்தியின் பட்டப் பெயரைப் படித்துப் பாராட்டிக்கொண் டனர். ஆனால்...

தன்னுடைய அன்புக் கணவனுடைய இயற்பெயர் அது என்பதைச் செந்தாமரை ஒருத்திதானே அறிவாள்?



பொங்கிவரும் பெருநிலவு

இருபதாம் அத்தியாயம்

சிலந்தி

பழக்கத்தின் காரணமாக நடராஜனுடைய கரங்களும் கால்களும் இயங்கிக் காரைச் செலுத்திக்கொண்டு போயினவே யன்றி அவனுடைய மனம் அதில் லயிக்கவில்லை. முதல் நாள் இரவு அடித்த புயலைவிடக் கடுமையான புயலில் அவன் உள்ளம் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

ராஜன் நர்ஸிங் ஹோமில் கார் நின்றதும் கீழே இறங்கிக் கதவைப் 'படீர்' என்று சாத்தினான் அவன். கட்டடத்தின் உள்ளே நுழைந்ததும் விசாலமான முன் அறையில் அவனைப் பார்க்க வந்திருந்த நோயாளிகள் மரியாதையாக எழுந்து நின்றார்கள். நடராஜன் அவர்களையோ அல்லது அதற்கு அப்பால்

— கி. ராஜேந்திரன் —

இருந்த நீண்ட பெரிய அறையில் படுத்திருந்த நோயாளிகளையோ கவனித்ததாகவே தெரியவில்லை. வேகமாக மாடிப் படிகளில் ஏறித் தனது தனி அறையில் புகுந்தான். அங்கிருந்த நாற்காலியில் பொத்தென்று விழுந்து தன் முகத்தை அழுத்தி மூடிக்கொண்டான். கண்கள் இரண்டும் மனத்திரையை ஆவலுடன் பார்க்க நாடியது.

அதிலே மல்லிகாவும், சேகரும், விமலாவும், மணியும், குமாரனும் மாறி மாறித் தோன்றினார்கள். ஒரே சமயத்தில் தோன்றினார்கள். சுழன்று சுழன்று வந்தார்கள். குமாரன் அவனை அனுதாபத்துடன் பார்த்தான். மணி கோபமாகப் பேசினான். விமலா ஏக்கத்தோடு காட்சியளித்தாள். சேகரும் மல்லிகாவும் ஏளனமாக அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். நடராஜனும் வெறுப்பு மிகுந்துவிட, வாய்விட்டுச் சிரித்தான். தன் சிரிப்பைக் கேட்டுத் தானே திடுக்கிட்டவனாக நிமிர்ந்து உட்கார்ந்தான். தலைமயிரைக் கோதி விட்டும் மண்டையை அழுத்திப் பிடித்தும் மன அமைதியை வரவழைக்க முயன்றான். அது கிட்டவில்லை. தனக்குப் பைத்தியமே பிடித்து விட்டதோ என்ற எண்ணம் தான் உண்டாயிற்று. "சீச்சீ! அப்படியெல்லாம் ஒன்றும் இராது. டாக்டரான எனக்குத் தெரியாதா? பைத்தியமுமில்லை; ஒன்றுமில்லை. பின்னர் என் மனம் இப்படி அமைதியற்றுத் தவிக்கிறதே ஏன்? எதையும் சரியாகச் சிந்திக்க முடியாமல் தவிக்கிறேனே ஏன்? ஒரு காரியமும் செய்ய முடியாமல் உட்கார்ந்திருக்கிறேனே ஏன்? ஏன்? ஏன்? ஏஏன்?" அறையின் நாலா பக்கங்களிலிருந்தும் 'ஏன்? ஏன்?' என்ற எதிரொலி கிளம்பியது. நடராஜன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். எதிரே நர்ஸ் நிர்மலா நின்று கொண்டிருந்தாள். "உடம்பு சரியில்லையா?" என்று கேட்டாள்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை, நிர்மலா! மனம்தான் சரியில்லை. வாசலில் இருக்கும் நோயாளிகளையெல்லாம் அனுப்பிவிடு: இன்று யாரையும் பார்க்கவும் முடியாது. பேசவும் முடியாது. யாராவது கேட்டால் ரொம்பக் காரியமாக இருப்பதாகச் சொல்லிவிடு" என்றான்.

'அவள் போனபிறகு, கதிர்வேலனைப் பற்றி ஒரு வார்த்தைகூட விசாரிக்கவில்லையே?' என்று தோன்றியது நடராஜனுக்கு. 'சௌக்கியமாக இருக்கிறாரா? ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்கிறாயா?' என்று கேட்டால் போதும். நிர்மலாவின் முகம் சந்தோஷத்தில் எப்படி மலர்ந்து விடும்?

'அவர்கள் வாழ்க்கைதான் எவ்வளவு இன்ப மயமாக இருக்கிறது! அந்த அமைதியான இல்லற இன்பத்தை நான் எப்போது அனுபவிக்கப் போகிறேன்? இந்த ஜன்மத்தில் எனக்குக் கிட்டுமா? கரம் இழந்த கணவனைத் தன் உழைப்பினால் காப்பாற்றும் அவளல்லவோ உத்தமி? வரப் போகும் கணவன் அப்பால் போனதும், பல்லை இளித்துச் சிரிக்கும் ஒருவனுடைய கையைப் பற்றி இழுத்து உட்காரச் செய்யும் ஒருத்தியை உத்தமி என்று நினைத்தேன். அவள் சிரித்த சிரிப்பிலே மயங்கினேன். அவள் சொரிந்த கண்ணீரிலே பித்தனானேன். அம்மாவின் மனத்தைப் புண்படுத்தி விமலாவைத் துன்புறுத்தி அத்தையை மனமுடைந்து போகச் செய்து என்னத்தைக் கண்டேன்? போலிச் சிரிப்பையும், ஏமாற்றும் கண்ணீரையும்தான்.'

மருந்து புட்டிகள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்த கண்ணாடி அலமாரிக்கும் சுவருக்கும் இடையே ஒரு சிலந்தி தன் கூட்டை அமைத்துக் கொண்டிருந்தது. மாலைநேரத்துச் சூரியனின் செம்பொற் கிரணங்கள் அதை மெல்லிய தங்கக் கம்பிகளால் பின்னப்பட்ட வலையாக மாற்றியது. குறுக்கேயும் நெடுக்கேயும் விரைந்து மும்முரமாக வலை பின்னும் அந்தச் சிலந்தியைப் பார்த்தான் நடராஜன். அதே சமயத்தில் அந்தப் பக்கமாகச் சென்ற ஒரு அப்பாவி ஈ அதில் சிக்கிக் கொண்டு தவியாகத் தவித்தது. தன்னை விடுவித்துக் கொள்ள அது செய்த முயற்சியெல்லாம் வியர்த்தமாயிற்று.

நடராஜன் உரக்கச் சிரித்தான். சிலந்தி பின்னிய வலையில் சிக்கித் தவிக்கும் அந்த ஈயைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'படித்தறிவுள்ள மனிதனான எனக்கும் அந்த ஈக்கும் என்ன வித்தியாசம்? அது சிலந்தி பின்னிய வலையில் சிக்கியது. நான் அந்த மாயமோகினி மல்லிகா விரித்த வலையில் சிக்கினேன்.'

அவன் பார்த்துக் கொண்டேயிருக்கையில் அந்தச் சிலந்தி மல்லிகாவாக உருமாறியது. சந்தன நிற மேனியின் வனப்பை அவள் அணிந்திருந்த வெண்பட்டு சுமாராகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டியது. அந்த வெண்பட்டிலே ஆங்காங்கே இழையோடிய மெல்லிய வெள்ளிக் கம்பிகள் அவளுடைய ஒவ்வொரு அங்க அசைவிலும் மின்னிப் பிரகாசித்தன. அலை

அலையாகச் சுருண்டு நீண்டு வளர்ந்திருந்த கூந்தலைத் தூக்கி முடிந்து மல்லிகை மலர்களால் அலங்கரித்திருந்தாள். எடுப்பான நீண்ட கழுத்திலே வைரமாலை ஒன்று ஒளி வீசியது. கரங்களிலே குலுங்கிய வளையல்களின் ஒலி நடராஜனுடைய சிந்தனையைக் கவர்ந்தது. அவள் உடலின் சந்தன மணமும் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணமும் ஒன்றுசேர்ந்து அவன் தலையைக் கிறங்கச் செய்தன. தன் குவிந்த சிவந்த அதரங்களை மொட்டு வெடிப்பது போல் மலர விட்டாள். நீண்ட கண்களின் ஓரத்தில் அரும்பிய இரண்டு நீர் முத்துக்கள் அவனைக் கலங்க அடித்தன. அந்தக் கரிய விழிகளின் காந்த சக்தி அவனைக் கவர்ந்து இழுத்தன.

நடராஜன் தட்டுத் தடுமாறினான். அவளை நெருங்க, அந்த நீர் முத்துக்களைச் சர்வஜாக்கிரதையாக அகற்றி விட, அந்த அதரங்களில் மலர்ந்த புன்சிரிப்பை அருகேயிருந்து அனுபவிக்க, அந்தக் கருவிழிகளின் காந்த சக்தியில் கட்டுண்டு மயங்கிக் கிடக்க, அந்த எழில் உருவத்தை எப்போதும் ஒரு வினாடி தவறாது பார்த்துக்கொண்டே இருக்க முடியுமானால், அழகென்னும் சொல்லுக்கே அணிகலனாக விளங்கும் அவளுக்கு அடிமையாகவும் பணி புரிய, ஏங்கினான்.

ஆனால் அவனை முன்னேற விடாமல் ஏதோ ஒரு சக்தி பின்னுக்கு இழுத்தது. அதை உதைத்து உதறித் தள்ளி விட்டு நடந்தான். அருகே செல்லச் செல்ல அந்த மோகன உருவத்தின் கரங்கள் அசைந்தன. அப்போது குலுங்கிய வளையல்களின் ஒலியோடு கன்னங்களில் ஏற்படும் குழிப்புடன் அவள் மெல்லச் சிரித்த ஒலியும் சேர்ந்து கொண்டது. அந்த நீண்ட விரல்கள் கனிவாகவும், விரைவாகவும் அசைந்து கொடுத்துக் கண்மூடித் திறக்கும் நேரத்தில் நடராஜனை மெல்லிய தங்கக் கம்பிகளால் ஆன வலையில் சிக்க வைத்தன.

வலையிலே சிக்குண்ட அவன் மல்லிகாவைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தான். இப்போது அவனெதிரே மல்லிகா தோன்றவில்லை. அவளுக்குள்ளே பதுங்கிக் கிடந்த ஒரு குரூபி மார்பைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டு அவனைப் பார்த்துப் பயங்கரமாகச் சிரித்தான்.

இதைப் போன்று இன்னும் எத்தனையோ இன்பமானதும் விநோதமானதும் அருவருக்கத் தக்கதுமான எண்ணங்கள் மேலே மேலே குமிழியிட்டுக் கொந்தளித்துக் கொண்டேயிருந்தன அவன் உள்ளத்தில். அந்தச் சிந்தனைக் குவியல்களில் அவனுக்கு நன்கு அறிமுகமான அனைவருமே பங்கு கொண்டார்கள். மன அமைதியை நாடி நேரம் போவதே தெரியாமல் கடந்தகால நிகழ்ச்சிகளுடனும், விநோதக் கற்பனைகளுடனும் ஒன்றிப்போயிருந்த நடராஜன் இருள் கவிந்து விட்டதைக் கூட உணரவில்லை.

திடீரென்று அவன் கண்கள் கூசவே மனம்போன போக்கிலே பின் தொடர்ந்து சென்றுகொண்டிருந்த அவன் அதனைக் கட்டுப்படுத்தித் தன் நிலைக்குக் கொண்டுவந்தான். நன்கு இருட்டி விட்டதென்றும் யாரோ அறைக்குள் நுழைந்து விளக்கைப் பொருத்தி யிருக்கிறார்கள் என்றும்



தெரிந்து கொண்டதும் மெள்ள மெள்ளக் கண்களைத் திறந்து பார்த்தான்.

அவன் எதிரே விமலா நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் அவன் உள்ளத்தைக் குடைந்தெடுத்த வேதனைகள் அதிகமாயின.

"அத்தான்! நீங்கள் அன்று வந்திருந்த போது நான் பின்னிக் கொண்டிருந்த ஸ்வெட்டர் முடிந்து விட்டது. அதைக் கொண்டு வந்தேன்" என்றாள் விமலா.

'இவள் பின்னியது ஸ்வெட்டர். அவள் பின்னியது வலை. உறுத்தும் கரிய கம்பளி நூலினால் பின்னப்பட்டது இது. பளபளக்கும் மெல்லிய தங்க இழைகளால் பின்னப்பட்ட அது. இதை உடுத்தும்போ
தன்னைப் பின்னிய அ
ஆசையுடன் நி
மயங்கி
தன்னை

மறைந்து பதுங்கிக் கிடக்கும் கொடிய ராட்சசியைப் புலப்படுத்தும்.'

நடராஜன் நெற்றியை அழுத்தித் தடவிக் கொண்டு சுழல் நாற்காலியை வேறு பக்கமாகத் திருப்பினான்.

"அத்தான்! தலையை வலிக்கிறதா. என்ன? ஏன் ஒருமாதிரி இருக்கிறீர்கள்? இந்த இருட்டில் உட்கார்ந்திருந்த போதே நினைத்தேன்" என்று சொல்லிக் கொண்டே உரிமையுடன் அவன் நெற்றியில் நான்கு விரல்களைப் பதித்தாள் விமலா. அவளுடைய கையிலே இருந்த ஸ்வெட்டர் நடராஜனுடைய மடியில் விழுந்தது. அதை இடது கையில் எடுத்துக் கொண்டு வலது கரத்தால் தன் நெற்றியை வருடிய விமலாவின் கரத்தை அழுத்திப் பற்றிச் சொடுக்கினான் நடராஜன். அந்த வேகத்தில் அவனுக்கு முன்னால் இழுக்கப்பட்டு வந்தாள் விமலா. அவளுடைய கை விரல் முதல் தோள்வரை வலித்தது. மூட்டுகள் சடசடவென நெறிந்தன.

"விமலா! நீ ஏன் இங்கு வந்தாய்? உன்னை யார் வரச்சொன்னது?" என்று கடிந்து கொண்டான் நடராஜன்.

"இன்று உங்கள் பிறந்த நாள், அத்தான்! அதற்குப் பரிசாக நான் பின்னிய இந்த ஸ்வெட்டரைக் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். தவறானால் மன்னித்து விடுங்கள். போய் விடுகிறேன்." குரல் கம்மித் தழுதழுக்கப் பேசினாள் விமலா.

அவளுடைய அன்புப் பரிசான ஸ்வெட்டரையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான் நடராஜன். இடது கையில் அந்த ஸ்வெட்டர் கசங்கியது. வலது கரத்தில் விமலாவின் மலர் போன்ற விரல்கள் கசங்கின. வலி தாள முடியாமல் விம்மினாள் அவள். விரட்டவோ கையைப் பின்னால் இழுத்துக் கொள்ளவோ கூடத் தைரியம் இல்லை அவளுக்கு.

"விமலா! நீ பெரிய தவறு செய்து விட்டாய்! இங்கு வந்திருக்கவே கூடாது. மன அமைதியைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைந்து கொண்டிருந்தேன். அதை உன் வருகைமூலம் குலைத்துவிட்டாய். நீ பின்னியிருக்கும் இந்த ஸ்வெட்டரைக் காட்டி மற்றொருத்தி பின்னியிருக்கும் மாயவலையை நினைவூட்டி விட்டாய். அன்பே உருவாக நீ என் எதிரே நின்று ஒரு கொடியவளை ஞாபகப்படுத்தி விட்டாய். தேவதையைப் போல் தோற்றமளித்து ஒரு அரக்கியை மறக்க முடியாமல் செய்து விட்டாய். புரிகிறதா உனக்கு? ஏன் விழிக்கிறாய்?" நடராஜனுடைய விரல்களின் அழுத்தம் அதிகமாயிற்று. விசும்பிக்கொண்டே பேசினாள் விமலா. "அத்தான்! நீங்கள் பேசுவது புதிராகத் தெரியவில்லை மல்லிகா அக்காளைப்





பத்திப் பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அக்காள் நீங்கள் நினைப்பது போல் அரக்கியோ, கொடியவளோ இல்லை, என்று மட்டும் நான் நிச்சயமாக நம்புகிறேன்."

"அக்காளாம், அக்காள். இன்னொரு முறை அக்கா'ளென்று சொன்னால் உன்னை... உன்னை ..." பற்களை நறநற வென்று கடித்தான் நடராஜன். "அதோ பார், விமலா! அந்த அலமாரிக்குப் பின்னால் ஒரு சிலந்தி கூடு கட்டியிருக்கிறது, பார்! சாயங்காலம் நான் பார்த்தபோது

அது முற்றுப் பெறவில்லை. இப்போது கூட்டைக் கட்டி முடித்து விட்டது. அழகான வலை விரித்து அதிலே ஏதேனும் சிக்குமா என்று காத்துக் கொண்டிருக்கிறது. சில மணி நேரத்துக்கு முன்னால் ஒரு ஈ அதில் சிக்குண்டது, விமலா! அந்த ஈ இப்போது எங்கே? தெரியவில்லையா? சிலந்தி விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது விமலா!" நடராஜன் பைத்தியக்காரனாகச் சிரித்தான்.

"அத்தான்! ஏதேதோ வாயில் வந்ததை உளறுகிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"புரியவில்லை? நிஜமாகவே புரியவில்லை?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் சிரித்தான் நடராஜன். "நானும் மல்லிகா விரித்த வலையில் சிக்கிக் கொண்டவன்தான் விமலா. ஆனால் தக்க சமயத்தில் எப்படியோ தப்பி விட்டேன். வலையை அறுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டேன். ஊர் பேர் தெரியாத பெண் என்றும் கட்டி மேய்க்க யாரும் இல்லாமல் கண்டபடி திரியும் சினிமாக்காரி என்றும் அம்மா அவளை அளந்து சொன்னாள். என் கோபம் காதுகளைச் செவிடாக்கியது. கிராமத்தாரால் பழி சுமத்தப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்டவள் என்றும் ஒரு கொலைகாரனின் பெண் என்றும் தன்னைப் பற்றியே அவள் சொன்னாள். சேகரிடம் தான் கொண்டிருந்த காதலைப் பற்றியும் கூறினாள். கூடவே அவள் சிந்திய கண்ணீர் அந்த வார்த்தைகளைத் திரை போட்டு மறைத்தது. ஆனால் இப்போது தன் அருமைக் காதலனைக் கையைப் பிடித்து இழுத்து உட்காரச் செய்யும் காட்சியைக் கண்குளிரப் பார்த்து விட்டேன். என் பித்தம் நன்றாகத் தெளிந்து விட்டது."

"அத்தான்! அக்கா ரொம்ப நல்லவள். ஏதோ தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் அவளை!"

"விமலா! அவளுக்குப் பரிந்து பேசாதே! எனக்குக் கோபம் அதிகமாகும்!" என்றான் நடராஜன்.

"உங்களுக்கு எப்போதுமே சந்தேக புத்தி, அத்தான்! அவள் கபடமில்லாமல் செய்த ஏதோ ஒரு காரியத்தைத் தவறாக எடுத்துக் கொண்டு சங்கடப்பட்டுக்கொண்டிருப்பீர்கள்."

அவள் தோள்களைப்பற்றி உலுக்கினான் நடராஜன். அவள் தலை வெடவெடவென்று ஆடியது. "விமலா! என் பொறுமையை அளவுக்கு மீறிச் சோதிக்கிறாய்! இன்னொரு வார்த்தை பேசக் கூடாது அவளுக்காக."

"உங்களிடம் கொண்டிருக்கும் தூய்மையான காதலுக்காக அந்தக் காதலையே தியாகம் செய்யத் தயங்காத உயர்ந்த குணம் படைத்தவள் அவள். ஆத்திரப் படாதீர்கள், அத்தான்! ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்று சொல்லிக் கேட்டதில்லையா?"

நடராஜன் அவளைப் பிடித்துத் தள்ளினான். 'தரதர'வென்று பின்னால் நகர்ந்து போய்ச் சுவரில் மோதிக் கொண்டு நின்றாள் அவள். மேசை டிராயரைத் திறந்து கையை விட்டுத் துழாவினான் நடராஜன். மறுபடியும் அவன் கரம் வெளிப்பட்டபோது அதிலே ஒரு துப்பாக்கி இருந்தது.

விமலா தான் செய்துவிட்ட தவறை உணர்ந்தாள். மல்லிகாவுக்குப் பரிந்து பேசியதன் மூலம் அவன் கோபத்தைக் குறைப்பதற்குப் பதிலாகக் கிளறி விட்டு விட்டதைத் தெரிந்து கொண்டாள். 'ஆத்திரப்படாதீர்கள்' என்று சொல்லியே அவனை ரௌத்திராகாரனாக மாற்றி விட்டதை அறிந்தாள். பீதி நிறைந்த கண்களால் அத்தானின் வெறி பிடித்த முகத்தையும் அவர் கையிலே சிக்கிக் கொண்டிருந்த துப்பாக்கியையும் பார்த்தாள்.*

நடராஜன் பேசாமல் அறையை விட்டு நீங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான். அவன் அப்பால் போனதும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் விமலா. அதே சமயத்தில் அவளுக்கு அத்தானின் நடத்தைக்குக் காரணமும் சட்டென்று தெரிந்து விட்டது. அத்தான் மேசை டிராயரைத் திறந்து துப்பாக்கியை எடுத்தது தனக்காக அல்ல! மல்லிகாவுக்காக! அந்நினைவு எழுந்ததும், மறுபடியும் அவளைப் பீதி ஆட்கொண்டது. 'அத்தான் என்னைத் துன்புறுத்தி வருத்தியதால் ஏமாந்தல்லவோ போனேன்? இன்னும் ஒரு கணம் தாமதித்தாலும் விபரீதமாகப் போய் விடுமே!' என்று எண்ணியவளாக ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தாள். அந்த வேகத்தில் இரண்டு மூன்று முறைகள் கீழே இடறி விழுந்து எழுந்தாள். அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. வாயிலை அவள் அடைந்தபோது கார் நகர ஆரம்பித்துவிட்டது. ஒரே தாவலில் பின் பக்கக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பாய்ந்தாள் அவள். ஆடை

* இந்தக் காட்சியைத்தான் இவ்வார அட்டைச் சித்திரமாக வரைந்திருக்கிறார் ஓவியர் லதா

யைச் சரி செய்துகொண்டு இரைக்க இரைக்க அவன் உட்கார்ந்ததைப் பார்த்துக் காரைச் சற்று நேரம் நிறுத்தினான் நடராஜன்.

"விமலா! நீ வரவேண்டாம். கீழே இறங்கு" என்றான்.

"முடியாது, அத்தான்! அந்தத் துப்பாக்கியை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கும் வரை நான் உங்கள் பின்னோடு தான் வருவேன். என்னிடம் கொடுத்து விட்டால் உடனே கீழே இறங்கி விடுகிறேன்."

"உன்னோடு வாதம் புரிய எனக்கு விருப்பமில்லை. தாராளமாக வந்து விட்டுப்போ. எனக்கு அக்கறையில்லை. நான் புரியப்போகும் இரட்டைக் கொலையைப் பார்த்து மகிழ்ந்து போ!" என்று சொல்லிக் கொண்டே மோட்டாரை வேகமாகச் செலுத்தத் தொடங்கினான் நடராஜன்

இருபத்தோராம் அத்தியாயம்

மலைப் பாதையில்....

மல்லிகா தன் விருப்பத்தை நிறைவேற்றினாளா, அல்லது தனக்குள்ளாகவே அவள் போட்டுக் கொண்ட திட்டத்தை நிறைவேற்றினாளா என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தார் குமாரன். சேகரைப் பித்தனாக அடித்துக் கல்யாணம் செய்து கொண்டாலும் சரி, அல்லது அவனைச் சூழ்ந்துள்ள அபாயத்தை உணர்ந்து புகைப்படத்தையும் கடிதங்களையும் திருப்பிக் கொடுத்து விடச் செய்தாலும் சரி, அவருக்குக் கவலையில்லை. எப்படியானாலும் அந்தத் தீர்மானம் நல்லபடியாக இருக்க வேண்டும் என்று தான் விரும்பினார். தான் பயந்து பயந்து சாகும் நாட்களுக்கு எவ்விதத்திலாவது ஒரு முடிவு காண வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டார்.

ஆகவே, அன்றிரவே மல்லிகாவைக் கண்டு பேசி நடந்ததை விவரமாகத் தெரிந்து கொள்ள ஆர்வத்துடன் அவள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

வாசலில் சேகருடைய கார் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துத் தயங்கினார். தம்முடைய காரை விட்டுக் கீழே இறங்காமல் சேகர் புறப்பட்டுப் போகக் காத்திருந்தார். மாலையில் ஆரம்பித்த சர்ச்சை நீண்டுகொண்டே போகிறது என்று அவருக்குத் தெரிந்தது. அவருக்கே மல்லிகாவின் மீது வாஞ்சையும் அன்பும் பெருகின. எவ்வளவு சிரமப்படுகிறாள் தனக்காக? எந்த விதத்திலாவது தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அவள் பெரு முயற்சி எடுத்துக் கொள்வதால் தானே இத்தனை நேரமாக அங்கே வாக்குவாதம் நடக்கிறது? சேகர் மல்லிகாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு போன பிறகுதான், தான் உள்ளே போக வேண்டும். அதற்கு முன்னால் சென்றால் காரியம் கெட்டுப் போகும். அவள் முயற்சிகள் பலனளிக்காமல் போகலாம். தன்னைக் கண்டதும் இளகிக் கொண்டிருக்கும் சேகருடைய மனம் மறுபடியும் இரும்பாகி விடலாம். குமாரன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு சேகர் புறப்பட்டுப் போகக் காத்திருந்தார். அவர் வெளியிட்ட புகைமண்டலம் பேயாக உருவெடுத்து அவரையே பார்த்துச் சிரித்தது.

"கோழை! ஒரு பெண்ணின் உதவியைக் கோரும் பயந்தாங்கொள்ளி! மல்லிகாவின் கண்ணீருக்கோ, கெஞ்சலுக்கோ, பயமுறுத்தலுக்கோ அல்லது கொஞ்சும் மொழிகளுக்கோ சேகர் கட்டுப்படுவான் என்று நினைக்கிறாயா? முட்டாள்! சேகருடைய வாயை அடக்கக் கூடியது சாவுதான். நீ உன் செல்வத்தையெல்லாம் இழந்து நடுத்தெரு நாராயணனாக நிற்காமல் செய்யக்கூடியது மற்றொரு கொலைதான்! அதைச் செய்ய உன் கோழை மனம் பயப்படுகிறது!"

'மல்லிகாவின் முயற்சி பலனளிக்காமல் போகட்டும். நான் கோழையல்ல என்பதைக் காட்டுகிறேன்' என்று குமாரன் முணுமுணுத்தார்.

திடீரென்று அவர் நரம்புகள் புடைத்துக் கொண்டன. மோட்டாரைத் திருப்பும் சக்கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கண்களை அகலத் திறந்து தமக்கெதிரே நிகழ்வனவற்றைக் கூர்ந்து நோக்கினார். மல்லிகாவுடைய வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதைப் பார்த்ததுமே நடராஜனுடைய கார்தான் என்று குமாரனுக்குத் தெரிந்தது. நடராஜன் அதிலிருந்து இறங்கி வேகமாக மல்லிகாவின் வீட்டுக்குள்ளே நுழைவதைப் பார்த்தார். அவனுக்குப் பின்னாலேயே விமலாவும் இறங்கி

ஓடினான். அவர்களுடைய கடையில் இருந்த பரபரப்பு ஏதோ தவறுதலாக நடந்து விட்டது என்று எண்ணச் செய்தது. 'இது ஏதடா வம்பு!' என்று நினைத்தவர், தாமும் கீழே இறங்கி அவர்களைப் பின்தொடர்வதா? அல்லது அவர்கள் எல்லோருமே கிளம்பிப் போன பிறகு மல்லிகாவைச் சந்தித்து விவரமாக நடந்தவற்றைத் தெரிந்து கொள்வதா? என்று ஒரு நிமிஷம் யோசித்தார் குமாரன்.

அந்த யோசனையைச் சிதற அடித்து அடிவயிற்றைக் கலக்கி உடலையும் அதிர்ச்சியினால் உதற வைத்தது ஒரு வெடிச் சத்தம். கூடவே அங்கு நடந்து விட்டதை ஒருவாறு அனுமானித்தது சூழ்ச்சி புரிவதையே தொழிலாகக் கொண்ட அவர் மனம்.



தம்முடைய விருப்பத்துக்கிணங்க மல்லிகா சேகரைப் பித்தனாக அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்திருப்பாள். பசப்பு வார்த்தைகளும் கொஞ்சும் மொழிகளும் பேசி அவனை மயக்க முற்பட்டிருப்பாள். அதை நடராஜன் பார்த்துக் கோபம் கொண்டு விட்டான். தான் செய்ய நினைத்துக் கொண்டிருந்த காரியத்தை அவன் செய்து விட்டான். கோபம் கொண்டு சேகரைச் சுட்டுக் கொன்றுவிட்டான்.

இப்படி எண்ணியதுமே, குமாரனுடைய உள்ளத்தின் ஒரு மூலையில் மகிழ்ச்சியுண்டாகி மனம் முழுவதுமே வியாபிக்கத் தலைப்பட்டது. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு சில விநாடிகள் கூட நீடிக்கவில்லை. மல்லிகாவின் வீட்டுக்குள்ளிருந்து சேகர் ஓடி வருவதை அவருடைய கழுகுக் கண்கள் பார்த்து விட்டன.

அவர் மனம் உடனே அதற்கும் காரணம் கற்பித்து விட்டது. சேகருக்கும் நடராஜனுக்கும் இடையே சண்டை மூண்டு நடராஜனைச் சேகர் சுட்டுக் கொன்று விட்டான் என்றும் அதனால் பயந்துபோய்த் தலைதெறிக்க ஓடுகிறான் என்றும் நிர்மானித்தார். அவனைப் போலீஸார் கண்டுபிடித்துத் தண்டிப்பார்கள். அந்தத் தண்டனையை அனுபவிக்கும் முன் நிச்சயமாகத் தம்மைக் காட்டிக் கொடுத்துப் பழி வாங்கி விடுவான். எமனுலகத்துக்குத் தான் மட்டும் போகவில்லை, துணை சேர்த்துக் கொண்டு செல்கிறோம் என்று நிம்மதி யடைவான்.

குமாரனுக்கு எதிரே ஆவி உருவில் நின்ற கண்ணப்பன் இப்போது அவரைத் தூண்டிவிட்டான். 'இந்தச் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடாதே என்னைக் கொன்ற பாவத்தைப் போக்க, மற்றொரு கொலை புரிய வேண்டும் நீ. சேகரை எனக்குப் பலி கொடுக்கவேண்டும்! அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும். அதன் பிறகுதான் உன்னைத் தொடர்ந்து வந்து துன்புறுத்துவதை நான் நிறுத்துவேன். உன்னைப் பிடித்த சனியன் விடவும், பாக்கியிருக்கும் உன் செல்வத்தை இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளவும் இதைத் தவிர வேறு வழியில்லை. கோழையாக இருக்காதே! தைரியத்தை இழக்காதே!'

'இல்லை, நான் கோழையில்லை' என்று அடித்தொண்டையில், நடுங்கும் குரலில் கூறிக் கொண்டே குமாரன் காரைக் கிளப்பிக் கொண்டு வேகமாக முன்னேறினார்.

• • •

உதகமண்டலத்துக்குச் செல்லும் மலைப்பாதையில் குமாரனுடைய கார் மணிக்கு எண்பது மைல் வேகத்தில் ஏறிக் கொண்டிருந்தது.

அவருடைய கைகளும், கால்களும் நடுக்கத்தில் உதறிக் கொண்டிருந்தன. நரம்புகளெல்லாம் புடைத்துக் கொண்டு 'விண் விண்'ணென்று தெறித்தன. குளிர் மிகுந்த மலைப் பிரதேசமானாலும் உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. நெற்றியிலே அரும்பி, கண்களில் வழிந்து பார்வையைத் தடை செய்யும் வியர்வையை அடிக்கடி விரல்களால் துடைத்துக் கொண்டார் அவர். மிகுந்த பிரயாசைப்பட்டுக் காரை ஓட்டிக் கொண்டு சென்ற அவர் பிரயாணத்தைச் சீக்கிர

மாக முடித்துவிட விரும்பினார். அதனால் காரின் வேகத்தை அதிகப் படுத்திக் கொண்டே போனார். அதிக வேகத்தோடு திருப்பங்களில் வளைந்து வளைந்து செல்வது மிகக் கடினமாக இருந்தது. காரைத் திருப்பும் சக்கரத்தை ஒடித்து ஒடித்து முழங்கையும் விரல்களும் வலி யெடுத்தன. அப்படி வேகமாகத் திரும்பிய போதெல்லாம் அவரையே தூக்கி எறிந்து விடுவதுபோல் மோட்டார் இப்படியும் அப்படியுமாகச் சாய்ந்தது. கன்னங் கரிய இந்த இருளில் இந்த மலைப் பாதையில் ஏற முற்பட்டிருக்கவே கூடாது என்று அவருக்குத் தெரிந்தது. 'ஏன் இங்கு வந்து சேர்ந்தோம்? வேறு இடமா யில்லை? உதகமண்டலத்துக்குப் போகத் தோன்றுவானேன்?'



சென்னை கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்கள் சென்ற மாதம் 16ந் தேதி விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலைக்கு விஜயம் செய்தார். மாணவ மாணவிகளும் உபாத்தியாயர்களும் நிர்வாகிகளும் அவரைக் குதூகலமாக வரவேற்றனர். வழக்கமான பாடங்களுடன் அச்சுத் தொழிலும் நெசவுக் கலையையும் மாணவர்கள் கற்பதைப் பார்த்து கவர்னர் அவர்கள் தமது சந்தோஷத்தைத் தெரிவித்ததுடன் நிர்வாகி திரு லக்ஷ்மணசுவாமியையும் மற்ற உபாத்தியாயர்களையும் மனமுவந்து பாராட்டினார். மேலேயுள்ள படத்தில் ஒரு மாணவன் அச்சுத் தொழில் பயில்வதை கவர்னர் அவர்கள் பார்வையிடுகிறார்.

"நீயும் எங்களுடன் சேர்ந்து சாவதற்குத்தான்" என்றது சேகருடைய குரல். சுகுமாரன் திடுக்கிட்டார்.

கண்ணப்பன் சிரித்தான். "பெரியண்ணா! யாரைத் தேடுகிறாய்? இதோ, இந்தப் பள்ளத்தாக்கில் இருக்கிறோமே, எங்களைத் தெரியவில்லையா? சேகர் சொல்வது வாஸ்தவம்தானே? எங்கள் இருவரையும் அனுப்பி விட்டு நீ மட்டும் உயிருடன் இருக்கலாமா? வா! சீக்கிரம் வா!"

"சேகரைப் பலி கொடுத்தால் என்னை விட்டு விடுவதாகச் சொன்னாயே?" என்று கேட்டார் சுகுமாரன்.

பயங்கரமாகச் சிரித்தான் கண்ணப்பன். "அதை நிஜமென்று நம்பினாயா? எத்தனை நாட்களுக்கு நான் தனித்திருப்பது? எனக்கு நண்பர்கள் வேண்டாமா? சேகரும் வேண்டும். அதற்கப்புறம் நீயும் வேண்டும். அதற்காகத்தானே இந்த மலைப்பாதை வழியாக உன்னை வரச் செய்தேன். நீ வண்டியை ஓட்டவில்லை! நானே இயக்கிக் கொண்டு வந்து விட்டேன். என் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டு நீ ஓட்டிக் கொண்டு வந்தாய்! இப்போது கூட அந்த 'ஸ்டீயரிங்'கை நானே திருப்பி இந்தப் பள்ளத்தாக்கில் மோட்டாரோடு நீ விழுமாறு செய்ய முடியும். ஆனால் நீயாகவே மலைச்சரிவில் விழுந்து விடுவாய். முழு மனத்துடன் விரும்பி எங்களுடன் சேர்ந்துகொள்வாய் என்று ஆசைப்படுகிறேன்."

கண்ணப்பனிடமிருந்து தப்பச் சுகுமாரன் 'ஆக்ஸிலேட்ட'ரைக் கடைசி வரை அழுத்தினார். மோட்டார் இன்னும் வேகமாகப் பாய்ந்தது.

புதிதாக ஏற்பட்ட அந்த வேகத்துக்கு ஏற்பச் சுகுமாரனுடைய கரங்கள் செயல்படவில்லை. தன்னை விழுங்கக் காத்திருக்கும் கன்னங்கரிய பூதமாக ஒரு பள்ளத்தாக்கை ஒரு கணம் பார்த்தார் அவர். அடுத்த கணம் சாலையின் ஓரத்தில் எழுப்பியிருந்த சின்னஞ் சிறிய மதில் சிதறிப் போகும் ஓசை பயங்கரமாகக் கேட்டது. அதற்கு அடுத்த வினாடி காரின் முன்பாகம் கீழ் நோக்கிச் சாய்வதை உணர்ந்தார். அப்புறம் பாறைகளில் மோட்டார் மோதும் சத்தமும் அதன் பிறகு இஷ்டப்படியெல்லாம் திரும்பியும் உருண்டும் கீழே கீழே விழுந்து கொண்டேயிருக்கும் சத்தமும் கேட்டன. இந்த ஒலிகளுக்கெல்லாம் மேலாகச் சேகரும் கண்ணப்பனும் பேய்ச் சிரிப்பு சிரிக்கும் ஓசை தெளிவாகக் கேட்டது. சுகுமாரனும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தார். விரக்தி மிகுந்த அந்தக் கடைசிச் சிரிப்புடன் அவர் வாழ்க்கை முற்றுப் பெற்றது.

• • •

சிரித்துக் கொண்டே வாசலுக்குச் செல்லும் சேகருடைய கையைப் பற்றி மல்லிகா இழுப்பதைப் பார்த்துவிட்டு அருவருப்புடன் திரும்பி நடந்த நடராஜனை மல்லிகாவோ சேகரோ கவனிக்கவில்லை. விவாதம் நீண்டது.

"உங்களுக்கு உயிர் பெரிதா? அல்லது பணம் பெரிதா? நிச்சயம் உயிருக்கு உலை வைக்கப் போகிறீர்."

சேகர் கம்புநிற வழியாக இல்லை. தன்னைப் பயமுறுத்தியும் ஏமாற்றியும் எப்படியாவது அந்தப் புகைப் படத்தையும் கடிதங்களையும் கவரப் பார்க்கிறான் என்று எண்ணி அலட்சியமாகவே பதில் கூறி வந்தான்.

"அவர் கூட இன்னும் சிறிது நேரத்தில் இங்கே வந்துவிடுவார். யோசனை கேட்கலாம்" என்றாள் மல்லிகா.

"உன்னுடைய 'அவர்' உன்பாடு. எனக்கு யாருடைய யோசனையும் தேவையில்லை" என்றான் அவன்.

மல்லிகா நடராஜனுக்கு இடையிலொரு முறை டெலிபோன் கூடச் செய்து பார்த்தாள். ரொம்பக் காரியமாக இருப்பதாகவும் அவருடன் பேசுவதற்கில்லை என்றும் பதில் வந்தது.

"பார்த்தீர்களா? முக்கிய காரியமாக இருக்கிறாராம். கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்."

"அதற்கென்ன எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருக்கிறேன். ஆனால் என் மனத்தை மட்டும் யாராலும் மாற்றவே முடியாது."

ஒரு வழியாக நடராஜன் வந்து சேர்ந்தபோது நீட்டிய துப்பாக்கியுடனேயே உள்ளே நுழைவான் என்று சேகரோ, மல்லிகாவோ எதிர்பார்க்கவே யில்லை. மல்லிகா நடராஜனுடைய முகத்தையும் நீண்டிருக்கும் கரத்தையும் பார்த்து வியப்பினாலும் பீதியினாலும் வாயடைத்து நின்றாள்.

தன்னையும் மல்லிகாவையும் சேர்த்துப் பார்த்துத் தவறாக அர்த்தம் கற்பித்து விட்டான் நடராஜன் என்று சேகருக்குச் சந்தேகமின்றித் தெரிந்து விட்டது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு நடராஜன் மீது பாய்ந்தான். சற்றுத் தாமதித்தால் கூடத் தன்னைச் சுட்டு விடுவான். அதற்கு முன்னால் துப்பாக்கியைப் பிடுங்கிக் கொள்வோம் என்று எண்ணி ஒரே தாவலில் அவனை எட்டி, இரண்டு கரங்களாலும் வலக் கையைப் பிடித்து முறித்தான். நடராஜனுடைய கை இடது தோளுக்குப் பின்னால் மடங்கிக் கொடுத்தது.

தன்னை விடுவித்துக் கொள்ள நடராஜன் செய்த முயற்சியிலே விரல் அழுந்தியது. துப்பாக்கி வெடித்து அவனுக்குப் பின்னாலேயே 'என்ன நடக்குமோ?' என்ற கவலையுடன் நின்று கொண்டிருந்த விமலாவின் முகத்தைத் தாக்கியது.

துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டதும் ஒரு கணம் நடராஜனும், சேகரும், மல்லிகாவும் செயலற்று நின்றார்கள். அடுத்த கணம் அனைவரது கண்களும் கீழே நினைவிழந்து விழுந்திருந்த விமலாவைப் பார்த்தன.

மல்லிகா பயங்கரமாக வீரிட்டாள். சேகர் வெளியே ஓடினான். உடல் பதற உள்ளம் நடுங்க அவளருகே மண்டியிட்ட நடராஜன் தான் சிந்தவிட்ட ரத்தத்தில் தன் விரல்கள் நனைந்து சிவப்பதைக் கண்டான்.

இதழ்கள் உதிர்ந்துவிடுமோ என்ற கவலையில் மிகுந்த அக்கறையுடன் ரோஜா மலர் மாலையைத் தூக்குவது போல விமலாவைத் தனது இரு கரங்களாலும் வாரி எடுத்து மார்புறத் தழுவியபடியே நடந்தான். அவள் உயிர் ரோஜா இதழாக உதிர்ந்து விடுமோ என்ற கவலை அவனை ஆட்கொண்டது.

(தொடரும்)

பெங்களூர் கல்லூரியின் நூற்றாண்டு விழா!

எஸ்.வி.எஸ்.

சமீபத்தில் பக்திவலையில் ஜடபரதரின் கதை மிக உருக்கமாக இருந்தது. முற்றும் துறந்து போக நிலையில் இருக்கும் ஒரு முனிவரை, மான் பாசம் எப்படிப் பிடித்து ஆட்டி விட்டது! பாசங்களை வெல்வதுதான் எவ்வளவு கஷ்டம் என்று தோன்றியது.

இந்தக் கதையைப் படித்து இந்தச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த போதே, ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

ராஜாஜி சில காலமாக உடல் நிலை சரியில்லாமல் பலவீனமாக இருந்தார்கள். அவரைப் பார்க்க நான் போயிருந்த போது, "பெங்களூர் போக வேண்டும்!" என்றார்கள்.

"இந்த உடல் நிலையிலா?"

"ஆமாம்! என்ன செய்வது? போய்த் தான் ஆக வேண்டும்! நான் போகாமல் இருக்கலாமா?" என்றார்கள்.

ராஜாஜியையும் பாசம் வென்று விட்டது என்று நினைத்துக் கொண்டேன். அந்தப் பாசங்கள் இரண்டு.

ராஜாஜி பெங்களூரில் சென்ட்ரல் காலேஜில் படித்தார். அந்தக் கல்லூரியின்மீது அவருக்கு அளவுகடந்த பாசம். அந்தக் கல்லூரிக்கு நூற்றாண்டு விழா என்றால் தாம் போகாமல் இருக்கலாமா என்பதே அவர் எண்ணம்.

அடுத்தது பெங்களூரில் அவரது பால்ய நண்பர் ஸ்ரீ ராமராவ் இருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ராஜாஜியை பெங்களூர் போக இணங்கச் செய்தது.

உள்ளம் எவ்வளவோ காரியங்கள் செய்ய நினைக்கின்றன. ஆனால் உடல் அதற்குத் தகுந்தபடி யெல்லாம் எப்பொழுதும் இணங்கி வருவதில்லை. அதிலும் நவம்பர் டிசம்பர் மாதங்கள் பெங்களூரில் எவ்வளவு குளிர்! அந்தக் குளிர் ராஜாஜியின் உடலுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. அந்த ஊரை விட்டு எவ்வளவு சீக்கிரம் புறப்படுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று தோன்றியது.

பெங்களூர் சென்ட்ரல் காலேஜ் நூற்றாண்டு விழா வைபவம் டிசம்பர் இருபதாம் தேதி ஏற்பாடாகியிருந்தது. விழாவுக்கு ராஜாஜி தலைமை வகிக்க வேண்டும் என்றும், மைசூர் கவர்னர் ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் தொடக்கவுரை நிகழ்த்த வேண்டும் என்றும் திட்டம்.

கல்லூரியை ஒட்டினாற் போலிருந்த திறந்த வெளியில் அழகான பந்தல் அமைத்திருந்தார்கள். அந்தப் பந்தலில் பெங்களூர் நகரின் பல பிரமுகர்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தார்கள். படித்தவர்கள் நிரம்பிய அந்தச் சபையே பார்க்க மிக அழகாக இருந்தது. கடவுள் வணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது.

அக்கல்லூரியின் பழைய மாணவராகிய திருவாளர் டி. சிங்காரவேலு முதலியார் வரவேற்புரை நல்கினார்.

இந்தக் கல்லூரியைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஒரு தனிப் பெருமை. இந்தக் கல்லூரியினர் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலைக் கொடுத்த பெருமை தங்களது என்றும், இந்தியாவின் முதல் ஆடிட்டர் ஜெனரலைக் கொடுத்த பெருமை தங்களது என்றும் மார் தட்டிக் கொள்ளுகிறார்கள். இப்படிச் சாதாரண மக்கள் பெருமை பேசிக்கொண்டால் பேசிவிட்டுப் போகிறார்கள் என்று சொல்லிவிடலாம்!

ஸர். எம். விச்வேச்வரய்யா எவ்வளவு பெரிய மனிதர். இன்னும் இரண்டு ஆண்டுகள் போனால் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டும். அவரும் பெங்களூர் சென்ட்ரல் காலேஜின் மிகப் பழைய மாணவர். அவராலேயே அந்தக் கல்லூரிக்கு ஒரு பெரும் பெருமையுண்டு. அப்படிப்பட்டவர், இவ்வருஷ நூற்றாண்டு விழாவை யொட்டி வெளியிட்டுள்ள மலருக்கு அளித்துள்ள முன்னுரையில் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜியையும் முதல் இந்திய ஆடிட்டர் ஜெனரல் ஸ்ரீ நரஹரி ராவையும் அளித்த பெருமை தங்களது என்கிறார்!

மைசூர் ராஜ்யத்துக்குத் திவானாகவும், இன்னும் வேறு சில சமஸ்தானங்களில் திவானாகவும் இருந்து சிறந்த பணியாற்றிய ஸர். மிர்ஸா இஸ்மாயில் இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்தான்.

இப்படி இக்கல்லூரி இந்திய நாட்டுக்கு அளித்த தலைவர்களை பெருமை யெல்லாம் சொல்லி, அத்தலைவர்களில் முதன்மை மாணவரான ராஜாஜி இந்த நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டதையும் பெருமையாகச் சொல்லிக்கொண்டு எல்லோருக்கும் வரவேற்பு நல்கினார், திரு டி. சிங்காரவேலு முதலியார்.

அன்று விழாவைத் துவக்கி வைத்த மைசூர் கவர்னர் ஜெயசாமராஜ உடையார் ஒரு அரிய பிரசங்கத்தைச் செய்தார். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இன்று நாம் நிம்மதியற்றுக் கவலைக்கு இரையாய் வாழ்கிறோம். உயிரினங்களின் பரிணாம சாஸ்திரத்தைப் படித்தவர்கள்,



விழாவில் ராஜாஜி தலைமையுரை நிகழ்த்துகிறார். ராஜாஜிக்குப் பக்கத்தில் மைசூர் கவர்னரும் அவருக்குப் பக்கத்தில் டாக்டர். எம். விச்வேச்வரய்யா அவர்களும் இருப்பதைப் பார்க்கலாம்.

பிராணி வர்க்கத்தில் மனிதன் ஒருவன் தான் சிரிக்கும் தனித்தன்மை பெற்றிருக்கிறான் என்கிறார்கள்.

"எனவே, விஞ்ஞான சாஸ்திரத்துக்கு முரணின்றி 'மனிதன் என்பவன் சிரிக்கும் பிராணி' என்று சொல்லலாம். அரிஸ்டாடில் என்பவர் 'மனிதன் யாரேனில் பகுத்தறிவு படைத்தவன்' என்று கூறினார். அவர் கூறியது உண்மைதான். ஆனால் மனிதன் எப்போதுமே பகுத்தறிவு படைத்தவனாகவா இருக்கிறான்? இல்லை. அதுபோலவே மனிதன் எப்பொழுதும் சிரித்துக் கொண்டுமிருப்பதில்லை. இந்தக் காலத்தில் மனிதன் ஓயாமல் கவலைப்படப் பழகி விட்டான். 'மனிதன் என்பவன் ஓயாமல் கவலைப்படும் பிராணி' என்று கூறினால் மிகப் பொருத்தமாக இருக்கும்' என்று தோன்றுகிறது.

"எத்தனையோ பெரிய விஷயங்களைப் பற்றியும் சிறிய விஷயங்களைப் பற்றியும் ஓயாமல் கவலைப்படுகிறோம். விஞ்ஞான அறிவு முன்னேறுவதில் குறைவில்லை; ஆனால் மனிதப் பண்புக்கு வேண்டிய போது அறிவு தயங்கி நிற்கிறது! உலகில் செல்வம் பெருகிக் கொண்டுதான் இருக்கிறது. இருப்பினும் ஏழைமையும், பசியும், பட்டினியும் குறைந்தபாடில்லை. உடல் வருத்தத்தைக் குறைப்பதற்காக ஏற்படுத்தும் இயந்திர சாதனங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கியிருக்கின்றன. உலகில் எங்கு பார்த்தாலும் பொருட்களைப் பெருக்குபவர்கள் சாமான்களை விற்க முடியாமல் திண்டாடுவதையும்; சாமான்களை வேண்டும் என்பவர்கள் வாங்கும் சக்தியின்றிக் கும்புவதையும் பார்க்கிறோம். காலத்தை விழுங்காமல் மிச்சப்படுத்தி ஓய்வு அளிக்கும் இயந்திர சாதனங்களும், வேகமாக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்லும் ஆகாயவிமானம் போன்ற வசதிகளும், மனிதனுக்கு நிம்மதியளிக்கவில்லை. இவற்றின் காரணமாகக் கிடைக்கும் ஓய்வை சந்தோஷமாகக் கழிப்பதற்குப் பதில் கவலைப்பட்டே கழிக்க வேண்டியிருக்கிறது. வாழ்க்கையின் அத்தியாவசியப் பொருள்களான உணவு, உடை விலைகள் ஏறிவிட்டனவே, ஏறிவிட்டனவே என்ற கவலையில் கழிக்கும் 'ஓய்வு' நேரம் கிடைத்தும் அதனால் என்ன பயன்?" என்று கேட்டார் மைசூர் கவர்னர்.

ராஜாஜி தமது தலைமையுரையில் 'சென்ற நூற்றாண்டுகளில் பௌதிக சாஸ்திரம் மிக வளர்ந்து, மக்கள் பண்பைக் காப்பாற்றும் தெய்வ நம்பிக்கையை அடியோடு அழித்து விட்டது. இன்று மனித குலம் தழைத்தோங்க வேண்டுமென்றும், மனிதப் பண்பு உயர்ந்து விளங்க வேண்டுமென்றும் மாணவர்களிடையே தெய்வ பக்தியை வளர்க்க வேண்டும்' என்றார். "இப்படிச் சொல்வதால் 'பழைமையை உயிர்ப்பிக்க விரும்புகிறவர்' என்று எனக்கு அவப்பெயர் சூட்டப் பார்க்கலாம். ஆம், உண்மையில் நான் பழைமையைப் புதுப்பிக்க விரும்புகிறவன். எம் மாநிலத்திலேயே ஒரு நகராட்சி மன்றம் தன் வசமுள்ள சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன என்பதை அறிந்து, மண்ணையும் கல்லையும் போட்டுச் செப்பனிடுகிறதே தவிர, அந்தச் சாலைக்கு ஏற்பப் புது மோட்டார்களையும் வாகனங்களையும் கண்டு பிடிப்போம் என்று எண்ணுவதில்லை. அப்படித்தான் நான் கூறுவதும்!" என்று கூறினார்.

இந்த உதாரணத்தால் ராஜாஜி கூற வந்துள்ள உண்மை நடைமுறையில் கொண்டு வரக் கூடியதுதான் என்ற உறுதி அங்கு கூடியிருந்த மக்கள் உள்ளத்தில் பதிந்து விட்டது! ஆயிரக்கணக்கான மக்கள் முக மலர்ச்சியுடனும் கரகோஷத்துடனும் வரவேற்றனர்.

ராஜாஜியின் உடல் நிலை அன்று மிக மோசமாயிருந்தது. அங்கு அவரால் உட்காரக் கூட முடியாத நிலை. ஆனாலும் ஏற்கனவே ஒப்புக் கொண்ட காரியத்தைச் செய்யாமலிருக்கக் கூடாது என்ற உறுதியில் அன்று பேசி முடித்தார்.

மேலும், ராஜாஜி தாம் அடிக்கடி உள்ளத்தில் மகிழ்ச்சியுடன் நினைவு கூரும் நாட்கள் தாம் கல்லூரியில் கழித்த நாட்களைத்தான். நூற்றாண்டு மலரில் ராஜாஜியும் ஸ்ரீ நவரத்ன ராமராவும் சேர்ந்து எழுதியுள்ள கட்டுரையில்



பெங்களூர் சென்ட்ரல் காலேஜ்

"தாயிடம் குழந்தை அன்பு செலுத்துவது போல், நாங்கள் எங்கள் கல்லூரியை நேசித்தோம்!" என்று கூறுகிறார்கள்.

கல்லூரி தாயானால் அங்கொரு தந்தையும் இருந்தார். அவர்தான் பிரின்ஸிபால் டேட். அவரைப் பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு எழுதுகிறார்கள்:

"எங்கள் பேராசிரியர்கள் அத்தனை பேரையுமே நேசித்தோம். ஆனால் எங்கள் உள்ளத்தில் டேட் துரைதான் எல்லோருக்கும் மேலாக வீற்றிருந்தார். அவர் எங்களுக்குத் தந்தைபோல் விளங்கினார். நாங்களும் அவரிடம் தந்தையிடம் காட்டும் பாசமும் அன்பும் கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட தெய்வத்தினிடம் கொள்ளும் பயபக்தியே கொண்டிருந்தோம் என்று சொல்லலாம்!" என்கின்றனர்.

ஒரு தடவை, கல்லூரிக் குமாஸ்தா நரசிங்கராவ் அவர்களிடம் சென்னை சர்வகலாசாலைக்குச் சில அவசரக் கடிதங்கள் அன்றையத் தபாலில் சேர்த்துவிட வேண்டும் என்று பிரின்ஸிபால் டேட் கூறியிருந்தாராம். நரசிங்கராவ் அவசர வேலையாயிற்றே என்று பரபரப்புடன் கடிதங்களையெல்லாம் டைப் அடித்து, ஒட்டி அனுப்பி விட்டார். மாலையில் பிரின்ஸிபால் டேட் அந்தக் கடிதங்களையும் தஸ்தாவேஜுகளையும் கொண்டு வரும்படி சொன்னபோதுதான், தாம் பிரின்ஸிபாலிடம் கையெழுத்து வாங்காமல் அனுப்பி விட்டது ஞாபகம் வந்தது. தலையில் பேரிடி விழுந்தாற் போலிருந்தது! இந்தச் சமாசாரத்தை அறிந்த டேட் துரையும் தமது கஷ்டத்தை மூடி மறைக்காமல் கோபித்துக் கொண்டார்.

இந்த நரசிங்கராவ் தமது மகள் கல்யாணத்தைத் திருப்பதியில் நடத்த ஏற்பாடு செய்திருந்தார். பரீட்சைகள் நடக்கும் சமயம். கல்லூரியில் வேலை அதிகமாக இருக்கும். இந்தச் சமயத்தில் லீவ் கேட்பதே கஷ்டம். அதிலும் மேலே கூறிய பெருந் தவறு செய்துவிட்ட நிலையில் டேட் துரையை நேரில் சந்தித்து விடுமுறை கேட்பது எங்ஙனம்? அதனால் கல்யாணத் தேதியை மாற்ற முடியுமா? அதுவும் முடியாது. இப்படித் தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்ட அவர் தமது தைரியத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு, பிரின்ஸிபாலைச் சந்தித்து நாலு நாட்கள் அனுமதி கேட்டார். உடனே டேட் துரை கொடுத்துவிட்டார். அப்போது நரசிங்கராவ் அடைந்த மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.

மறுநாள் காலை டேட் துரை தமது அறைக்குப் போய்க் கொண்டிருந்தவர் காரியாலய அறைக்குள் நுழைந்து "நரசிங்கராவ் உம்முடைய மகளின் கல்யாணம் அடுத்த வாரம் இல்லையா? இதை எடுத்துக் கொள்ளுங்கள். எதற்காகவாவது உபயோகப்படும்" என்று சொல்லி மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை அவர் மேஜையின் மீது வைத்து விட்டுப் போனாராம். அப்போது நரசிங்கராவ் உள்ளம் ஆனந்தத்தாலும் நன்றியாலும் என்ன பாடு பட்டிருக்கும் என்பதைச் சொல்லி முடியுமா?

இந்த ஒரு சம்பவமே டேட்டிடம் பயப்படும்படியான தன்மையும், பக்தி செலுத்தும்படியான தன்மையும் ஒருங்கே அமைந்திருந்தன என்பதை விளக்கும்!

டேட் துரை ஆண்டுதோறும் பல மாணவர்களுக்குத் தம் கையைவிட்டுச் சம்பளம் கொடுத்து உதவியிருக்கிறார். அது கிட்டத்தட்ட 300, 400 ரூபாய்க்கும் போய் விடுமாம்!

"ஆசிரியர் என்ற முறையில் மிகச் சிறந்த ஆசிரியராக விளங்கினார். அவர்தான் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் இலக்கியம் என்றால் என்ன என்பதையும், இலக்கியத்தைக் கண்டு ரஸிப்பதற்கும் கற்றுக் கொடுத்தார். ஆனால் நல்லவர், நேர் உயர்ந்த மனிதப் பண்பு என்பதற்கெல்லாம் லட்சிய புருஷராக விளங்கினார். மிக தாராள மனப்பான்மை கொண்டவர். தவறு என்று நினைக்கும் அளவுக்கு உதார குணம் படைத்தவர். ஆனால் தாம் கொடுத்த உதவிகளை மிகமிக ஜாக்கிரதையாக மறைத்துக் கொள்வார். அதனால் அவருடைய சகாயால் எத்தனை மாணவர்கள் வாழ்க்கையில் முன்னுக்கு வந்திருந்தார்கள் என்று சொல்லி முடியாது!" என்று எழுதுகிறார்கள்.

நாம் செய்யும் உதவியை மறைத்துக் கொள்ளும் பண்பு ராஜாஜிக்கு எங்கிருந்து வந்தது என்பது இப்பொழுது விளங்கி விட்டதல்லவா?

இப்படிப் பலவிதங்களில் சிறப்பு வாய்ந்த பெங்களூர் சென்ட்ரல் காலேஜுக்கு இப்பொழுது பேராசிரியர் போண்டே முதல்வராக விளங்குகிறார். இவரது தலைமையில் சென்ட்ரல் காலேஜ் இன்னும் சீரும் சிறப்பும் அடைவதாக.

ஹாப்கின் கழகம்

நீடாமங்கலம் வேதாந்தம்

“பணமும் வேண்டாம், பவிசும் வேண்டாம். வியாதி யில்லாமல் இருந்தால் போதும்” என்று பெரியோர்கள் ஆசீர்வதிப்பது வழக்கம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென்று பழமொழி. புதிய புதிய பெயர்களில் பல வியாதிகள் வேறு பரவி வரும் தற்காலத்தில், வெள்ளம் வருவதற்கு முன் அணை போடுவதைப் போல், தற்காப்பு செய்து கொள்வது மிகமிக அவசியமாகும். இந்தப் பணியில் தற்சமயம் நம் நாட்டில் பற்பல விஞ்ஞானக் கழகங்கள் அருந்தொண்டாற்றி வருகின்றன. பல கொடிய வியாதிகளுக்குத் தற்காப்பு மருந்துகளை இக்கழகங்கள் ஆராய்ச்சி செய்தும் தயாரித்தும் வருகின்றன. இவ்வாறு பணியாற்றி வரும் கழகங்களில் மிகச் சிறந்தது பம்பாய் ஹாப்கின் கழகமாகும். பம்பாய் சர்க்காரும் பாரத சர்க்காரும் நிர்வகித்து வரும் இந்தக் கழகம், உலகிலேயே சிறப்புவாய்ந்த ஒரு சில விஞ்ஞானக் கழகங்களில் ஒன்று.



ஹாப்கின்

கி. பி. 1896-ம் ஆண்டில் நம் நாட்டில் பரவிய 'பிளேக்' நோய் ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொள்ளை கொண்டு போன போது, அந்த அவலநிலையைக் கண்டு மனம் கலங்கினார் ஒரு பெரியார். இந்த வியாதிக்கு ஒருமுடிவு கட்டியே ஆகவேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டார் அவர். இரவு பகலாக அன்ன ஆகாரமின்றித் தம் சின்னஞ் சிறு வீட்டில் ஆராய்ச்சியில் ஆழ்ந்தார். முயற்சியுடையார் என்றும் இகழ்ச்சி அடையாரல்லவா? 'பிளேக்' நோய்க்கு அவர் கண்டுபிடித்த ஊசி மருந்தைக் கண்டு உலகமே ஆச்சரியப்பட்டது.

இச்சாதனையைப் புரிந்த பெரியவர்தான் டாக்டர் ஹாப்கின். அவருடைய திறமையைப் பாராட்டி அவருக்கு உதவி அளிக்கப் பம்பாய் நகரசபையும் அரசாங்கமும் முன் வந்தன. பம்பாய் கௌரோஜி வீதியில் 'சிறிய' வீட்டிலிருந்த அவருடைய “பிளேக் ஆராய்ச்சிக் கழகம்” பரேல் என்ற இடத்தில் தற்சமயம் ஜே. ஜே. ஆஸ்பத்திரி இருக்கும் இடத்துக்கு மாற்றப்பட்டது. உலகம் முழுதும் 'பிளேக்'கை ஒழித்துக் கட்ட, ஹாப்கினின் மருந்துகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

பிளேக்கை விரட்டி விட்ட பெருமையில் இறுமாந்து சும்மா இருந்து விடவில்லை டாக்டர் ஹாப்கின். சாதித்து விட்டதில் பெருமை கொள்ளாமல் சாதிக்க வேண்டியதில் தான் நாட்டம் கொள்வர் பெரியோர். மீண்டும் மீண்டும் ஆராய்ச்சியில் மூழ்கினார் அவர். பாரத நாடு முழுதும் வருடந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் காலராவினால் இறப்பதைக் கண்டு, அதை ஆராய்ச்சி செய்து மருந்தையும் கண்டு பிடித்து விட்டார்.

தமது கடைசி மூச்சையும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கே அர்ப்பணித்த இப்பெரியார், பற்பல வியாதிகளுக்கு மருந்துகள் கண்டுபிடிக்க ஆராய்ச்சிக் கூடங்களைப் பெருக்கினார். இட வசதிக்காகப் போர்த்துக்கீசிய கோவில் ஒன்று ஆராய்ச்சி நிலையமாக மாற்றப்பட்டது. டாக்டர் ஹாப்கின் காலமான பின்பு, அவருடைய பணியைத் தொடர்ந்து புரிய பம்பாய் சர்க்கார் முன் வந்தது. ஏராளமான பொருட்செலவில் நவீன சாதனங்களுடன் ஹாப்கினின் பெயராலேயே தற்சமயம் இந்தக் கழகம் நடத்தப் பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான மாணவ-மாணவிகள் இங்கு பயிற்சி பெற்றும் பற்பல ஆராய்ச்சிகளில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்று பழமொழி. உலகத்தில் 2500 வித ஜாதிப் பாம்புகள் இருக்கின்றன. இவற்றுள் இந்தியாவில் மட்டும் 400க்கு மேற்பட்ட ஜாதிகள் இருக்கின்றன. இவற்றுள் 60 விதப் பாம்புகள் கொடிய விஷம் வாய்ந்தவை.

வருடமொன்றுக்கு நம் நாட்டில் மட்டும் இருபதினாயிரம் பேர்களுக்குமேல் பாம்பு தீண்டியதால் இறப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு ஒருவழி செய்ய வேண்டும் என்று தீவிர ஆராய்ச்சிசெய்த இக்கழகம், முடிவில் வெற்றியும் கண்டது. 'முள்ளைக் கொண்டே முள்ளை எடு' என்ற பழமொழி



ஹாப்கின் ஆராய்ச்சிக் கழகம்

தான் அவர்களுக்கு வெற்றி வைத்தேடித் தந்தது. பாம்பு விஷத்தைக் கொண்டே பாம்புக் கடியைத் தீர்க்க மருந்து கண்டுபிடித்து விட்டார்கள். இந்த மருந்துக்கு மாற்றுப்பாம்புவிஷம்என்று பெயர். தினந்தோறும் ஆயிரக்கணக்கான பாம்புகளிடமிருந்து விஷத்தை எடுத்து அதில் 'மாற்று' மருந்து கலந்து, உலரச் செய்து இம்மருந்தைத் தயாரிக்கின்றனர். இதற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பாம்புகளைத் தருவித்து அவற்றைப் பரிபாலித்து வருகின்றனர் இக்கழகத்தினர். வருடமொன்றுக்குச் சராசரி 400,000 மில்லி லீடர்கள் பாம்பு மருந்தை இந்தக் கழகத்தினர் தயார் செய்கின்றனர். சமீபத்தில் சதாரா என்ற இடத்தில் பாம்பு ஆராய்ச்சிக்கென்றே ஒரு நிபுணர் கமிட்டியை இந்தக் கழகம் அனுப்பியிருக்கிறது.



பாம்பிலிருந்து விஷம் எடுக்கப் படுகிறது.

ஈ, கொசு, எலி போன்றவற்றால்தான் நம் நாட்டில் பெரும்பான்மையான வியாதிகள் பரவுகின்றன. ஈயையும் கொசுவையும் எப்படி அழித்து விரட்டுவது? அதற்கு வேண்டிய மருந்துகளை இக்கழகம் தயார் செய்து வருகிறது. எலியைப் பொறுத்தவரை, மிகவும் அபாயகரமான பிளேக் நோய் எந்த நேரத்திலும் பரவலாம். ஆகவே தினந்தோறும் எலிகள் ஆராய்ச்சி செய்வதில் இக்கழகம் ஈடுபட்டிருக்கிறது. பம்பாய் கார்ப்பொரேஷன் தினமொன்றுக்குச் சராசரி 3000 எலிகளை உயிருடன் பிடித்து இவர்களிடம் ஒப்படைக்கிறது. சென்ற வருடத்தில் மட்டும் 10,17,989 எலிகளை இந்தக் கழகம் பரிசோதனை செய்து கொன்றிருக்கிறது. பம்பாயைத் தவிர்த்து இதர மாகாணங்களிலிருந்தும் இங்கு எலிகள் பரிசோதனைக்கு அனுப்பப்படுகின்றன.



பிராணிகளுக்கு வாக்ஸின் மருந்துகளைச் செலுத்திப் பரிசோதனை நடக்கிறது.

மற்றொரு அபாயம் நாய்க் கடி! "ஜிம்மி, பொம்மி, டாமி" என்று நாம் கொஞ்சி மகிழும் பைரவக் குஞ்சுகளெல்லாம் மூளை கலங்காதவரையில் தான் நமக்கு நண்பன், தோழன் எல்லாம். நாய்க்கும் மானுக்கும் எந்தச் சமயத்தில் மூளை கலங்கும் என்று சொல்ல முடியாது. எந்த நிமிடத்திலும் மூளை கலங்கக் கூடிய சரீராம்சத்தைக் கொண்டவை. மதம் பிடித்த யானையையும் பைத்தியம் பிடித்த நாயையும் கட்டுப்படுத்த முடியாது என்று பழமொழி. நாய்க் கடியினால் இறப்பவர்கள் ஏராளம். இறக்காமல் துடிதுடித்து நாயைப் போலவே குரைத்துக் கொண்டு தவிப்பவர்கள் அதை விட அதிகம்! வருடத்துக்குப் பத்தாயிரம் பேர்களுக்குமேல் இக்கழகத்தில் சிகிச்சைபெற்றுப் புத்துயிர் பெறுகின்றனர். 1952ம் வருடத்தில் மட்டும் 7,779 பேர்கள் இக்கழகத்தில் சிகிச்சை பெற்றனர். சென்ற வருடத்தில் மட்டும் 10,208 பேர்கள் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். நாய் வளர்ப்பதில் பெருமை கொண்டுள்ள நமக்கு இதுவும் ஒரு பெருமைதானே!

அம்மை நோய்க்காக வருடத்துக்கு 30,00,000 மில்லி லீடர்கள் மருந்து இங்கு தயாராகிறது. இதைத் தவிர்த்து மஞ்சள்காமாலை, 'ப்ளு', கக்குவான் இருமல், டைபாய்ட், டபிள் நிமோனியா ஆகிய எல்லா வியாதிகளுக்கும் இங்கு மருந்து தயார் செய்யப்படுகிறது. தற்சமயம் வருடமொன்றுக்கு 10 கோடி மில்லி லீடர்கள் காலரா ஊசிகளும் 3,00,000 மில்லி லீடர்கள் டைபாய்ட் ஊசிகளும் இங்கு தயாராகின்றன. இக்கழகத்தினர் தங்கள் ஆராய்ச்சியின் பயனைத் தயாரிக்கும் மருந்துகளை அதே சீரில் தனிப்பட்டவரும் தயாரிக்க உதவிபுரிவது குறிப்பிடத்தக்கது. தவிர, இந்தியாவில் தனிப்பட்டவர் தயாரிக்கும் எல்லா மருந்துகளையும், இக்கழகத்தினர் ஒருமுறை பரிசோதனை செய்து பார்க்கின்றனர். சென்ற வருடத்தில் மட்டும் இவ்வாறு பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட 5,156 மாதிரி

மருந்துகளில், 1,915 மருந்துகளுக்கு இந்தக் கழகம் பொதுஜன உபயோகத்துக்குத் தகுதியானவை அல்ல என்று தடை விதித்திருக்கிறது.

இக்கழகத்தின் சாதனையைக் கண்டு வியந்த உலக மருத்துவ சங்கம் இக் கழகத்தினர் தயாரிக்கும் மருந்துகளை உலகெங்கும் பரப்ப முன்வந்திருக்கிறது. இக்கழகத்தினர் தயாரிக்கும் 'சல்பா' வைட்டமின் மாத்திரைகளுக்கு உலகெங்கும் தனிப்புகழ். வருடமொன்றுக்குச் சராசரி மூன்று கோடி மாத்திரைகள் இந்தக்கழகம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது!

உலக செஞ்சிலுவைச் சங்கத்துக்காக இக்கழகம் ரத்தசேமிப்பு கேந்திரமாகவும் விளங்குகிறது. ரத்தத்தைச் சேகரித்து 'ப்ளாஸ்மா' என்ற பெயரில் வழங்குகிறார்கள் இக்கழகத்தினர். போர்க் காலங்களில் ராணுவ வீரர்களுக்கு இந்த முறையில் ரத்தம் செலுத்துவது மிகவும் சௌகர்யம். தற்சமயம் இக் கழகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். மனிதர்களுக்கு முன்பிறப்பான குரங்குகள் நூற்றுக் கணக்கில் இங்கு வளர்க்கப்பட்டு, பரிசோதனைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. 200 குதிரைகளுக்கு மேல் இந்தக் கழகத்தின் பரிசோதனை சாலையில் வளர்கின்றன. மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், மிருகங்களுக்கும் தாவர ஜந்துக்களுக்கும் இக் கழகம் வியாதிகளைப் போக்க மருந்துகளைத் தயாரிக்கிறது. இந்தக் கழகத்தின் வாசகசாலையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்களும் 16,000 ஆராய்ச்சி அறிக்கைகளும் இருக்கின்றன.

முன் காலத்தில் எல்லாம் தக்க சுகாதார வசதியின்றி மக்கள் ஆயிரக்கணக்கில் இறந்து வந்தனர். நவீன மருத்துவ சாஸ்திர வளர்ச்சியின் பயனாகப் பல வியாதிகளைத் தடுக்கும் முறைகளையும், பல வியாதிகளை வெற்றி கொள்ளும் மருந்துகளையும் கண்டுபிடித்திருக்கிறோம். இதன் காரணமாக உலகில் பல நாடுகளில் இறப்பவர்களின் எண்ணிக்கை பெரிதும் குறைந்திருக்கிறது. மக்களின் சராசரி உயிர் வாழ்வும் இம் மண்ணுலகில் பெருகி வருகிறது. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் சராசரி மக்கள் வாழ்வு அறுபது வயது வரை நீடித்திருக்கிறதாம். இது மனிதனின் அறிவு பெற்ற வெற்றி. இந்த அறிவாற்றலுக்கு ஞாபகச் சின்னமாக விளங்குகிறது ஹாப்கின் கழகம்.

மருத்துவ உலகில் ஜயக்கொடி நாட்டி விட்ட இந்தக் கழகத்தின் வைரவிழாவை நிகழும் ஜனவரி மாதம் 10-ம் தேதி பாரதத்தின் ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் தலைமையில் கொண்டாடப் போகிறார்கள். உலகிலேயே பாரத நாட்டின் பெருமையை நிலைநாட்டும் இந்தக் கழகத்தைத் தோற்றுவித்த அமரர் ஹாப்கினைப் பாரத மக்கள் மறக்க முடியாது.



கௌரவம்

அலுப்புடன் அலுவலகத்திலிருந்து வந்த ஏகாம்பரத்தின் கண்கள் வழக்கத்தையொட்டிக் கடிகார ஸ்டாண்டின் மீது சென்றன. அங்கே இருந்த கவரை எடுத்தான். ஏற்கெனவே கவர் உடைத்திருந்தபடியால் எளிதில் அதனுள்ளிருந்த கடிதத்தை வெளியில் உருவி எடுத்தான்.

"அன்புள்ள அண்ணாவுக்கு,

சுந்தரி அநேக நமஸ்காரம். இப்பவும் வருகிற புதன்கிழமை சிரஞ்சீவி சுதாகருக்கு ஓர் ஆண்டு பூர்த்தியாகிறது. அதை வெகு விமரிசையாகச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். நீங்கள் மூவரும் கட்டாயம் வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நான் எழுதத் தேவையில்லை. இங்களுடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி நீ சீர் வகைகளைச் செய்து வரவேண்டுமென்பது என் ஆசை. இருநூறு ரூபாய்க்குமேல் ஆகாது."

நமஸ்காரம்,

சுந்தரி

"அவள் பணக்காரி! அவளுக்கு இருநூறு ரூபாய் இரண்டு பைசாவுக்குச் சமானம். எனக்கு அது இரண்டு லட்சமாச்சே!" என்று ஆத்திரத்துடன் கூறிய ஏகாம்பரம் வெறுப்பு மிகுதியால் கடிதத்தை ஒரு மூலையில் விட்டெறிந்தான்.

"அவள் என்னவோ எழுதியிருக்கிறாள். உன்னால் முடிந்ததை நீ செய்யேன்" என்று கூறினாள் ஏகாம்பரத்தின் தாரம் அலமு.

"எப்படி எழுதுவாள்? அண்ணா ஐ. ஏ. எஸ். படித்து விட்டுக் கலெக்டர் உத்தியோகம் பண்ணிக் கொண்டிருப்பதாக எண்ணமா? நேற்று வரையில் இங்கே இருந்தவளுக்கு நம்முடைய நிலைமை தெரியாமலா போய் விடும்? செல்வச் செருக்கு அதற்குள் கண்களை அவித்து விட்டதா?" வாய்க்கு வந்ததைப் பேசினான் ஏகாம்பரம். அவன் முன்கோபி. வறுமை வேறு அவனைப் பொல்லாதவனாக்கிக் கொண்டிருந்தது.

"சரி, சரி! அப்புறம் பேசிக்கொள்ளலாம். இந்தக் காப்பியைச் சாப்பிடுங்கள்" என்று கூறினாள் அவன் மனைவி அலமு காப்பியுடன் அவனருகில் வந்து.

கடக் கடக் காப்பி வயிற்றுக்குள் போனதும் ஏகாம்பரத்தின் களைப்பு சிறிது நீங்கியது. மனத்தில் அமைதி உண்டாயிற்று.

"இருநூறென்ன? நூறுகூடச் செய்யலாம். இருந்தால்தானே? நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் மூன்று பேர்களுக்கு வயிறு நிறையக் கூடச் சாப்பிட முடிவதில்லை. சிரமம், சீ! நான்கு பெண்களுக்கு நடுவில் ஒரு ஆண் பிறந்து விட்டால் போச்சு. அவனுக்கு வேறு நரகமே கிடையாது. பிழிந்து தின்று விடுகிறார்கள்" என்று சொன்ன ஏகாம்பரத்தை மிகவும் பரிதாபமாகப் பார்த்தாள் அலமு.

'அவன் சொல்வதில்தான் என்ன தவறு?' என்று தோன்றியது அலமுவுக்கு. அப்பாவுக்கு நான்கு பெண்களும், ஒரு பிள்ளையும். முதல் மூன்று பெண்களுக்கும் இருக்கிற நிலபுலன்களை விற்றுக் கலியாணத்தை முடித்து விட்டான். பிறகு ஏகாம்பரத்துக்கும் மணமாயிற்று. கடைக்குட்டி சுந்தரி. அவளும் கலியாண வயதை அடைந்து விட்டாள். விற்றுப் பணமாக்க நிலமில்லை. ஏகாம்பரத்தின் சொற்ப வருவாயில் கலியாணத்தை எப்படி நடத்த முடியும்? ரொம்பவும் கவலைப்பட்டாள் அலமு.

சுந்தரி அவள் பெயருக்கேற்ப நிகரற்ற சுந்தரியாகவே இருந்தாள். அவளுடைய அழகு அவளுக்கு ராமநாதனின் காதலைத் தந்தது. பெரிய தனவந்தரின் மகனான ராமநாதனின் காதல் அவளுக்குக்கிடைத்ததே ஒரு ஆச்சரியம்!

ஒரு சமயம் சுந்தரி 'பூம்பொழில்' என்ற ஒரு பத்திரிகையில் ஒரு சிறுகதையைப் படித்து விட்டு, அதைப் பற்றி வெகுவாகச் சிலாகித்து அதன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினாள். அந்தக் கடிதத்தில் கதாசிரியரின் விலாசத்தைத் தெரிவிக்கும்படியும் கேட்டிருந்தாள். இரண்டொரு தினங்களில் ஆசிரியரிடமிருந்து பதில் வந்தது. 'சித்ரா. 18, குப்பு

முதலி தெரு, மயிலாப்பூர்' என்கிற விலாசத்துக்கு மறுநாளே சென்றாள் சுந்தரி.

அவளைக் கண்டதும் உள்ளேயிருந்து ஒரு சிறுமி குடுகுடு வென்று விரைவாக ஓடி வந்தாள் வாசலுக்கு.

“உன் அக்கா சித்ரா இருக்கிறாளா அம்மா!” என்று கேட்டாள் சுந்தரி.

“எங்க அக்காவா? சித்ராவா?” பெந்தப் பெந்த விழித்தாள் அவள்.

“ஏன் உங்களுக்கு யார் வேண்டும்?” என்று கேட்டபடியே ஒரு இளைஞன் வெளியே வந்தான் அச்சமயம்.

“பத்திரிகைகளில் எழுதும் சித்ரா...” வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள் குறுக்கிட்ட அவ்விளைஞன். “ஓ! உள்ளே வாருங்கள்!” என்று அழைத்தான்

தயக்கத்துடன் அவனைப் பின்தொடர்ந்தாள் சுந்தரி. இருவரும் ஓர் அறைக்குள் சென்றார்கள்.



“உட்காருங்கள். 'சித்ரா' என்பது நான்தான்” என்றான் புன்முறுவலுடன் அந்த இளைஞன்.

“நீங்களா?” வியப்பினால் சுந்தரியின் அழகு விழிகள் அகன்றன.

“நானேதான். என் இயற்கைப் பெயர் ராமநாதன். புனை பெயர் சித்ரா” என்று கூறினான் அவன் குறும்புப் பார்வையுடன்.

“அப்போ....நான் வருகிறேன்....” என்று நடக்கலுற்றாள் சுந்தரி.

“படித்த பெண்கள் கூடவா இப்படி நடுங்குவார்கள்? நான் என்ன பேயா, பிசாசா?” என்று கேட்டுச் சிரித்தான் ராமநாதன். பதற்றத்துடன் அவ்விடத்தைவிட்டு வெளியேறினாள் சுந்தரி.

“உங்களுடைய வீட்டு விலாசத்தையாவது சொல்ல முடியுமா?” என்று கேட்டான் ராமநாதன்.

“பதினைந்து, பெல்ஸ் ரோட், திருவல்லிக்கேணி” என்று கூறிவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் நடந்தாள் சுந்தரி.

இது நடந்து ஒரு வாரத்துக்குப் பிறகு நேரேயே சுந்தரியின் வீட்டுக்கே வந்து விட்டான் ராமநாதன். ஏகாம்பரத்துடன் ஏதேதோ பேசி விட்டுப் போனான். அதன் விளைவு? கலியாணப் பேச்சு. முடிவு? கலியாணமே!

வரதட்சிணை எதுவுமே கேட்கவில்லை பிள்ளை வீட்டார்கள். கிராமத்தில் இருந்த ஒரு ஓட்டை வீட்டை விற்றுச் சுமாராகக் கலியாணத்தை மட்டும் நடத்தி விட்டான் ஏகாம்பரம். சுந்தரியின் அழகு அவளுடைய திருமணத்தைச் சுலபமாக முடித்து வைத்தது.

கலியாணம் நடந்த மாதமே சுந்தரியின் அதிர்ஷ்டம் ராமநாதனுக்குப் பெரிய வேலை ஆயிற்று. அதிகச் சம்பளத்துடன் பெங்களூருக்குப் போய்விட்டான் அவன், சுந்தரியுடன் மறு வருஷமே சுந்தரி கருத்தரித்தாள். வளைகாப்பு, சீமந்தம், ஏன், பிரசவம்கூட அங்கேயேதான் நடந்தன. ஏகாம்பரம் மனைவியுடன் போய்த் தன்னால் முடிந்ததைச் செய்து விட்டு வந்தான்.

இப்பொழுதும் குழந்தையின் ஆண்டு நிறைவுக் கலியாணத்துக்குத் தன்னால் முடிந்ததைப் போய்ச் செய்து விட்டு வருவதாகத்தான் இருந்தான். அவனால் முடிந்தது அதிகமாகப் போனால் ஐம்பது ரூபாய். சுந்தரி கேட்பது இருநூறு ரூபாய். அவன் எங்கே போவான்? இது அவளுக்கும் தோன்றாமல் இல்லை. 'எழுதமாட்டாதவன் எழுதியிருக்கிறானே! பாவம், அங்கே அவர்கள் அவளை என்ன இடித்துக்காட்டுகிறார்களோ! ஆயிரந்தான் நல்லவர்களாக இருந்தபோதிலும் புக்ககத்து மனிதர்கள் புக்ககத்து மனிதர்தானே! சொல்லித்தான் காட்டுவார்கள்' என்று எண்ணி வருத்தமடைந்தாள் அவளும். பின் அவனை வற்புறுத்திச் சொல்லவும் முடியாது அவளால். அவன் சிரமம் அவள் அறியாததல்லவே?

தினசரிக் காலண்டரில் மூன்று ஏடுகளைக் கிழித்தெறிந்தான் ஏகாம்பரம். மனைவி வற்புறுத்திக் கொடுத்த ஒரு ஜோடி பவுன் வளையல்கள் அவன் சட்டைப் பையில் கனத்தன. துண்டை உதறித் தன் தோளின் மீது போட்டுக் கொண்டு 'தெனி ஜுவெல்லரி மார்ட்'டுக்குப் போனான் முதலில். பிறகு பாம்பே சில்க் ஹவுஸ். கடைசியில் வீட்டுக்குத் துணிமணிகளோடு வந்து சேர்ந்தான்.

மகன் வாங்கி வந்திருந்தவைகளைப் பார்த்தாள் அவளும். 'கிட்டத்தட்ட இருநூறு ரூபாய் இருக்குமே இவையெல்லாம்' என்று தோன்றியது. சிறிது நேர யோசனைக்குப் பிறகு மருமகளைக் காலோடு தலை வரை உற்று நோக்கினாள். பிறகு விஷயம் விளங்க அதிக நேரமாக

லில்லை. 'பாவம், நல்ல பெண்! கடவுள் தான் அருள் புரிய வேண்டும்' என்று மனத்திற்குள் கூறிக் கொண்டாள்.

அன்று இரவு வண்டிக்குச் சுந்தரியின் புக்ககத்துக்கு ஏகாம்பரம் கிளம்பி விட்டான்.

சுந்தரியின் குழந்தை சுதாகரின் ஆண்டு நிறைவுக்கு அதி விமரிசையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பணக்காரக் குடும்பத்து விசேஷங்கள் என்றால் கேட்கவா வேண்டும்? எங்கு பார்த்தாலும் வைரங்கள் ஜொலித்தன. பட்டுப் புடவைகள் பளபளத்தன. வைர மோதிரங்களும், ஜரிகை அங்கவஸ்திரங்களும் மினுமினுத்தன.

அதைப் பார்த்து ஏகாம்பரம் அசந்து விட்டான். குழந்தைக்கு மாமாவாகச் சீர் கொண்டு வந்த அவனை அங்கு கவனிப்பார் யாரும் இல்லை; சீந்துவார் யாரும் இல்லை. இருந்தாலும், தான் செய்ய வேண்டிய சீர் செனத்திகளைப் பொன் வைக்கும் இடத்தில் பூ வைக்கும் கதையாகச் செய்தான். தங்கை சுந்தரி எழுந்திருந்தபடி அவன் ஒரு குறையும் வைக்கவில்லை.

அவனது பணக்காரப் புக்ககத்தினர் தான் பேசவில்லை என்றால் அவள் கூடவா, அண்ணனைத் தனியாகக் கண்டு கேட்கக் கூடாது! குடும்ப யோக க்ஷேமங்களை விசாரிக்கக் கூடாது? அவனைக் கண்டால் அவளும் அல்லவா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, கண்டும் காணாதவள் போல் ஓடி ஒளிந்தாள்.

ஆனால், பாவம்! மனத்தில் புரையோடிவிட்டது அவனுக்கு. அவன் தங்கையோ, அவள் புக்ககத்தார்களோ அவனைத் தன் வீட்டு மனிதனாக எண்ணினர். அதனால் வந்த விருந்தினர்களை விழுந்து விழுந்து உபசரித்தனர் என்ற எண்ணம் உண்டாகவில்லை. அதனால் அவர்கள் வீட்டுக் காரியத்தை நினைத்துப் பார்க்க அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இருந்தாலும் ஒருவாறு அங்கு தங்கியிருந்த பொழுதைப் பிடித்துத் தள்ளி ஓட்டினான்.

இரண்டு நடவைகள் சூரியன் உதித்து மறைந்தான். காலை வண்டிக்கே வந்து சேர்ந்தான் ஏகாம்பரம். அவன் முகம் ஏனோ சுரத்தில்லாமல் இருந்தது.

"என்னடா, ஏகாம்பரம்! எல்லாம் நன்றாக நடந்ததா? சுந்தரி என்ன சொன்னாள்? ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்?" என்று கேட்டாள் அலமு தன் ஆவலை அடக்க முடியாமல்.

"அவளுக்கு மண்டைக் கர்வம் அதிகமாகிவிட்டது, அம்மா! என்னிடம் கலகலப்பாகக் கூடப் பேசவில்லை. விழுந்து விழுந்து புக்ககத்து மனிதர்களைத்தான் உபசாரம் செய்கிறாள்! நான் மனைவியின் வளையை விற்று அவளுக்குச் சீர் எடுத்ததைப் பற்றி அவளுக்கு என்ன வந்தது? அவளுக்கு வேண்டியது அவளுக்குக் கிடைத்து விட்டது. ஒரு வார்த்தை 'எப்படி அண்ணா வாங்கினாய்?' என்று கூட ரகசியமாகக் கேட்கவில்லை. எனக்கு இஷ்டமேயில்லை. எல்லாம் இந்த அலமா



காவிலே ஒரு கலையரங்கம்

மாலையிலே சோலைக்குயில்
  மதுரகானம் பாடுது;
வண்டினமோ பின்னணியில்
  ரீங்காரம் போடுது;

கோலமயில் வண்ண வண்ணத்
  தோகைவிரித் தாடுது;
குவளை அல்லி மலர்கள் மீது
  தென்றல் கோதிச் சாடுது!

வாலை நீட்டித் தலையை ஆட்டி
  மந்தி நடனம் போடுது!
மானினமோ பார்வை யாளா
  ராக வந்து கூடுது!

நீல வானை வெண்மை யாக்கி
  நிலவு மின்னும் காட்சியே
நிலவு இன்று கலையரங்கத்
  தமிழைத் தாங்கும் மாட்சியே!

புத்தனேரி சுப்பிரமணியம்



மப்ளர் பேர்வழி: நேற்றிரவு நீங்கள் என் வீட்டுக்கு வந்து விட்டுப் போன மாதிரி சொப்பனம் கண்டேன்!

மற்றவர்: அப்படியா! என் தலைப் பாகையை இங்கு வைத்து விட்டுப் போய்விட்டேன் போலிருக்கு. கொஞ்சம் பார்க்கிறீர்களா!

வாய் வந்தது. நாத்தனாரிடம் நல்லபேர் வாங்கக் கைவளையைக் கூட விற்கத் துணிந்து விட்டாள்" என்று படபடவென்று பட்டாசு வெடிப்பது போல் வெடித்துக் கொட்டினான் ஏகாம்பரம் மிகுந்த எரிச்சலுடன்.

பெற்றவள் வாயையே திறக்கவில்லை. திக்பிரமை யடைந்து உட்கார்ந்து விட்டாள் அவள்.

"சரி! குளித்துவிட்டுச் சாப்பிட வாருங்கள். ஆபீஸுக்கு நேரமாகி விடும்" என்று அழைத்தாள்.

"இந்தா! உன் பெண் உனக்குக் கலியாணப் பட்சணம் கொடுத்திருக்கிறாள்" என்று ஆத்திரம் பொங்கக் கூறியவன், பட்சணப் பொட்டலத்தை எடுத்துத் தாயை நோக்கி வீசி யெறிந்தான் ஏகாம்பரம். எறிந்த வேகத்தில் காகிதம் கிழிந்து அதனுள்ளேயிருந்த பட்சணங்கள் மூலைக்கு ஒன்றாகச் சிதறின. அவை மட்டுமா சிதறின? நோட்டுக்கள் பறந்தன: ஒரு ரூபாயும் அரை ரூபாயும் மூலைக்கு மூலை உருண்டோடின.

"என்னடா, இது!" என்று ஆச்சரியத்துடன் எல்லாவற்றையும் சேர்த்துக் குவித்தாள் அவளும்.

"ரூபாய்கள் மாதிரியல்லவா இருக்கின்றன?" என்று வியப்புடன் மொழிந்த ஏகாம்பரமும் குனிந்து எல்லாவற்றையும் எடுத்துச் சேர்த்து எண்ணினான். இருநூற்று இருபது ரூபாய்கள் இருந்தன. பட்சணக் காகிதத்தை எடுத்து உதறினான் அவன். அதிலிருந்து ஒரு வெள்ளைக் காகிதம் கீழே விழுந்தது. ஆவலுடன் எடுத்துப் பிரித்தான்.

"அன்புள்ள அண்ணா!

பாவம், நீ! நான் எழுதினேன் என்று என்னவோ ரூபாய் கடன் வாங்கியெல்லாம் வாங்கி வந்திருக்கிறாய். உன் நிலைமை எனக்குத் தெரியாததல்ல.

என்னதான் என் புக்கத்து மனிதர்கள் நல்லவர்களாக இருந்த போதிலும் சமய சந்தர்ப்பங்களில் சொல்லிக் காட்டாமல் இருப்பதில்லை. அதுவும் என் ஓரகத்திகளுக்கெல்லாம் பிரமாதமாகப் பிறந்தகத்திலிருந்து சீர் வகையராக்கள் வந்து கொண்டிருக்கும் போது என் விஷயத்தில் மட்டும் எல்லாம் தாழ்வாக இருப்பது அவர்களை அதிகம் பேசத் தூண்டுகிறது. இவருக்கு என் மீது உள்ள அன்பினால் என்னை எதுவும் சொல்ல முடியவில்லை. அவர்களெல்லாம் பரிகாசம் செய்யும்போது இவர் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லி மழுப்புவார். அப்போதெல்லாம் எனக்கு இவர் மீது அனுதாபமாக இருந்து வந்தது. 'நம்மை மணந்து கொண்டதால்தானே இவருக்கு இப்படி!' என்று எண்ணி வருந்துவேன். இதன் விளைவாகத் தான் உனக்கு நான் அப்படியொரு கடிதம் எழுதினேன். கடிதத்தை இவரே தபாலில் சேர்க்க வேண்டி யிருப்பதால் நான் மனம் விட்டு எதையும் எழுத முடியவில்லை.

நீ இங்கே வந்திருந்த போதும் உன்னுடன் தனிமையில் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. வேலை சரியாக இருந்தது. உன்னிடம் நான் எதையாவது எடுத்துக் கொடுத்து விடுவேனோ என்கிற சந்தேகமும் என் பெரிய நாத்தனாருக்கு இருந்ததால் தான் நான் உன்னிடம் அதிகமாக நெருங்கிப் பழகவில்லை. இருந்த போதிலும் உன் சிரமம் என் நெஞ்சை விட்டு அகலவில்லை. பட்சணம் கொடுத்தனுப்புவது உலக வழக்கமல்லவா? அதன்படி கொடுத்தேன் நானும்.


சிக்கனம் என்றால் என்னவென்பதே அறியாத அவர்களுடைய குடும்ப நிர்வாகத்தினால் நான் சேமித்துள்ள பணம் இது. கையில் அகப்பட்ட போது போட்டு வைத்திருந்தேன் பெட்டிக்குள். எவ்வளவு இருக்கிறதோ எண்ணிப் பார்க்க ஒழிவில்லை எனக்கு. எங்கே கடன் வாங்கினாயோ, அங்கே கொடுத்துக் கடனை அடைத்து விடு. பெண் இனத்தின் குணம், அது எதிர்பார்க்கும் அர்த்தமில்லாத போலிக் கௌரவம் எல்லாம் உனக்குப் புரியாது. எனினும் நீ ஆண். மன்னி அவளைக் கேள். சொல்லுவாள்.

அன்புள்ள,
சுந்தரி"

"நல்ல, பெண்கள்!" என்று கூறி ஒரு பெருமூச்சுவிட்டான் ஏகாம்பரம். அவன் உள்ளம் 'விதி நம்மை இப்படிச் சோதரியிடமே பணம் பெற்றுக் கொள்ளும்படி வைத்துச் சோதிக்கிறதே!' என்று மிகவும் வருந்தியது.

தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி.

அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.



வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.

- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.

5-7 செகண்ட் லேன் பீச், மதராஸ்.

மற்றும்

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலக் கோபுர வீதி, மதுரை



பொங்கல் இதழில்
ஸோக்ரதர்
சம்வாதங்கள்
க. சந்தானம்
உலகங்கள்
சுகி
கல்கி
ஜனவரி 18



புதிய விருந்து!
வானத்தாமரை
சுதர்சன்
தமிழாக்கம் : ரா. வீ.
ஆரம்பமாகின்றன

கருகாத மொட்டு



எம். வி. வெங்கட்ராம்

சாரதா சிரித்தபடியே கேட்டாள்: "நேற்று ராத்திரியே நீங்கள் சிதம்பரத்துக்குப் புறப்பட்டதாகக் கேள்விப்பட்டேனே?"

"நான் ஸ்டேஷனுக்குப் போனதும், கியூ வரிசையில் நின்றதும் உண்மை. டிக்கெட் வாங்குவதற்கு என் முறை வந்தபோது திடீரென்று என் புத்தி மாறிவிட்டது. வரிசையை விட்டு வெளியே வேகமாக வந்து விட்டேன்" என்றான் சுந்தரம்.

"அவ்வளவு சஞ்சல புத்தி; இல்லையா?"

"இந்த ஒரு விஷயத்தைக் கொண்டு என் புத்தி சஞ்சலமானது என்று ஒப்புக் கொள்ள நான் தயாராயில்லை. எனக்கு என்னவோ இந்த இடத்தை விட்டுப் போகத் தயக்கமாக இருக்கிறது."

"மூன்று நாட்களாய்த் தினமும் 'நாளை'க்குப் புறப்படுகிறேன் என்கிறீர்கள். உங்களை எதிர்பார்த்து, ஊரில் உள்ள ஐந்து மனைவிகளும் ஒரு குழந்தையும்..."

"ஒரு மனைவியும் ஐந்து குழந்தைகளும் என்று சொல்லுங்கள்" என்று அவன் திருத்தினான்.

"நாலு குழந்தைகள்! என்றுதானே முன்பு சொன்னீர்கள்? உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்பதே நினைவில் இல்லாத போது, எத்தனை மனைவிகள் என்பது மட்டும் எப்படி ஞாபகம் இருக்கும்?"

"எனக்கு ஐந்து குழந்தைகள்; இரண்டு ஆண்; மூன்று பெண்."

"உங்களை எதிர்பார்த்து அவர்கள் தவித்துக் கொண்டிருப்பார்கள் என்று சொல்லித் தினம் மூட்டையைக் கட்டுகிறீர்கள்; ஆனால் ரயில் ஏற மாட்டேன் என்கிறீர்களே?"

"வேண்டாத விருந்தாளியை விரட்டுவது போல் என்னைத் துரத்துகிறீர்களே! நீங்கள் போகச் சொன்னால் எந்த நிமிஷம் ரயில் கிடைத்தாலும் புறப்படத் தயார்."

"நான் ஏன் போகச் சொல்ல வேண்டும்? உங்கள் சஞ்சல புத்தியைக் காட்டத்தான் சொன்னேன்!"

"இந்த விஷயத்தில் என் புத்தி சஞ்சலம் அடைந்து விட்டது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்."

"எந்த விஷயத்தில்?" என்று கேட்கும் போது சாரதா அவனை உற்றுப் பார்த்தாள்; அந்தப் பார்வையால் கூச்சமுற்றவன் போல் அவன் தன் உடலை நெளித்துக் கொண்டான். "நீங்கள் எந்தக் காரியத்துக்காக வந்தீர்களோ, அந்தக் காரியம் பலிக்கவில்லை என்பது தானே நீங்கள் குறிப்பிடும் விஷயம்?"

"நான் வந்த காரியம் என்ன என்றும், அது பலிக்கவில்லை என்றும் நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் சுந்தரம்.

"எனக்கு இட்சிணி உபாசனை உண்டு; சொல்லட்டுமா? எனக்கு முப்பது வயது ஆகிறது; கல்யாணம் செய்து கொள்ளவில்லை; செய்து கொள்வதையும் வெறுக்கிறேன். என்னை எப்படியாவது குடும்பக்காரி ஆக்கிவிட வேண்டும் என்பதற்காகத்தானே நீங்கள் இங்கு வந்தீர்கள்?"

நான் மறைத்த இந்த உண்மையைக் கேட்டுச் சுந்தரம் அயர்ந்து விடுவான் என்று சாரதா எதிர்பார்த்தாள்; மாறாக அவன் சிரித்தான். "இதைச் சொல்வதற்கு இட்சிணியும் வேண்டாம்; பிரம்மராட்சஸும் வேண்டாமே! உங்கள் சிநேகிதி கைலாசனுவின் கடிதமே போதுமே!"

வந்த சிரிப்பைச் சாரதா அடக்கிக் கொண்டாள். அவனுடன் பேசும்போது அதிகப்படியாகவும் காரணம் இல்லாமலும் சிரிக்கிறோம் என்று அவளுக்குத் தோன்றியது.

"கைலாசனு குறும்புக்காரி; அவள்தானே உங்களைத் தூண்டி என்னிடம் அனுப்பினாள்?"

"நான் வந்ததால் உங்களுக்குத் தொந்தரவாக இருக்கிறதா?"

"நான் அப்படிச் சொல்லவில்லையே! கைலாசனு இங்கே இருக்கும்போதும் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பது தவறு என்று அடிக்கடி வாதாடுவாள். அவளை விட அற்புதமாக நீங்கள் அதையே சொல்கிறீர்கள்; அவள் இப்போது உங்கள் தம்பியின் மனைவி. அவளுடைய தூண்டுதலால் நீங்கள் இங்கே வந்திருக்கலாம் என்று நான் நினைப்பது தவறு? ஆனால், யார் எது சொன்னாலும் எனக்கு ஆண்கள் மீதுள்ள வெறுப்பை ஒதுக்க முடியவில்லை."

"உங்களுக்கு ஆண்கள் மீதுதான் வெறுப்பு; கல்யாணத்தின் மீது வெறுப்பில்லை."

"இது என்ன கேள்வி? ஆண்களை வெறுக்கிறேன் என்பதில் கல்யாணம் வேண்டாம் என்பதும் அடக்கம் இல்லையா?"

"அப்படியானால் என்னை வெறுப்பதாகச் சொல்லுங்கள்!"

"உங்களை வெறுத்தால் உங்களோடு இவ்வளவு நேரம் பேசவே மாட்டேன். என்னைக் காண வந்த அன்றே உங்களை வெளியேற்றி விரட்டியிருப்பேன்" என்றாள் சாரதா.

"ஆகவே, என்னைப் பார்த்த முதல் நாளில் இருந்தே என்மேல் பிரியமாயிருக்கிறீர்கள்!"

"பிரியமாக இருக்கிறேன் என்பதற்கு அகராதி அர்த்தம் கண்டுபிடிக்க முயலாதீர்கள்!"

"சேச்சே! நான் அப்படிச் செய்வேனா?"

"அதுவும், நீங்கள் பிள்ளைக்குட்டிக்காரர். அப்படியெல்லாம் நினைக்க மாட்டீர்களென்று எனக்கு நம்பிக்கை உண்டு" என்றாள் சாரதா.

சுந்தரம் தன்னையே கவனிப்பது போல் அவளுக்குத் தோன்றியது. முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்; கண்ணாடியை எடுத்துத் துடைத்து அணிந்தாள்; அப்போதும் அவன் தன்னையே பார்ப்பது போலப் பட்டது; பார்க்கவில்லை போலவும் தோன்றியது. ஆனால் அநாகரிகமாகப் பார்ப்பதாய்ப் படவில்லை.

'கலைமகள் அநாதை இல்லத்'தின் தலைவி அவள்; அதை ஸ்தாபித்தவளும் அவள்தான். இல்லத்தில் சுமார் அறுபது அநாதைக் குழந்தைகள் இருந்தார்கள். அவளுக்குத் துணையாக மூன்று சக ஆசிரியைகள் இருந்தார்கள். சர்க்கார் மான்யத்தை எதிர்பாராமல், தன் சொந்தப் பொருள் வலிமையால் இல்லத்தை அவள் நடத்தினாள். கல்யாணம் என்னும் ஏதோ ஒரு வெறுப்பு; ஆடவர்களிடம் அலட்சியம். அவள் மணம் புரிந்து கொள்ளாததோடு, தன் சக ஆசிரியைகளையும் கன்னியாக வைத்திருந்தாள். கல்யாணம் செய்து கொண்டால் அவர்கள் வேலையை விட்டு நீங்க வேண்டியதுதான்.

கன்னியாக இருப்பதோ, கல்யாணம் புரிவதோ அவளுடைய சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. அதை ஒரு கொள்கையாக அவள் கொண்டாலும், அதைப் பற்றி அதிகமாகப் பேசி வாதாடும் வழக்கம் அவளுக்குக் கிடையாது. ஆனால், சுந்தரம் வந்த மூன்று நாட்களாக அதுவே ஒரு பிரச்னையாகிவிட்டது. வகுப்பு நேரம் போக, இதர நேரங்களில் சுந்தரத்தோடு இதே பேச்சுதான். அவன் அழகாகப் பேசினான். அவளுக்கு மட்டுமல்ல, அவளுடைய சக ஆசிரியைகள் மாலா, வஸந்தி, கிரிஜா எல்லோருக்குமே அவன் நன்றாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவன் பேசும்போது சில சமயம் சாரதாவுக்கே பயமாக இருந்தது. அவனுடைய பேச்சழகில் ஏமாந்து தன் சக ஆசிரியைகளில் யாராவது மனம் மாறி விடுவார்களோ என்கிற அச்சம்தான் அது; கல்யாணம் செய்து கொள்ளாத பெண்மை பயனற்றது என்று அவன் அவ்வளவு அழுத்தம் திருத்தமாக வாதித்தான். அந்த அச்சத்தால், அவன் சென்னையை விட்டு விரைவில் புறப்பட மாட்டானா என்று இருந்தது அவளுக்கு.

ஊருக்குத் திரும்பி விடுவானோ என்றும் அவளுக்குச் சற்றுக் கவலையாக இருந்தது. அவன் இன்னும் சில நாட்கள் 'இல்லத்தில்' தங்க வேண்டும், கல்யாணத்தைத் தவிர வேறு எதைப் பற்றியாவது அவன் பேசுவதைக் கேட்க வேண்டும் என்று அவளுக்கு ஆசையாக இருந்தது. இந்த ஆசை தவறானது என்று அவளுக்குப் படவில்லை; ஆனால் இந்த ஆசை தனக்கு எப்படி உண்டாயிற்று என்பதைப் பற்றித்தான் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய 'அநாதை' இல்லத்துக்கு



"இந்தப் பந்து தோட்டத்திலே விழுந்தது...இது உன்னுடையதா?"

"உங்கள் வீட்டுக் கண்ணாடி ஜன்னல் ஏதேனும் உடைந்ததா?"

"உடையவில்லையே, அம்பி!"

"அப்படியானால்...அந்தப் பந்து என்னுடையதுதான், மாமா!"

எவ்வளவோ கல்விமான்கள், அறிஞர்கள், மேடைப் பிரசங்கிகள் வருகிறார்கள். அவர்களுடைய பேச்சில் இல்லாத கவர்ச்சியா சுந்தரத்தின் பேச்சில் உள்ளது? இல்லை என்றுதான் கூற வேண்டும். அப்படியானால், அவளுக்கு அவனிடம் அல்ல, அவனுடைய பேச்சில் ஏற்பட்ட கவர்ச்சிக்குக் காரணம் என்ன?

அங்கவஸ்திரத்தைப் போர்வையாகப் போர்த்தி, இரு கைகளையும் முதுகுப் பக்கம் கட்டிக் கொண்டு, உடலுக்கு முன்னும் தும்பிக்கை போல் நீண்ட மூக்கை ஆட்டித் தலையை அசைத்தும் பற்கள் தெரியாத மௌனச் சிரிப்புடன் அவன் பேசுகிற தோரணை அவளுக்குக் கவர்ச்சி அளித்ததாகக் கூறலாமா? அவள் ஏற்கத் தயாராயில்லை; அது உடலின் கவர்ச்சிதானே? அந்தக் கவர்ச்சியைத்தான் அவள் வெறுப்பவள் ஆயிற்றே!

அடுக்கடுக்காகவும் அனியாயமாகவும் வார்த்தைகளைக் கோத்து அவன் கவிதை நடையில் 'ஆண்பெண் கட்டுறவை' ஆதரித்து வாதாடினான் என்றும் சொல்ல முடியாது. அவனுடைய வாதங்கள் அழுத்தமானவைதான்; அழுத்தமானவை என்று கூடச் சாரதா சொல்லுவாள். பெண்ணை அடிமைப்படுத்துவதற்காக ஆதி காலத்திலிருந்து இன்று வரை ஆடவர்கள் கூறுவதைத்தான் சுந்தரமும் கூறினான். யாரும் சொல்லாத புதியது எதையும் அவன் சொல்லிவிட்டதாக அவளுக்கு ஞாபகம் இல்லை.

பின், அவனிடம் அல்ல, அவனுடைய பேச்சில் அவளுக்குக் கவர்ச்சி ஏற்படக் காரணம் என்ன என்று அவளுக்கே விளங்கவில்லை. அவளுக்கும் புனர் ஜென்மத்தில் நம்பிக்கை உண்டு; சிலரைப் பார்த்ததும் நெடுங்காலமாகத் தெரிந்தவர்களைப் போன்ற உணர்வு ஏற்படுவதற்கும், சிலரைத் தினந்தோறும் பார்த்தாலும் புதிதாகப் பார்ப்பது போல் உணர்வு உண்டாவதற்கும், முன் பிறவியின் தொடர்ச்சிதான் காரணமாக இருக்க வேண்டும். அவனுடைய பேச்சில் அவளுக்கு உண்டான கவர்ச்சிக்கும் அதுவே காரணமாக இருக்கலாம். புத்திசாலிகள், மூடர்கள், கெட்டிக்காரர்கள், அசடுகள், பணக்காரர்கள், ஏழைகள் என்று எவ்வளவோ ஆடவர்களுடன் அவள் சகஜமாகப் பழகுகிறாள்; பலருடைய 'மூக்கை'யும் உடைத்திருக்கிறாள். வாதத்தில்தான். "சுந்தரத்துக்கு மூக்கு நீளம்; அதுவும் உடைந்து விட்டது. அதனால்தான், பாவம், ஊருக்குத் திரும்புகிறான் என்று சொல்லிக் கொண்டே இன்று வகுப்ப



வருகிறாள்!" என்று எண்ணியபடி அவன் மூக்கைப் பார்த்தபோது, தான் அநியாயமாகச் சிரிக்கக் கூடாது என்பதையும் மறந்து சாரதா சிரித்து விட்டாள்.

"காரணம் சொல்லாமல் நீங்களே சிரித்துக் கொள்கிறீர்களே?" என்று அவன் கேட்டதும் அவள் கவனம் திரும்பியது.

"உங்கள் மூக்கு..." என்று அவள் நகைத்தபோது தன் மூக்கை அவன் இலேசாகத் தடவிக் கொண்டான்.

"என்னது?"

"ஒன்றும் இல்லை" என்றாள் சாரதா. மனத்தில் கரைபுரளும் உற்சாகத்தை அவள் உணர்ந்தாள். இன்பமோ, துன்பமோ, அதற்கு ஒரு காரணம் இருக்கத்தான் செய்யும். உற்சாகமாக இருப்பதுதான் மனித இயல்பின் இயற்கை நிலை; ஆனால் உற்சாகத்தை ஆர்ப்பாட்டமாக வெளியிடுவது குழந்தைத்தனம் அல்லது அறியாமை. தன் வயதில் பாதி குறைந்தது போல் அவளுக்குத் தோன்றியது. மாணவியாக இருந்த போது - தோழி தோழர்களின் மூக்கு விழிகளைப் பற்றி அவள் பரிகாசம் செய்த காலம் உண்டு. ஆனால் இப்போது காலம் மாறி விட்டது. உணர்ச்சிகளை வசப்படுத்தவும் அவள் கற்று விட்டாள். இன்று அவள் மனம் அந்தக் கட்டுப்பாட்டை ஏனோ தாண்டுகிறது.

பொது வாழ்க்கையில் ஈடுபடும் பெண், தன் உணர்ச்சிகளை மூட்டை கட்டி வைக்கப் பழகா விட்டால் எப்போதும் அபாயம் காத்திருக்கும் என்பதை அவள் அறிவாள். 'சமூக சேவை' என்று பேசுகிற பெண்கள் எல்லோரையுமே 'மலிவாக' நினைப்பது ஆண்களுக்கு வழக்கம். அநாதை இல்லம் ஒரு பொது ஸ்தாபனம்; பலர் வருவார்கள்; போவார்கள்; வருகிறவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்று நிர்மாணித்து விடமுடியாது. அதிகமாக நெருக்கம் கொண்டாடாமலும், ஆனால் நெருங்கிப் பழகுகிறவள் போலும் எல்லோருடனும் பழக அவள் பயிற்சி பெற்று விட்டாள். அவள் தன்னை நெருப்பாகத்தான் காட்டிக் கொண்டாள். அழகாகவும் ஜொலிப்பாள்; நெருங்கவும் விடமாட்டாள். ஆனால் இந்தப் பயிற்சி சுந்தரத்தின் முன்னிலையில் சற்றே தளர்ந்து விட்டது.

"இன்றைக்கு, நீங்கள் ஏதோ யோசனையாக இருக்கிறீர்கள். உங்களுக்கு வேறு வேலை இருந்தால் நான் அப்புறம் வருகிறேன்" என்றான் சுந்தரம்.

"எனக்கும் பிறகுதான் வருப்பு. இப்போது வேலை ஒன்றும் இல்லை.... மூன்று நாட்களாக இங்கே இருக்கிறீர்கள். வந்ததற்குக் காரணம் என்ன என்பதை நீங்கள் சொல்லவில்லையே? அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்."

"அநாதை இல்லத்தைப் பார்வை இடுவதே காரணம். கயிலாசம் உங்களைப் பற்றியும் உங்கள் இல்லத்தைப் பற்றியும் அடிக்கடி சொல்லுவான். ஓய்வு கிடைக்கும்போது உங்களையும் இல்லத்தையும் ஒருமுறை பார்க்க வேண்டும் என்று வெகு நாட்களாக ஆவல். அதனால்தான் வந்தேன்."

"கயிலாசம் என்னைப் பற்றி என்ன சொன்னான்?" தன் கேள்வியில் ஒலித்த ஆவல் அவளுக்கே வியப்பாக இருந்தது.

"உங்களை ஓர் அதிசயமான பெண்மணி என்று அவன் சொன்னான். ஏராளமான சொத்து சுதந்திரம் இருந்தும், சுகமான குடும்ப வாழ்க்கையை வெறுத்து அநாதைப் பெண் குழந்தைகளுக்காக இந்த ஸ்தாபனத்தை நிறுவி நீங்கள் நிர்வகிக்கும் அழகை அவன் புகழ்வான். அவனுக்கு உங்களிடம் ஒரே ஒரு குறை. நீங்கள் கன்னிகையாகவே இருக்க விரும்புவதை அவன் ரசிக்கவில்லை."

"அந்த என் பிடிவாதத்தைத் தகர்ப்பதற்குத்தான் அவன் உங்களை அனுப்பினான் என்பது என் ஊகம்; சரிதானே?"

"அப்படி அவனோ நானோ சபதம் செய்யவில்லையே..."

"அதனால் ஒரு பொய்யைச் சொல்லிக் கொண்டு இங்கே வந்தீர்களோ?"

"என்ன பொய்?"

"உங்களுடைய இந்த மீசைகளும் ஒரு குறுந்தையும்..."

"ஒரு மனைவியும் ஐந்து குழந்தைகளும்.."

"நீங்கள்தான் திருமணத்தை ஆதரிப்பவர் ஆயிற்றே: உங்களுக்கு ஐந்து மனைவிகள் இருந்தால் என்ன?"

சுந்தரம் சிரித்தான். "நீங்கள் எனக்கு ஒரு மனைவி கூட இல்லை என்பீர்கள் போல் இருக்கிறதே!"

"உண்மை அதுதானே?"

"நீங்கள் அதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்? கமோசனு கடிதம் எழுதினளா?"

"அவள் எழுதுவாளா? கல்யாணம் பத்திரிகை அனுப்பினளே மகராசி. பிறகு நீங்கள் கொண்டு வந்த அறிமுகக் கடிதம் தான் எனக்கு எழுதினள். கல்யாணம் ஆகி விட்டால்--பெண்ணுடைய உடல், மனம், மூளை, காலம், இடம் எல்லாம்தான் கணவனிடம் சரணுகதி ஆகிவிடுகின்றனவே--அது சரி. கமோசனு மிகவும் விஷமக்காரி; நீங்கள் என்னைச் சந்திக்க வந்ததே அவள் சூழ்ச்சி தான். என் ஊகம் சரியா இல்லையா என்று சொல்ல வில்லையே நீங்கள்? நீங்கள் பிரம்மச் சாரிதானே?"

"நான் பிரம்மச்சாரியாகவே இருந்து இறக்க வேண்டும் என்பது என் விதி!" என்றான் சுந்தரம் வருத்தப்படுகிறவன் போல் நடித்துக் கொண்டே.

அந்தப் பதில் சாரதாவுக்கு மிகுந்த திருப்தி அளித்தது.

"பிரம்மச்சாரியான நீங்கள் மணமானவர் என்று சொல்லிக் கொண்டு--என்னைக் காண வந்த காரணம் என்னவோ? என் மனத்தைக் கலக்க வேண்டும் என்ற கமோசனுவின் சூழ்ச்சிதானே?"

"முனிவர்களின் தவத்தைக் கலைப்பதற்குத் தேவர்கள் அப்சரசுகளை அனுப்புவது போல், என்னைக் கமோசனு இங்கே அனுப்பியிருக்கிறுள் என்கிறீர்களோ?"

இந்தக் கேள்வி அவளுக்குத் திருப்தி தந்தது. "என் தவத்தைக் கலைக்க உங்களால் முடியவில்லை. உங்களுக்கு ஏற்பட்ட தோல்வியால் இந்த இடம் விட்டுப் போக மனம் இல்லாமல், கடைசி வரை போய்த் திரும்பிக் கொண்டிருக்கிறீர்கள் என்கிறேன்!"

"தோல்வியாவது, வெற்றியாவது! நீங்கள் மணக்க மறுக்கிறீர்கள்: உங்கள் சொந்த விஷயம் அது. பெண்கள் கன்னியராக வாழ வேண்டும் என்ற உங்கள் கருத்து தவறானது என்று நான் நினைக்கிறேன்: அதை உங்களிடம் சொன்னேன்: நீங்கள் ஏற்கவில்லை. நீங்கள் ஏற்காததால் எனக்குத் தோல்வி ஆகிவிடுமா? அல்லது என்னுடைய கட்சிதான் தவறாகி விடுமா?"

"அப்படியானால் என்னுடைய ஒரு சின்னச் சந்தேகத்துக்கு நேரிடையாகப் பதில் சொல்லுங்கள். கமோசனுவின் கணவர் மாதவன் உங்கள் தம்பிதானே? அவருக்குக் கல்யாணம் பண்ணி வைத்த நீங்கள் பிரம்மச்சாரியாக இருக்கக் காரணம் என்ன? கல்யாணமானதாகத் தான் என்று சொல்லிக் கொண்டு என்னிடம் வரக் காரணம் என்ன?"

சுந்தரம் அவளுக்குப் பின்னுல் இருந்த சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். தன் கண்களால், அந்தச் சுவர் மீது கோடுகளைக் கீறிச் சித்திரம் வரைவது போல் அவன் தலை அசைப்பதை அவள் கண்டாள்.

"சுற்றி வளைக்காமல் நேரிடையாகவே விஷயத்தைச் சொல்லி விடுகிறேனே!" என்றான் அவன் சற்றுக் கழித்து.

"மூன்று நாட்களாய்ச் சுற்றிக் கொண்டும், வளைத்துக் கொண்டும்தானே இருந்தீர்கள். அப்படியானால்....?"

மூன்றுநாட்களாய் அவனிடம் காணப்படாத ஒருபரபரப்புடன் அவன் பேசினன்: "சாரதா! நான் இங்கே வரும் வரை உங்கள் இனத்தைச் சேர்ந்தவனாகவே இருந்தேன். அதாவது, நான் மணம் புரிய விரும்பவில்லை. நீங்கள் ஆண் சகவாசத்தை வெறுப்பது போல் நான் பெண் சகவாசத்தை வெறுத்தேன். உறுதியாகவும் இருந்தேன். என் உறுதிக்கு என் வாலோ சோதனை குறுக்கிட்டது. கல்லூரியில் சக மாணவிகள் சிலரால் என் மனம் கொஞ்சம் சஞ்சலப்பட்டது உண்மை. என் பெற்றோரும் மணம் புரியும்படி நெருக்



தரவு செய்தார்கள். ஆனால் என் பெண் துவேஷம் வளர்ந்து வந்தது. எனக்குப் பிறகுதான் என் தம்பிக்குக் கல்யாணம் என்று பெற்றோர் காத்திருந்தார்கள். ஆனால் தம்பி முந்திக் கொண்டான். சென்னைக்குப் படிக்க வந்தவன், கமோசனுவைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் உயிர்வாழ்வேன் என்று பிடிவாதம் பிடித்தான். அவனுடைய தவிப்பைப் பார்த்த எனக்கும் பரிதாபமாக இருந்தது. அப்பா அம்மாவிடம் வற்புறுத்தி அவன் கல்யாணத்தை முடித்தேன். மாதவன் கல்யாணம் செய்து கொண்ட போதும் எனக்கு வேடிக்கையாக இருந்தது. நீங்கள் இப்போது சொல்வதைப் போலவே, 'மணம் புரிந்து சுகம் அடைந்தவர் இல்லை; மணம் புரிந்து சுகத்தைத் தேடாதவர் இல்லையே!' என்கிற அறியாமையை எண்ணி நான் நகைத்தேன். பிறகு அப்பாவும் அம்மா

லும் போய் விட்டார்கள். கலோசனு வெட்டிக்காரி. நான் பிரம்மச்சாரியாக இருப்பதைப் பற்றி அடிக்கடி கேலி செய்வாள். அத்துடன், ஆண் துவேஷியான உங்களைப் பற்றி அடிக்கடி சொல்லுவாள். நீங்களும் நானும் சந்தித்துச் சண்டை போடுவதைப் பார்க்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவாள்...அவள் சொன்னதை அடிக்கடி கேட்டு உங்களைக் காண வேண்டும் என்கிற எண்ணம் உண்டாயிற்று. நான் சென்னைக்குக் கிளம்பியபோது கலோசனுவும் உங்களுக்குக் கடிதம் கொடுத்தாள்.''

''நீங்கள் சொல்லுகிற கதைக்கும், இங்கே நடந்த கதைக்கும் ஏக வித்தியாசம் இருக்கிறதே! கல்யாணத்தை வெறுத்த நீங்கள், அதை ஆதரித்துப் பேசினீர்கள்; மணம் ஆனவர் என்று வேறு பொய் சொல்லிக் கொண்டீர்களே?''

''இந்த இல்லத்தைப் பற்றிக் கலோசனு சொல்லியிருக்கிறாள். நீங்களும் இங்குள்ள ஆசிரியைகள் எல்லோரும் மணம் புரியாதவர்கள். குழந்தை குட்டிக்காரன் என்று கூறிக் கொண்டால் சௌகரியமாயிருக்கும் என்று நினைத்தேன்.''

''மிகவும் சந்தோஷம். நீங்களும் என் கட்சிதான். அப்படித்தானே? பெண்ணுக்குக் கல்யாணம் வேண்டாம் என்கிறேன் நான். ஆணுக்கு வேண்டாம் என்று நீங்கள் கூறுகிறீர்கள்....''

''நான் இப்போது உண்மையாகவே எதிர்க் கட்சிதான். நான் போட்ட வேஷம்தான் உண்மை என்று முடிவு பண்ணி விட்டேன்.''

''அது எப்போது?'' என்று கேட்டாள் சாரதா வியப்புடன்.

''தேதி தெரியாது. இந்த மூன்று நாட்களில் நான் எப்படியோ மாறி விட்டேன். ஆணாகட்டும், பெண்ணாகட்டும் அவசியம் மணம் புரிய வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. மணக்காமல் ஆணோ, பெண்ணோ இருக்க முடியாது என்று கண்டு விட்டேன்!''

''அடப் பாவமே! முப்பத்தைந்து வருஷ பிரம்மசரியத்தை மூன்று நாட்களில் நீங்கள் கைவிட்டு விட்டீர்களே!''

''இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே! உலகத்தில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் இப்படித்தான் நடக்கின்றன. முப்பத்தைந்து ஆண்டுகள் நான் பற்றியிருந்த கொள்கை, மூன்று நாட்கள் நான் இங்கே தங்கும்போது மாற வேண்டும் என்பது...''

''விதி என்கிறீர்களோ?''

''விதி என்பது தவறான வார்த்தையா?''

சாரதா பதில் கூறவில்லை. அவளுக்கு வேறு யோசனை எழுந்துவிட்டது. மூன்று நாட்களில் தன் கொள்கை மாறிவிட்டது என்று அவன் கூறியதில் உட்பொருள் ஏதாவது இருக்குமோ என்று யோசித்தாள். அவன் முகத்தைப் பார்த்தாள்; அசடும் தெரியவில்லை; புரளும் தெரியவில்லை.

''உங்கள் தம்பி மாதவன், கலோசனுவிடம் மனமிழந்தது போல், நீங்கள் இங்கே....''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை.''

''கலோசனு மிகவும் கெட்டிக்காரி. அவளால் இந்த இல்லத்துக்குப் பெருமை கிடைக்கும் என்று நம்பினேன். உங்கள் தம்பி அவளை என்னிடமிருந்து பறித்துச் சென்று விட்டார். நீங்கள் வேறு...''

''என் கொள்கை மாறிவிட்டது என்றால் உடனே நான் பெண் பார்க்கப் புறப்பட்டதாக ஏன் நினைக்கிறீர்கள்? உங்களுக்கு என்னால் ஒரு நஷ்டமும் ஏற்படாது. நம்புங்கள். திருப்திதானே?''

அவனுடைய பேச்சு அவளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவள் மனத்தை ஏதோ சங்கடம் செய்தது. மௌனமாயிருந்தாள்.

மௌனம் சில நிமிஷங்கள்தான். அந்தச் சில நிமிஷங்களில் அவள் மனத்தில் ஒரு புது எண்ணம் எழுந்தது. அவன் பிரம்மச்சாரி; அவள் கன்னி; இருவரும் தனிமையாக உட்கார்ந்து இப்படி மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பது உசிதம்தானா என்று கேட்டுக் கொண்டாள். தன்னோடு பெண் துணை இருக்கவேண்டியது அவசியம் என்று எண்ணிக் கொண்டே 'காலிங் பெல்' மீது கை வைத்தவளுக்கு மற்றொரு தயக்கம் ஏற்பட்டது.

அவன்-சுந்தரம்-மூன்று நாட்கள் இங்கே தங்கியதால் கொள்கையைக் கைவிட்டதாக ஒப்புக் கொண்டான். அவனுடைய தம்பி மாதவன், கலோசனுவைக் கண்டதும் மோகம் கொண்டது போல், அவனும் தன்னுடைய சக ஆசிரியை யாராவது ஒருத்திமீது மோகம் கொண்டிருக்கலாம் அல்லவா? தம்பியைக் கொண்டே அண்ணனை அறிய முடியாதா? அவனுடைய மனத்தையும், கொள்கையையும், உறுதியையும் கலைத்தவள், யார் அவள்? மாலாவா, மீனாவா, ஹரிணியா? மூவரும் அவளுடைய சக ஆசிரியைகள்; யுவதிகள்; அழகிகள் என்றுதான் கூற வேண்டும். மூவரில் ஒருத்தியை அழைத்துத் தன்னுடன் வைத்துக் கொள்ளலாம் என்றால், அந்த ஒருத்தி அவன் மனத்தைக் கவர்ந்தவளானால்? அவனுடைய கவர்ச்சியை மேலும் தூண்டுமே?....

அவளுக்கு எரிச்சலாக வந்தது: ''உங்கள் தம்பி மாது கலோசனுவை என்னிடமிருந்து பிரித்தது போல் நீங்கள் இங்கே ஏதாவது செய்யப் போகிறீர்கள்....''

''அடடா! நீங்கள் அனாவசியமாகப் பயப்படுகிறீர்கள். உங்கள் இல்லத்திலிருந்து நான் யாரையும் கவர மாட்டேன்!''

அவளுக்கே தன் கோபம் பிடிபடவில்லை. அவள் அந்த இல்லத்தை நிறுவியபோது மாலா, மீனா, ஹரிணி அல்லது கலோசனுவை நம்பியா இருந்தாள்?

''என்னதான் நீங்கள் உறுதியாகச் சொன்னாலும் என்னால் உங்களை நம்ப முடியவில்லை. உங்கள் உறுதிக் குறைவு என் கொள்கைக்கு உரம் தருகிறது. என்னைப் பொறுத்தமட்டில் என் கொள்கை சரியானது. என்னை அனுசரித்து என் சக ஆசிரியைகள் இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்ப்பதும் தவறு இல்லையே? உங்கள் தம்பியால் கலோசனுவை இழந்தேன்; உங்களால் யாரையும் இழக்க நான் தயாராக இல்லை...''

''நான்....'' என்று அவன் மறித்தான்.


''எனக்குப் புரிகிறது. நீங்கள் மூன்று நாட்களாகச் சுற்றி வளைத்தது போல் இனியும் ஒளிவு மறைவாகப் பேச வேண்டாம். உங்கள் மன மாற்றத்துக்குக் காரணம் நான் காமம் என்

பொங்கலுக்குச் சிறந்தது....

NOVAK

புகழ் பெற்ற பெல்ஜியன் நோவாக் ரேடியோ

நோவாக் ரேடியோ ஒன்றுதான் ஹைஃபி (ஹைபிடெலிடி) நுணுக்க முறையை இணைத்திருக்கிறது. இரண்டு ஒலி பெருக்கிகளை இசைவாகப் பொருத்தி வைப்பதன் மூலம் இன்னிசையின் தாரஸ்தாயி மந்தரஸ்தாயி பிரஸ்தாரங்களில் இயற்கைக் குரலில் வழங்குகிறது. நோவாக் டீலர் உங்களுக்கு இதை நன்கு விளக்கிக் காண்பிப்பார்



Hi-Fi NOVAK

மாடல் 684 T. Hi-Fi

விலை ரூ 550/-

[illegible]

சென்னை மற்றும் ஆந்திராவுக்கு விநியோகஸ்தர்கள் :

ஒபுல் ரெட்டி (மதராஸ்) பிரைவேட் லிமிடெட்

31, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை - 2

[illegible]

உற்பத்தியாளர்கள் : டெலிராட் பிரைவேட் லிட்., பம்பாய்-10

பேன்: நீங்கள் காதல் என்பீர்கள். காதல் என்பதே ஒருவிதக் காமம்தானே? உயர்ந்த வகை என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். காதல் என்பதே உடல் வழிபாடுதானே! தன்னுடைய உடலே அளவுக்கு மீறி மோகிப்பதைத்தான் காதல் என்கிறோம்.''

''காதல் என்கிற வார்த்தை இக்காலத்தில் தவறான வார்த்தை ஆகிவருகிறது. நீங்கள் அந்த வார்த்தையை உபயோகித்தால் நானும் உபயோகிக்கிறேன். அந்த வார்த்தைக்கு நீங்கள் சொல்லும் பொருள் எனக்குப் புரியவில்லை. ஒருத்தன் அல்லது ஒருத்தி இன்னொருத்தி அல்லது இன்னொருவனை அளவுக்கு மீறி மோகிப்பதைக் காதல் என்று நீங்கள் சொன்னால் நான் ஏற்கலாம். தன்னுடல் வழிபாடுதான் காதல் என்கிறீர்களே, அது புரியவில்லை.''

''நீங்கள் நினைப்பது தவறு. எந்தக் காதல் கதையை எடுத்தாலும் அவள் அவனுக்காகவும், அவன் அவளுக்காகவும் ஏங்கிப் பிரிவுத் துயரில் வெம்புகிறார்கள். நேரில் பார்க்க வேண்டும், பேச வேண்டும், குலாவ வேண்டும் என்பதுபோன்ற இச்சைகளுக்கு அடிப்படை என்ன? அவள் அங்கே அழுகிறாள் என்பதால் அவனுக்கு வருத்தம் இல்லை; அவள் இங்கே இல்லாததால் நான் அழ வேண்டியிருக்கிறதே என்பதுதானே பிரிவுத் துயரம்? மனிதக் கடவுள் ராமர், இனிய வசந்தகாலத்தில் சீதையின் துணையால் தனக்குக் கிட்டக்கூடிய இன்பம் கிடைக்கவில்லை என்றுதானே புலம்பினார்? மற்றும், வேலையைக் காண்பதற்காக ஓடி வந்தது கண்ணுக்கு மட்டும் இன்பம் தருவதற்காகவா? இந்தக் காதல் என்பது தன்னுடல் வழிபாடுதான். உடலையும் புலன்களையும் இப்படி ஆராதிப்பதை நான் வெறுக்கிறேன். நீங்கள் ஆண்கள் அனைவருமே இந்தப் பலவீனத்துக்கு அடிமைகள் என்பது என்னுடைய முடிவு.''

''இருபாலாருக்கும் அது இயற்கை என்று இங்கே வந்த பிறகு நான் முடிவு கண்டேன்.''

''நீங்கள் சொல்லுவதன் அர்த்தம் நீங்கள் மனத்தை இழந்தோடு. இங்குள்ள ஒருத்தி உங்களிடம்...'' என்றாள் சாரதா அனுதாபம் நிறைந்த வேகத்துடன்.

''நான் பொதுவான மனமாற்றத்தைக் குறிப்பிட்டால், விஷயத்தைச் சந்தேகிக்கிறீர்கள்.''

அவள் பேசட்டும் என்பதற்காக அவன் பேசாமல் இருந்தான். பேச்சில் அவளுடைய சொந்த கருவம் வெளிப்படலாம் என்று அவன் நினைத்தான்.

''காதலுக்கு நீங்கள் செய்த வியாக்கியானம் தவறானது என்று நான் நினைக்கிறேன். உடல் வழிபாட்டைக் காமம் என்கிறோம்; உயர்ந்த மன வழிபாட்டைத்தான் காதல் என்கிறோம். நம் உடலும் ஒன்றையொன்று சார்ந்தது என்பதால், மனத்தன்மையையும் நீங்கள் உடல் தன்மையாக நினைக்கிறீர்கள்.

நம் முன்னோர்கள் சிறு பிராயத்தில் மணந்தார்கள்: தம்பதிகள் இறுதிவரை ஒருவரையொருவர் காதலித்து வாழ்ந்தார்கள். புனைகதையில் அவர்கள் காதல் வாழ்ந்தது என்பதுதான் உண்மை. காதலித்துக் கல்யாணம் என்கிறார்கள் இப்போது; கல்யாணம் ஆனபின் காதல் என்கிறார்கள் நம் பெரிய



''அவர்கள் என்று எழுதச் சொன்னால் அவர் என்று எழுதி இருந்தாயே! 'கள்' எங்கேடா!''
''மதுவிலக்கு வந்தப்புறம் நான் 'கள்' போடுவதையே விட்டுட்டேன்!''

வர்கள்.... இந்த விவாதம் எனக்கே அலுப்பாக இருக்கிறது. கல்யாணம் அவசியமா என்று உலகத்தில் யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. நீங்களும் நானும்தான் இதைப் பிரச்னையாக்கிக் கொண்டு தவிக்கிறோம். இந்த விஷயத்தில் உங்களுக்கும் எனக்கும் ஒற்றுமை இருக்கிறது. உடல் வழிபாட்டை உங்களைப் போல் நானும் வெறுக்கிறேன். நான் மனத்தால் எந்த ஒருத்தியையும் வழிபடக்கூடாது என்று இங்கே வருவதற்கு முன் நினைத்திருந்தேன்; இங்கே வந்தபின் என்னால் அப்படிச் செய்ய முடியாது என்று ஏற்பட்டு விட்டது!''

அந்த ஒருத்தி யார் என்று கேட்க அவள் நாக்கு தவித்தாலும் வார்த்தை வெளிவரவில்லை.

''என்னை நீங்கள் சந்தேகிக்கவேண்டியதில்லை என்பதற்காகவே இவ்வளவும் சொன்னேன். நான் குடும்பமாக வாழப் பிறந்தவனாக எனக்குத் தோன்றவில்லை. நான் பிரம்மச்சாரியாகத்தான் இறக்கப் போகிறேன். இங்கே வந்ததுமுதல் எனக்கு ஒரு பிரமை. நான் சாசுவதமாக இங்கே தங்கியிருக்கப் போவதாக ஓர் எண்ணம். சிதம்பரம் நான் பிறந்த இடம் என்றாலும், அங்கே போக எனக்கு மனம் வரவில்லை. அதனால்தான் புறப்பட்டுப் புறப்பட்டுத் திரும்புகிறேன். நேற்று ராத்திரி ஸ்டேஷனிலிருந்து வரும்போது எனக்கு ஒரு வேடிக்கையான ஆசை ஏற்பட்டது.''

''என்ன அது?''

''நான் உங்கள் விருந்தாளியாக இன்று மத்தியானம் இருக்க வேண்டும்.''

''நீங்கள் என் விருந்தாளியாகத்தானே இருக்கிறீர்கள்?''



''ஏண்டாப்பா நீ மனுஷாளோடேதான் சேருகிறதில்லே. கருவிகளோடே வேறும் சேரப் படாதா ?''

''நீங்கள் கணவரோடு குடும்பமாக இருந்தால் விருந்தாளியை ஹாஸ்டலுக்கும் ஹோட்டலுக்கும் அனுப்புவீர்களா ?''

''எனக்கு வீடு ஏது? என் அறையில் நான் எனக்காகச் சமைத்துக் கொள்கிறேன்.''

''அந்தச் சோற்றில் பங்கு கேட்கிறேன்.''

அவனுடைய விசித்திரமான வேண்டுகோள் விநயமாகவும் இருந்தது. அவனைத் தனியாகத் தன்னுடன் அழைத்துச் சென்று, கைகால் கழுவத் தண்ணீர் கொடுத்து, உணவு பரிமாறி, தனிமையில் இருப்பதென்றால் சங்கடமான விஷயம்தான். ஆனால் அவள் யாருக்காக—எதற்காக இப்படித் தயங்க வேண்டும்? தனக்கே தன்மீது நம்பிக்கை இல்லாமற் போனால்தானே அவள் தனிமைக்கு அஞ்ச வேண்டும்?

''உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் நான் ஹோட்டலுக்குப் போகிறேன் !''

''நன்றாயிருக்கிறதே! எனக்கு என்ன ஆட்சேபனை! தாராளமாய் வாருங்கள். பன்னிரண்டு மணிக்குச் சாப்பிடப் போகலாம்.''

''உதட்டளவில் சொல்லுகிறீர்களே தவிர, மனப்பூர்வமாக நீங்கள் அழைக்கவில்லை.''

தன்னைப்பற்றித் தான் புரிந்து கொள்ளாததை அவன் புரிந்து கொண்டு விட்டதுபோல் ஓர் உணர்ச்சி அவளுக்கு உண்டாயிற்று. ''மனப்பூர்வமாகத்தான் அழைக்கிறேன்'' என்று கூறும்போதே தன் முகம் சிவப்பதையும், வெட்கத்தால் தன் தலை சற்றுத் தாழ்வதையும் அவள் உணர்ந்தாள்.

''அப்படியானால் நான் பன்னிரண்டு மணிக்கு வந்து சேருகிறேன். வெளியே கொஞ்சம் வேலை இருக்கிறது. வரட்டுமா?'' என்று கைகூப்பி விடைபெற்றான் சுந்தரம்.

சாப்பாட்டைத் தயார் செய்து வைத்துக் கொண்டு சாரதா காத்திருந்தாள். மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகியும் அவன் வரவில்லை. ஒருவேளை அவன் ஹோட்டலில் சாப்பிட்டிருப்பானோ என்றும் எண்ணம் அவளுக்கு வேதனை அளித்தது. அவளுடைய சோற்றில் பங்கு கேட்டவன் அப்படிச் சாப்பிட்டிருக்க மாட்டான் என்று ஆறுதல் கொண்டாள். அவன் வராததால் அவளுக்கும் பசிக்கவில்லை. வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்து கொண்டிருந்தவள் அறையை விட்டு வெளியே வந்தாள்; பஸ்களும், கார்களும், சைக்கிள்களும் பாதசாரிகளுமாய்த் தெரு கலகலப்பாக இருந்தது.

திடீரென்று அவன் உருவம், தெருவின் எதிர்க்கரையில் தென்பட்டதும், சோர்ந்த அவள் மனம் சாந்தம் அடைந்தது. அவள் அவனைப் பார்த்த அதே சமயம் அவனும் அவளைக் கண்டு விட்டான். வலது கையை மேலே தூக்கித் தான் வருவதாகச் சைகை காட்டியவாறு, அவள் இருந்த திசையைப் பார்த்துக் கொண்டே அவன் நடைபாதையிலிருந்து தெருவில் மிக வேகமாக இறங்கினான்.

அப்போது, விரைவாக வந்துகொண்டிருந்த லாரி ஒன்று, டிரைவரின் நிதானத்துக்குக் கட்டுப் படாமல் சுந்தரத்தின்மீது மோதிக் கீச்சிட்டு நின்றது. சாரதாவின் தொண்டைக் குரல் வெளியே வருவதற்குள், லாரியடியில், ரத்த வெள்ளத்தில் நசுங்கிக் கிடந்தான் சுந்தரம்.

'சேவாசதன் அநாதை இல்ல'த்தில் தன் அறை ஜன்னலருகில் நின்று சாரதா வாயில் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்க வஸ்திரத்தைப் போர்வையாகப் போர்த்திச் செருகி முதுகுப் பக்கம் கைகளைக் கட்டிக் கொண்டு, உடலுக்கு வழிகாட்டுவது போல் முன் நீண்ட மூக்குடன், தரையில் விழப் போகிறவன் போல் சற்றே கூனலாய், எதையும் பாராத அசிரத்தையான பார்வையுடன் வேகமாக நடந்து வருகிற சுந்தரத்தின் உருவம் 'காம்பவுண்டு' வாயிலைக் கடந்து வருவதை அவள் கண்டாள். வாயிலைக் கடந்து, வரிசை அறைகளைத் தாண்டிப் படிகள் ஏறி, அவளுடைய அறையே குறியாக அவன் வருவதை அவள் உணர்ந்தாள்.

''சாரதா...!''

குரலைக் கேட்டு அவள் திரும்பினாள். 'இல்லத்தின்' சக ஆசிரியை மாலா எதிரில் வந்து நின்றாள்.

''சாரதா! நீங்களே இப்படி மனத் தளர்ச்சிக்கு இடம் தரலாமா? சுந்தரம் இங்கே வந்திருக்கவே வேண்டாம். உயிரை இழப்பதற்காகத்தான் அவர் பிரயாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தார் என்று தோன்றுகிறது. அவருடைய துர்மரணம் எங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது; நினைத்தாலே பயமாக இருக்கிறது. விதி என்று இதைத்தான் சொல்லுகிறார்களோ, என்னவோ? ஆனால் அதற்காக நீங்கள் சாப்பிடாமல், இல்லத்தைக் கவனிக்காமலிருந்தால்...?''

''மாலா! உனக்குப் புரியாது. எனக்கே புரியவில்லையே, உனக்கு எப்படிப் புரியும் !''

அவள் கண்களில் நீர் பெருகுவதைக் கண்ட மாலா, ''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்றாள்.

''மாலா! அவர் இங்கே வரும்வரை நான் கன்னியாக இருந்தேன்! அவர் போனதும் நான் விதவை ஆகிவிட்டேன்!''

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.


வெற்றியோ தோல்வியோ
அக்கறையில்லை
—அங்கே நம்மை
உற்சாக மூட்டுவதற்கு
டீ V இருக்கும் வரை!
ஆடுபவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் நல்ல சேவை செய்கிறேன்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon